ஓம் பரப்பிரம்மணே நம:

ஆநந்தகுணபோதினி

அறிவை விளக்கி, உற்சாகத்தைப்பெருக்கி, ஆநந்தத்தைத் தரவல்லதான அநுபவ விநோத ஞான கலா விலாஸங்கள் நிறைந்திலங்கும் அமிர்தச் சுவையுள்ள மாதப் பத்திரிகை.

பத்திராசிரியர் :—திரிசிரபுரம் - எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடு.

" எண்ணிய எண்ணியாங் கெய்துப ; எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்." (திருக்குறள்.)

கமலம்-3.	சென்னை: விபவ௵ வைகாசி௴ 1௳	இதழ்-26.
Vol. 3.	1928-ம்௵ மே௴ 14௳	No. 26.

ஆநந்த  தரிசனம்

நாவினால்நவின் றின்பமெய்தினேன்
மேவினேனவன் பொன்னடி மெய்ம்மையே.

" தேருங்கால் தேவனொருவனே யென்றுரைப்பர் " ஆரும் அறியார் அவன் பெருமை யென்று சொல்லிப் பெரியோர்கள் பகவானுடைய பாத பத்மங்களையே துணையாக நம்பி ஸதா தியானம் செய்கின்றனர். எவனுக்குக் கடவுளிடம் பக்தியிருக்கிறதோ அவனே ஸர்வோத்தமன் ; அவனே அதிர்ஷ்ட வான். எத்தனை கோடி ஜன்மங்களெடுத்தாலும் ஸம்மதம் ; எத்தனை அற்ப மான புழுக்களாய்ப் பிறந்தாலும் ஸம்மதமே. ஹே ஜெகதீசா ! எல்லா ஜன்மங்களிலும் எல்லாக் காலங்களிலும் உன்னுடைய கமலத் திருவடிகளில் மட்டும் என்னுடைய கருத்திருந்தாற் போதும் என்று பக்தசிரோமணிகள் கூறுகின்றனர். மாயை விலகுவதற்கு பரமாத்மாவினுடைய பாதத்தையன்றி வேறு கதி கிடையாது. ஜனன மரண துக்கத்தினின்று விடுதலையடைவ தற்கு யாரை அனுஸரிக்கவேண்டும் ? பகவானையன்றோ ? அவரடி வணங்காச் சிரம் வியர்த்தமானதென்று பாடி யிருக்கின்றார்கள். இகத்திலும் பரத்திலும் சுகத்தை யடைந்து முக்தியைப் பெறுவதற்கு ஸாதனமாயுள்ள ஆதிமூர்த்தி யின் பாதபத்மங்களைப் பிரேமையுடன் ஸதா தியானிக்கக் கடவோம்.

*
* *

" அன்பே தகளியாய், ஆர்வமே நெய்யாக, இன்புருகு சிந்தை

யிடு திரியாய்''க் கொண்டு உருகி ஞானச்சுடர் விளக்கேற்றுதற்குப் பக்தியே பரம சாதனமாகும். பக்தி என்பது அன்பின் பெருக்கமாம். அன்பு என்பது ஒருவித பிரேமை. பிரேமையால் ஸகல காரியங்களும் அதிசீக்கிரம் முடியும். எத்தனை திரவியம் கொடுத்து ஒரு ஸ்திரீயை அன்னம் படைக்க ஏற்படுத்தினாலும் தாயைப்போ லாகுமோ? தாயின் அன்புக்கு மற்றவர் அன்பு ஈடாமா? காசுக்காகச் செய்யும் வேலையைவிட பிரீதியினாற் செய்யும் வேலை சிலாக்கியம். பிரீதி யென்பது கஷ்டங்களை யெல்லாம் ஒரு நொடியில் நிவர்த்தி செய்யும். மனதுக்கு ஆநந்தத்தை விளைக்கும். ஸகல காரியங்களையும் சித்தியாக்கும். பகவானிடம் பக்திசெய்வதே பேரானந்தமென்பதை முற்காலத்துப் பக்தசிரோமணிகள் நன்கு யறிந்துகொண்டனர். இப்போதும் உலகத்தில் பந்துக்களேனும் நேசர்களேனும் ஒருவரையொருவர் பிரிகையில் "என் ஞாபகம் இருக்கட்டும், பக்ஷம் மறக்கவேண்டாம்" என்கிறார்கள். பக்ஷம் பாராட்டினால் பூர்ணமான ஸந்தோஷம் உண்டாகும். இப்படியே தெய்வத்தினிடமு மாகையால், பகவானை பணத்தைக் கொடு, பாக்கியத்தைக் கொடு என்று வேண்டாமல், பக்தி மேன் மேலும் பெருகும்படி கிருபை செய்யுமாறு பிரார்த்திக்கவேண்டும்.

* *
*

"கண்ணுள்ளபோதே சாக்ஷி" என்பர். அதன் பொருள் நமக்குக் காணும் சங்கதி பூர்ணமாயிருக்கும்போதே உலகத்திலுள்ள ஒவ்வொரு அருமையான பொருளையும் பார்க்க வேண்டுமென்பது. விருத்தனாகிக் கண் தெரியாமல் தடியால் தட்டித் தடவிக்கொண்டு நடந்துபோகும்போது பற்பல க்ஷேத்திரங்களையும் தரிசிக்க ஆசைப் படுவதில் என்ன பிரயோஜனம்? அவ்வாறே ஜீவனாகிய ரத்நம் சரீரத்தில் பிரகாசித்துக் கொண்டிருக்கும் போதே கடவுளைத் தியானித்து திவ்ய ஞானத்தை யடையவேண்டும். நாளை தியானிப்போம்; இன்னும் ஒரு வருஷம் கழித்து ஞான நூல்களை வாசிப்போமென்று காலஹரணம் செய்வது அவிவேகிகளின் தன்மை. ஜீவரத்நமானது எந்த நிமிஷத்தில் எமனென்னும் கள்வனால் அபகரிக்கப்படுமோ? யார் கண்டார்? ஆகவே, அந்த ஜீவன் இருக்கும்போதே மோக்ஷாபேக்ஷையைக் கொள்ளவேண்டும். முக்தி யென்பது பந்தத்தினின்று விடுபடுவதைக் குறிக்கிறது. எத்தனை காலம் நம்முடைய மனம் உலக ஆசைகளில் பந்தப்பட்டிருக்கிறதோ அத்தனை காலம் வரையில் நமக்கு உண்மையான ஸுகம் கிடைப்பதரிது. வெண்ணெயை வைத்துக் கொண்டு நெய்யில்லையே யென்றழுவது போல், திடசரீரத்தையும், உத்ஸாக மனதையும், இளம் பிராயத்தையும் வைத்துக்கொண்டு தெய்வத்தைத் தியானித்துச் சுகமடையாமல், இன்னும் ஓராண்டு கழியட்டும், ஈராண்டு செல்லட்டும் என்று விருதா காலம் போக்குவது நன்மையாமா? நெருப்பு சேலையிற் பற்றியவுடனே அதை யணைக்கவேண்டும். அதைவிட்டு அணைக்கலாமா? வேண்டாமா? இப்போது அணைக்கலாமா? பிறகு அணைக்கலாமாவென்று ஆலோசிப்பது பெரும் பிசகன்றோ? பாபம் என்னும் தீ பற்றி நமது ஜீவன் தபிக்கையில் உலக சுகமாகிய ஸங்கீதம் கேட்க நேரம் ஏது? உடனே ஞானத்தை யடைந்து விமுக்தனாவதன்றோ விவேகம்.

பள்ளிக்கூடம் அதிக சந்தோஷம் அளிப்பதும், அளிக்காததும், வீட்டில் பிள்ளைகளுக்கு இருக்கும் சந்தோஷத்தைப் பொறுத்தது.

"தூரபிமானமே துக்கத்துக்கிடம்" பகவானிடம் வைக்கும் அபிமானம் ஒன்று நீங்கலாக, மற்றவர்களிடம் பாராட்டும் அபிமானமெல்லாம் துயரத்திற்கிடமே. அவ்வபிமானம் தூரபிமானமாம். அபிமானம் எப்படி உண்டாகிறது? 'நம்முடையது' என்று நினைப்பதாலாம். எந்த நிமிஷத்தில் நம்முடையதல்லவென்று நினைக்கிறோமோ அந்த நிமிஷத்திலேயே அப்பொருளின் மீதுள்ள அபிமானம் தொலைந்து போகிறது. உதாரணமாக, ஒரு பசு மாட்டை வாங்கி எவ்வளவோ பக்ஷமாய்ப் பாதுகாக்குகிறோம். அது இளைத்தால் பரமதுக்கம் கொள்கிறோம். அந்த மாட்டினிடத்துள்ள அபிமானத்தால் அதன் சார்பான சுகதுக்கங்களையும் அனுபவிக்கிறோம். இவ்வளவு பிரீதி வைத்து வளர்த்த மாட்டைப் பிறகு விற்றுவிட்டால் உடனே அதனிடத்து வைத்த அன்பெல்லாம் போய்விடுகிறது. பிறகு ஒரு பிடி வைக்கோல் கூட அதற்கு இடச் சம்மதியோம். ஏன் இத்தனை வெறுப்பு? முன்னிருந்த அவ்வளவு அபிமானமும் எங்கே போயிற்று? அது நம்முடையதல்லவென்று நினைத்தால் அபிமானம் மறைந்துவிட்டது. இப்பொழுது சுகதுக்கங்களுக்குக் காரணம் அபிமானம் என்றும், அபிமானத்துக்கு நம்முடையதென்று நினைப்பதே காரணமென்றும் அறிந்து கொள்கிறோம். எனவே, அபிமானமுள்ளவரை சுகதுக்கங்கள் நீங்கா.

* * *

"பக்தி செய்வது எப்படி?" யெனில், பகவானிடம் பூர்ணமான விசுவாஸம் கொண்டு அவருக்குத் தான் உண்ணும் போஜனத்தை நிவேதனம் செய்வதும், தான் உடுத்திக்கொள்ளும் வஸ்திரம்போல் மூர்த்திக்கு வாங்கித் தரிப்பதும், தூபதீபம் காட்டுவதும், விசிறுவதும் பக்தி செய்யும் முறைமை. இதனால் பகவானுக்குப் பசி உண்டாயிற்றென்றும், அவருக்குப் பக்தன் அன்னம் படைக்கிறானென்றும், இப்படி நினைப்பதும் செய்வதும் மூடபக்தியன்றோ வென்று வினவுவதும் நியாயமா? தான் அரசனிடம் வைத்துள்ள மரியாதையைக் காட்டவேண்டி ஆசிரதன் எலுமிச்சம் பழம் கொண்டு போகிறான். அரசனா எலுமிச்சம்பழம் வேண்டுமென்று அழுகிறான்? பகவானை உத்தேசித்துப் பத்து பெயர்கட்கு அன்னம் போடுவதின் தாத்பரியம் யாது? பத்து பேர்களிடமும் பகவான் விளங்குகிறாரென்று நிச்சயித்து, அவர்களுக்கு அன்னம் அளிப்பதால் ஈசுவரனுக்குத் திருப்தி யுண்டாகி அனுக்கிரகம் செய்வாரென்ற கருத்தினால் தான். தெய்வம் புருஷ ரூபமாய் விளங்குகிறதென்பது மனுஷ்யர்களின் கொள்கை. மனுஷ்யன் அணியும் ஆபரணங்களைத் தெய்வத்துக் கணிந்து திருப்திபடுவது ஒருவித பக்தியேயன்றி வேறல்ல. பக்தியென்பது முக்திக்கு ஸாதகமான வழி.

* * *

"நான்கு குணங்கள்" ஆசுவலாயினர் என்பவர் பரமேஷ்டியை அதாவது பிரம்மாவை நோக்கித் தமக்குப் பிரம்ம வித்தையைக் கற்பிக்கும்படி கேட்டார். இந்த பிரம்ம வித்தையைக் கற்குமுன் அவர் நான்கு குணங்களைக் கிரகித்தார். அவையாவன :—(1) விவேகம் (2) வைராக்கியம் (3) சமாதானம், சிந்தை முதலியன (4) முமுக்ஷுத்வம். இதில் விவேகமாவது இன்னது உண்மை, இன்னது பொய், இது நித்யம், இது அநித்யம் என்று பகுத்தறிவது. இந்த விவேகத்தை யடையாதவர் கடைத்தேறமாட்டார்.

விலையை வேலையால் மதித்திடுக. மதிப்பை உழைப்பால் அறிக.

இவர்கட்கு உண்டான சந்தேகமும் தீராது. தேகம் அநித்தியம், ஆத்மா நித்தியம் என்பதை முதலில் தெரிந்துகொள்ளாதவன் பிரம்ம வித்தையைக் கற்கமுடியாது. ஆதலின் நித்திய வஸ்து ஆத்மா, அநித்திய வஸ்து சரீரம் என்பது மனதில் உறுதியாகக்கொண்டு பிறகு ஞானநூல்களைக் கற்க வேண்டும். அதற்காக விவேகம் அவசியம். (2) **வைராக்கியம்** என்பது இப்போதாகிலும் இனிமேலாகிலும் அனுபவிக்கக்கூடிய இன்பத்தில் மனதைச் செல்லவிடாதிருத்தல். இன்பத்தை அலக்ஷியம் செய்தல், ஆசையை வெறுத்தல், இதுதான் வைராக்கியமெனப்படும். (3) **சமாதானம்** என்பது மனதை அடக்கி யாள்வது. ஒரு கெட்ட காரியத்தைச் செய்ய மனம் விரும்பினால் உடனே அதை இடித்துப்பிடித்து அக்காரியத்தில் பிரவேசியாது சமாதானமா யிருத்தல்; ஐம்பொறிகளையும் அடக்கல். பலனைக் கோரி கர்மங்களைச் செய்யாதிருத்தல். திதீக்ஷை அதாவது எதையும் ஸகித்தல். எவ்வித கஷ்டம் நேர்ந்தாலும் ஈசுவராக்ஞை யென்று பொறுமையோ டிருத்தல். சமாதானம் அதாவது **ஒரே வஸ்துவில் நம்முடைய மனதை வெகு நாழிகைவரை லயித்திருக்கச் செய்தல்.** இந்த சக்தி அவசியமானது. இதை நாளடைவில் ஒவ்வொருவரும் அடையவேண்டும். **சிரத்தை**—அதாவது ஆசாரியனுடைய சொல்லிலும் வேதத்திலும் நம்பிக்கை கொள்ளல். (4) **முமுக்ஷுத்வம்** என்பது முக்தியடைய ஆசை கொள்ளல். இந்நான்கு குணங்களையும் அடைந்த பிறகே பிரம்ம வித்தையைக் கற்கவேண்டும்.

*
* *

"**உடுபதிவதனி**" யென்று மகாராஷ்டிர பாஷையில் ஜகதம்பிகையைப் பிரார்த்திக்கிற வழக்க முண்டு. 'உடுபதி' என்றால் சந்திரன். ஜகதம்பிகைக்கு 'சந்திரவதனி' என்ற பெயர் தகும். சந்திரன் அழகுக்கும் காந்திக்கும் மாத்திரம் பிரஸித்திபெற்றவனென் றெண்ண வேண்டாம். அவனுடைய கிரணங்கள் வெகு குளிர்ச்சியைத் தருகின்றன. அதுபோல் அம்பிகையைத் தரிசிக்கும் பக்தர்களின் மனம் தக்ஷணமே குளிர்ந்து ஸகல கவலைகளும் நீங்குகின்றன. அதிக குளிர்ச்சியால் ஜலம் பனிக்கட்டியாவது போல் அங்குமிங்கும் ஓடி யலையும் மனம் அம்பிகா தரிசனத்தால் பனிக்கட்டி போலுறைந்து ஸன்மார்க்கத்தையே பற்றுகிறது. ஆதலின் 'உடுபதிவதனி' யென்று அடிக்கடி அம்பிகையைப் போற்றுவது மகாராஷ்டிரர்களின் வழக்கம்.

*
* *

"**உலகம் மெய்யா பொய்யா?**" ஒரு கண்ணாடியில் நம்முடைய முகத்தைப் பார்க்கிறோம், அதை உண்மையோ? நம்முடைய முகமா நம்மெதிரில் நிற்கிறது? முகத்தின் பிரதிபிம்பமே தென்படுகிறது. பிரதிபிம்பம் உண்மையோ? அல்ல. கண்ணாடியை நேரில் பிடிக்கும் வரை பிரதிபிம்பம் தெரியும். கண்ணாடியை எடுத்துவிட்டால் பிரதி பிம்பமும் மறைந்து போம். ஆகவே, பிரதி பிம்பம் உண்மையா? பொய்யா? அது கண்ணுக்குத் தெரிவதால் உண்மையே. அது கைக்கு அகப்படாமல் கண்ணாடி மறைந்த தக்ஷணம் மறைந்துபோவதால் பொய்யே. அதைப்போல் தான் இவ்வுலகமும் என்று பெரியோர் கூறுகின்றனர்.

ஒரு தேசம் தாழ்ந்த நிலையிலிருக்கிற தென்பதற்காக அதன் ஆண் பெண்களை அவமதிக்க யாரும் முன்வரவேண்டாம்.—(டாக்டர் பராஞ்சபே)

"பகவத் தரிசனம் பாவ விமோசனம்." பகவானைத் தரிசிக்க வேண்டுமானால் அந்தர் திருஷ்டி அவசியம். நமது கண்கள் எப்போதும் வெளியேயிருக்கும் பொருள்களை நோக்குவதால் உலக சுகமே லக்ஷியமாகிறது. நிலையற்ற அச்சுகத்தை வெறுத்து நிரந்தரமான ஆத்மாநந்தத்தை நாம் அடைய வேண்டுமாயின் அடிக்கடி மனம், புத்தி, ஜீவன் இவைகளைப்பற்றி விசாரிக்க வேண்டும். அகண்டபரிபூரணராகிய கடவுளை நாம் எப்படி உபாஸிப்பது என்ற ஸந்தேக முண்டாரும். அதற்காகப் பகவான் பற்பல மூர்த்திகளாய் அவதரித்து எல்லோரும் போற்றும்படி திவ்ய ஸ்தலங்கள்தோறும் எழுந்தருளி யிருக்கிறார். அவரைத் தரிசியாமல் நாம் இருக்கலாமோ? மகா விவேகிகளாகிய முன்னோர்கள் பலவித ஸ்தலங்களில் மூர்த்திகளைப் பிரதிஷ்டை செய்து உத்ஸவாதிகளை நடத்தினார்கள். அக்கால முதல் இக்காலம் வரை மேற்கண்ட உத்ஸவங்கள் நடந்து வருகின்றன. உதாரணமாக, காஞ்சீபுரத்தில் கருடோத்ஸவம், ஸ்ரீரங்கத்தில் வைகுந்த ஏகாதசி விசேஷம், திருவண்ணாமலையில் கார்த்திகை தீப வைபவம், சிதம்பரத்தில் ஆருத்திரா தரிசனம் ஆகிய இவை வருஷமொரு முறை நடந்தாலும், அநேக ஜனங்களின் சரீரத்தையும், மனதையும் இழுத்து பகவத்பக்தி செய்யும்படி கற்பிக்கின்றன. ஈசுவரனுடைய இவ்வுத்ஸவாதிகளால் மனிதருக்குப் பக்தியும் ஞானமும் அடிக்கடி யுண்டாகின்றன வென்பதில் தடையென்ன? மனத்தை முதலில் நல்ல கர்மங்களில் பிரவர்த்திக்கச் செய்து பிறகு ஒரே இடமாகிய பகவானுடைய பாதத்தில் நிறுத்தி வசமாக்குவது நன்று.

மாசில்வீணையுமாலைமதியமும்
வீசுதென்றலும்வீங்கிளவேனிலு
மூசுவண்டறைபொய்கையும்போன்றதே
ஈசனெந்தையிணையடிநீழலே.

தனியே சுகிக்கக் கற்றுக்கோள்.

தன்னுள்ளேயே சமாதான மில்லாவிட்டால் அதை வேறெங்கே காண முடியும்? தனித்திருக்கையிலேயே பயப்படுபவன் சத்துருவின் முன்னே தைரியம் கோள்வதெப்படி? தனியே உட்கார்ந்து சிந்திப்பதில் சுகமடையாதவன் பிறருடன் சேர்வதால் மட்டும் எப்படி துக்கத்தைப் போக்குவான்? தான் உறுதிப்பாடடையத் தனக்குள்ளே எதையும் காணாதவன் வேறெப் பக்கமும் நித்திய சுகமடைய முடியாது. வெளியே ஏமாறுதலும் அழிவும் மோசமும் இருக்க, தன்னுள்ளே உறுதியும் சுகமும் ஆசீர்வாதமு மிருக்கின்றன. ஆன்மா சம்பூர்ணமானது. அதற்கு எக்காலமும் குறைவில்லை. உனது உள்ளமே தான் உன் இன்பத்தின் சாஸ்வத வாசஸ்தலம். உன்னுள்ளிருக்கும் ஒப்பற்ற செல்வத்தை யடைந்து கோண்டு பிறரை எதிர்பாராதிரு.

ஆநந்தகுணபோதினி

விபவ௵ வைகாசி௴ 1௳

ஏழ்மையின் ஏக்கத்திற்கு எதிர்ப்பு.

ஆகுங் காய் பிஞ்சிலே தெரியும். வாழ்வதும் தாழ்வதும் அவரவர் குணத்தளவிலே. சிக்கனமும் செலவிடுவதில் நிதானமுமே சீரான வாழ்க்கைக்கு சிந்தாமணி. அதற்கேற்பவே எழுவதும் விழுவதுமாம். அதிர்ஷ்டத்திற்குத் தக்கபடி செல்வம் அமையுமென்பர். சேருகிற காலத்தில் எவ்வண்ணமும் சேருமென்பார். அதிர்ஷ்டமும் 'ஆகிற கால'மும் இனி—வரஇருப்பதை எவர் கண்டார்? வருமோ—இல்லையோ—யாதோ? மானிட வாழ்வில் ஒருசில போது சட்டென்று ஒருவித மின்னொளி தோற்றுவதுண்டு. அது கண்டு அத்தருணம் பயன் கொள்ள முந்துவார்க்கே எதுவும் வாய்த்திடும்; சித்திதரும். அதனை அச்சமயம் தவறவிட்டோர் அப்பால் தேரூர். அவ்வொளியும் பின்பு காணூர். ஏழ்மையை எவ்வாறு எதிர்ப்பது என்பது வினு?

தபாலாபீஸ் ஐந்து வருடச் சீட்டு.	
5-வருஷ வட்டியுடன்	முதலில் தரும் தொகை.
ரூ. 10	ரூ. 8
ரூ. 20	ரூ. 16
ரூ. 50	ரூ. 40
ரூ. 10J	ரூ. 80
ரூ. 500	ரூ. 400
ரூ. 1000	ரூ. 800

(1) எதிர்பட்ட தருணத்தை—மின்னொளியை எவ்வகையிலும் பின்பற்றிக்கொள்க. (2) எஜமானனை எதிலும் நம்பிக்கொள்க. (விசுவாச பக்தியுள்ள நம்பிக்கையாளனை எஜமானன் கைவிடான். அவன் கைவிடினும் 'அவர்' (கடவுள்) காப்பார். (3) சலியா முயற்சியில் நித்தமும் உழைத்துச்செல்க. (4) ஒரு நிமிஷமும் வீண் போது போக்காத விரதம் கொள்க. (5) ஒரு தொழிலையே, ஒரு ஜீவனத்தையே நம்பிவிடாது இரண்டு தொழிலைத் தொட்டுக்கொள்க. (6) மனதில் ஒரு ரோசத்தையும், தன்மதிப்பையும் வைத்துக்கொள்க. (7) பிறரின் சோற்றுக்குப் பாரமாய் ஏங்கலாகாதென்ற வைராக்கியத்தைக்கொள்க. (8) மற்றவரைப்போல் தானும் ஒரு கௌரவ மனிதனுய்

வாழவேண்டுமென்று ஆவல் கொள்க. (9) தன் கையே மேலாக, மற்றவர் தனக்கு உள்ளாக, அவ்விதமாய் மேன்மைப்படத் திருஷ்டி கொள்க. (10) தன் ஜீவனத்தை என்றைக்கும் காப்பாற் றிக்கொள்க. (11) ஒரு பணத்துடன் இன்னொரு பணம் சேர வழிகொள்க. (12) தெய்வபலத்தை முக்கியமாய் நம்பிக்கொள்க. ஆக இந்தப் பன்னிரு வழிகளாலும் "ஏழ்மை எமனை" எய்த்து எதிர்த்து ஓட்டிவிடலாம். இன்னும் இவ்வித எளிதான மார்க்கங் கள் எத்தனையோ உண்டு. ஏக்கத்தை எதிர்ப்பது புதிய ஊக்கமாம். அந்த ஊக்கத்துக்கு உயிர்த்துணை உறுதி நெஞ்சாம். உறுதித்திட மிருப்பின் எங்கெங்கும் வெற்றியே. சென்றவிட மெல்லாம் சிறப்பே.

என்றுமே ஆறு ஓடிக்கொண்டிருப்பது கூடுமோ? இன்று காணும் வருமானம் என்றைக்குமே நிச்சயம் பெறுமோ? வரவு சுறுங்கிக் காய்ந்த விறகு ஆனோர் பல பல பேர் அன்றோ? கட்டிய வீடு கைவசமானது எத்தனை பேருக்கு? விற்க நேர்ந்த விதியின் விபரீதங்கள் எவ்வளவோ? பதினாயிரம் ரூபாய் சொத்து என்று எங்கும் பரவிய பேர். செத்துவிட்டபோது தெரிகிறது செட்டி யார் வாழ்வு! சொத்துக்கும் மிஞ்சிய கடனென்று அப்போதுதான் கோழி கூவுகிறது! அநேக வீடுகளுடன் விளங்கியவரது அந்திய காலத்து ஐவேஜி ஐம்பது ரூபாயுடன் முடிகிறது. எல்லாம் பெற்று இருந்து ஆண்டு கண்டவர்பாடே இவ்வாறு கலக்கமானால், இனி இல்லாதவரின் கூப்பாடு சொல்லாமலே தெரியாதா?

என்றைக்குமே அழுக்குத் துணியையும், அங்கங்கே கிழிந்த அவலக்ஷணச் சொக்காயையுங் கொண்டுள்ள ஒருவன், விரைவில் ஒரு ஐம்பது அறுபது ரூபாய்க்கு ஒருமிக்க உடுப்புகள் வாங்கி, அது முதல் தக்க உடையும் தகுந்த சீருமாய் இருக்கப் போவதாக ஒய்யாரம் பேசுவானாகில், அது என்றைக்குமே அவனுக்கு சித்திக்கப் போவதில்லை. அவ்விதமின்றிக் கிடைத்த காலங்களிலெல்லாம் சிறு கச் சிறுக உடுபாவனைகளை வாங்குவோன் எப்பொழுதுக்குமே தக்க உடையும் ஒழுங்குமாக நிற்பது கூடும். செல்வம் சேர்க்கும் முறை யும் இவ்விதமே. நாலாறு கூடினால் பாலாறு. பல துளி பெரு வெள்ளம். சிறுகச் சிறுகச் சேர்த்தால் சீமானாகிவிடலாம். சேர்த்தால் தான் ஆகலாம். சேர்க்கப்போவதாகச் சொன்னால்மட்டும் ஆகாது. அது ஏமாறிப்போன கோணல் தான். ஒரு காலணா சேர்க்கப் பழகி னால், பின்பு ஒன்பது அணா சேர்க்க அறிந்துகொள்ளலாம். நித்த நித்தமும் நீ எடுத்து வைத்தது சில சில செங்கல்லு. ஆனாலோ, முடிவில் அது ஒரு பெரும்வீடு ஆகக்கூடிவிடுகிறது! ஒவ்வொரு படி யாக ஏறினால் மேல்மாடிக்குப் போய்விடலாம். வாழ்வின் இரகசிய மும் இப்படியே. செல்வம் சேர்க்கும் சூட்சுமமும் இவ்விதமேதான்.

சிக்கனம் என்றால் ஒன்றையே என்றைக்குமே துவைத்துக் கட்டுவ தென்பதல்ல, ஒரு காசு எண்ணெயில் அரையணா வாழைக்

காயை வறுப்பதல்ல. வந்த விருந்துக்கு சிடுசிடுப்பதல்ல. தித்திக்கவே பேசி வாய் உபசாரத்தில் அனுப்பிவிடுவதல்ல. மற்றவர் பசி கண்டும் ஒதுங்குவதல்ல. தெய்வப் பிரீதியான முறையில், மனசாக்ஷி சம்மதித்த நன்னெறியில் பிறருக்கும் தன் சக்தியளவில் இட்டு, தானும் புசித்து நல்லதாக நாலு காசு வரவுக்குமீறுத நலமான வழியில் சேர்த்து வைப்பதே சிக்கனம் என்பதின் சிறப்பாகும். இருட்டதை இன்பமாய் இடுக, மனமுவந்து பரிமாறுக. அதுவே பெரிய விருந்து. அன்பும் ஆதரவும் கூடிய சிக்கனத்துக்கு கடவுளின் ஆசி எப்போதுமுண்டு.

செல்வம் சேர்க்கும் வழியில் வட்டியாசை முதலைக் கெடுப்பது ஒரு பெரும் வீழ்ச்சி. நம்பித் தந்து நடுவில் இழந்தோர் பலர். சேர்த்த சிறு மிச்சத்தையும் பாங்கியில் இடுவது பத்திரமான பக்குவம். இடையில் முறிந்து கெடாத பாங்கி தபால் ஆபீஸ் ஸேவிங்ஸ் பாங்கி தான். அதில் சேர்த்து வைக்கலாம். ஆனல், அடிக்கடி வாங்கிவிட மனது தூண்டும். பிறகு முழுத்தொகைக்கும் செலவு வந்து பெற்றுக்கொள்ள வற்புறுத்திவிடும். ஆதலின், இதனிலும் சிறந்த வேறொரு வழியை நாடுவது மேல். அது தபால் ஆபீஸில் ஐந்து வருஷச் சிட்டின்மீது வட்டிக்கு விடுவதே. அது ஒரு ஏழைக்கு நல்ல வழி. காசோடு காசு கருத்தாய்ச் சேரவும் கூடும். ரூபாய் 8—16—40—80—400—800 என்று 8—ரூபாய் முதல் 800 ரூபாய் வரையிலும் செலுத்தலாம். ஐம்பது வருஷத்திற்குப் பிறகு இத்தொகைக்குக் கிடைக்கும் வட்டியும் முதலும் இங்குள்ள குறிப்பில் கண்டுகொள்க. வட்டி மிகச் சொற்பமென்ற நினைவு வேண்டாம். விவாகத்திற்கு முன்னறே பள்ளியறை சிங்காரிக்கும் சிந்திப்பு வேண்டாம். முதலில் இந்த வழியிலேனும் ஒரு சிறு தொகை சேர அதிர்ஷ்டம் கிடைக்கட்டும். வந்ததெல்லாம் செலவே என்ற நிலையில், ஒரு காசு மிச்சப்படுத்துவதும் கஷ்டமாயுள்ள கண் கலங்கும் கடின வாழ்வில், இந்த அற்பமான சிறு சங்கிக்கேனும் ஒரு சின்னஞ்சிறு தொகை சேர்க்க நல்ல புத்தியும் திடமனதும் உண்டாகட்டும். இப்படி உண்டாகுமானல் இதுவே நூற்றுக்கு நூறு வட்டி கிடைத்தது போலாம். இதில் நாளடைவில் சேர்த்துக்கொண்டே சென்று, பெருந்தொகை ஆயிரம் கூடியபின்பு மகாராஜனுக உயர்ந்த வட்டிக்கு வேறிடத்தில் அத்தொகையைத் தரலாம். அது பின்னுக்கு நடக்கும் கல்யாணம். இப்போது

ரூபா 40-க்கு வட்டி	
செலுத்தியது	40-0-0
முதல் வருஷம்	40-0-0
13-வது மீ	41-4-9
15-வது மீ	41-11-6
18-வது மீ	42-3-0
21-வது மீ	42-10-6
2-ம் வருஷம்	43-2-0
27-வது மீ	43-9-6
30-வது மீ	44-1-0
33-வது மீ	44-8-6
3-ம் வருஷம்	45-0-0
39-வது மீ	45-8-9
42-வது மீ	46-1-6
45-வது மீ	46-10-3
4-ம் வருஷம்	47-3-0
51-வது மீ	47-14-3
54-வது மீ	48-9-6
57-வது மீ	49-4-9
5-ம் வருஷம்	50-0-0

அந்த மனக்கோட்டை வேண்டாம். முதலில் எட்டோ, பதினாறோ, நாற்பதோ ரூபாய் சேர்த்துத் தபாலாபீஸ் ஐந்து வருஷச் சிட்டில் வட்டிக்கு இட வழி—கதி—வரவிலே மிச்சம்—உண்டாமென்று பார்க்கவேண்டும். முதலில் ரூபா எட்டுக்கு எட்டுக. பின் பதினாறுக்குச் செல்லுக. அப்பால் நாற்பதுக்கும் அதற்கு மேலும் அவரவர் அதிஷ்டம் போல் தாவுக. இது ஏதுமில்லாத ஏழைக்கே எழுதிய வரி.

ரூபா 80-க்கு வட்டி			
செலுத்தியது	80	0	0
முதல் வருஷம்	80	0	0
13-வது மீ	82	8	0
15-வது மீ	83	7	0
18-வது மீ	84	6	0
21-வது மீ	85	5	0
2-ம் வருஷம்	86	4	0
27-வது மீ	87	3	0
30-வது மீ	88	2	0
33-வது மீ	89	1	0
3-ம் வருடம்	90	0	0
39-வது மீ	91	1	6
42-வது மீ	92	3	0
45-வது மீ	93	4	6
4-ம் வருடம்	94	6	0
51-வது மீ	95	12	6
54-வது மீ	97	3	0
57-வது மீ	98	9	6
5 ம் வருடம்	100	0	0

ஐந்து வருஷம் கழித்துத்தான் இந்தத் தொகையைப் பெறவேண்டுமென்றில்லை. எப்பொழுது வேண்டினும் எவ்வளவு காலம்வரையில் தபால் ஆபீஸில் அத்தொகை இருந்ததோ அந்தக் காலத்துக்குரிய வட்டியுடன் தனது தொகையைப் பெற்றுக்கொண்டுவிடலாம். இந்த விவரத்துக்கு ரூபா 40-க்கும், ரூ. 80-க்கும் கிடைக்கிற அந்தந்த காலவட்டி விவரங்களை இங்கு இரு கணக்கு விவரங்களில் குறிப்பிட்டிருக்கிறோம். இவ்விதமே 8—16—400—800 ரூபாய்களுக்கும். அததற்குரிய ஐந்து வருஷ சீட்டுகளின் பின்பக்கம் வட்டி விவரங்கள் யாவும் தெரிவிக்கப்பட்டுள்ளன.

ஆனால், இவ்விதம் ஐந்து வருஷங்களுக்கு இடையில் வாங்கி விடக்கூடிய எண்ணம் ஒருபோதும் கொள்ளலாகாது. மனோ உறுதியுடன் வாங்காதிருக்கிற நிச்சய புத்தியும் இருக்கவேண்டும். அப்பொழுது தான் ரூபாயுடன் ரூபாய் சேரும். குழந்தைகளுக்கென்றும், பிற்காலத்து விவாகச் செலவுகளுக்கென்றும், ஒரு மொத்த தொகைகாண்பதற்கென்றும் கருதிச் சேர்க்கவேண்டும். எந்தத் தபால் ஆபீஸிலும் இதற்கான விண்ணப்ப பாரங்களும் விவரங்களும் கிடைக்கும். ஒவ்வொரு எட்டு ரூபாயும் முதல் 5-வருஷத்தில் 10-ரூபாயாகிறது. மறுபடியும் 5-வருஷம் வைத்தால் வட்டியுடன் 13-ரூபாயாகி விடுகிறது.

தபால் ஆபீஸில் எட்டு ரூபாயை அதற்குள்ள விண்ணப்ப பாரத்துடன் ***27—4—1928***-ல் செலுத்தினால், பத்து ரூபாய் மதிப்புள்ள "ஸர்டிபிகேட" என்னும் சீட்டில், செலுத்துபவர் பெயரும் விலாஸமும் குறித்து, ***27—3—1933***-ம் தேதியில் அந்தப் பத்து ரூபாயையும் பெறவேண்டியதென்று எழுதிக்கொடுக்கிறார்கள். இந்த 8-ரூபாயைப் போலவே மற்ற 16—40—400—800-ரூபாய்களையும் செலுத்தலாம். அந்தப் பணத்துக்குத் தகுந்த

ஐந்து வருஷ வட்டியுடன் கூடிய தொகைக்கு "ஸர்டிபிகேட்" சீட்டு கொடுக்கின்றனர். எந்தத் தேதியில் சேர்ந்தனரோ அதிலிருந்து ஐந்து வருஷங்கள் கணக்கிடப்படுகின்றன. பணத்துக்கு எவ்வித அச்சமும் இல்லை. முதலில் தபால் ஆபீஸ் சேவிங்க்ஸ் பாங்கியில் ஒன்று இரண்டு, ரூபாயாகச் சேர்த்து வந்து ஒரு குறித்த தொகை கூடியதும், அத்தொகையை இந்த ஐந்து வருஷச்சீட்டுக்கு மாற்றிக்கொள்ளலாம். ஐந்து வருஷங்கள் ஆனபிறகு அத்தொகையை வாங்கி விடாமல் தபாலாபீஸிலேயே வெகு காலத்துக்கு வைத்துவந்து வட்டிக்கு வட்டியாகப் பெருக்கிக் கொண்டே செல்லவேண்டும்.

எவ்வளவு வந்தும், ஸம்பாதித்தும், எல்லாம் செலவே ஆகி ஒரு காசு சேர்ப்பதற்கும் கஷ்டமாய் இருக்கிற நிலையினரே வெகு பேராவார். வரவு வந்து கொண்டிருக்கும் காலத்திலேயே ஒரு மிச்சம் சேர்க்காவிடில், நாளைக்கு எல்லாம் சுருங்கி விட்ட காலத்தில் நாட் கடலைக் கழிப்பது எவ்வாறு? பசிக்கும் வயிற்றுக்கு வழி எப்படி? இனி நோயும் பாயுமானால் திக்கு எவர்? கையில் நாலு பணம் சேர்த்திருந்தால் அது என்றைக்கும் ஒரு தைரியமாய் நெஞ்சைத் திடப்படுத்தித் தேற்றும். பந்துக்கள் சங்கதி தெரியாதா? எல்லாம் கையில் காசு இருந்தால் தான். செல்வவானொருவன் பாத்திரத்தை எச்சில்செய்து குடித்தாலும் அதை ஒரு எச்சிலாக எண்ணார். ஆனால், பணம் சேர்க்காத ஏழை யொருவன் தொட்ட பாத்திரத்தையோ ஜலத்தில் அவசியம் கழுவித்தான் எடுப்பார்கள். ஏழையை மதிப்பவர் எவர்? வா என்று அழைப்பவர் யார்? தங்களுடன் ஒட்டிச் சேர்ப்பது ஏது? ஏழையின் குழந்தை மாயக் குழந்தை! கடவுள் அதற்குத்தான் துணை.

ஆகவே, ஏதாவது ஒரு குறித்த தொகை ஆபத் ஸகாய நிதியாய், தைரியத்துக்கு ஒரு தூண்டுதலாய்க் கைவசம் எவ்வாறேனும் இருக்கப் பார்க்கவேண்டும். பலவித படிப்புப் போதனைகளைவிட இது தான் பெரிய படிப்புப் போதனை. ஏழையின் கஷ்டமும், திக்கற்ற நிலையும், உறவினர் பராமுகமும், அந்த ஏழயின் உள்ளம் அறிகிற படி எவரும அறியார். அந்த ஏழையின் கொதிக்கும் நெஞ்சு, தவிக்கும் நெஞ்சு—அந்த ஏழை ஒருவனுக்கே தெரியும். ஏழை செல்வவானாக வேண்டுமெனில், அவன் கலக்கமும் சோர்வும் ஒழிய வேண்டுமெனில், எவருக்கும் தலை வணங்காத—எந்த 'நாய்' வீட்டின் வாயிலையும் மிதியாத—எவரையும் கெஞ்சி வேண்டாத—ஒரு உயர்வுத் தன்மை—மேன்மை வேண்டுமெனில் கையில் நாலு பணம் இருக்கவேண்டும். அவ்விதம் இருந்தால்தான் எந்த மலை உச்சியில் இருப்போனும், எந்த ராமனும் கிருஷ்ணனும் நம்மைப்பற்றிக் கேவலமாக எந்த ஒரு வார்த்தையும் எதிர்த்துச் சொல்ல முடியாது.

நமது மானமும் காப்பாற்றப்படும். நமக்கு மதிப்பும் மிகும். நாமும் உலகத்தில் ஒரு தக்க மனிதனாய்க் காண்பித்துக் கொள்ளமுடியும். எல்லா வாழ்வுமே காசு சேர்ப்பதில் தான் இருக்கிறது செலவிடுவதில் இல்லை. செலவிட்டுப் பக்கிரியானவனை எவரும் மதியார், நாடார். சேர்த்து வைத்துப் பாஷா ஆனவனையே ஊரார் வருக வருக என்பார், தாங்குவார், வீற்றிரு என்று விருந்தும் வைப்பார்.

பதினாயிரம் சொத்தும், ஒன்பதினாயிரம் கடனும் இருக்கிற ஒரு செல்வவந்தனைவிட, எவ்வித கடனும் இன்றி ஒரு ஐநூற்றுச் சில்லரைக்கேனும் சேர்த்துவைத்திருப்பவனின் வாழ்வே மேல். இதுவே கடன் வாரண்டுகளும் எதுவும் வராத உயர்வான வாழ்வு. முதலில் ஒரு **500**-ரூபாய், பிறகு அதிலிருந்து பெருக்கி ஒரு **1000**-ரூபாய்வரை சேர்க்கப் பார்க்கவேண்டும். இவ்வளவுக்காவது தன் கையிலிருக்க ஒவ்வொருவரும் முயலவேண்டும். அதற்குமேல் சேருவது கடவுளின் கருணையைப் பொருத்ததாய் இருக்கட்டும். தனது முயற்சியை மட்டில் பொருத்ததாய் 500—1000—த்துக்காவது பிரயத்தனப்படட்டும். செல்வம் சேர்ப்பதற்கு முதலாவது பால பாடமாய் சுலபமாய் இருப்பது தபாலாபீஸின் ஐந்து வருஷ ரொக்கச்சீட்டில் அவ்வப்போது சிறுகச் சிறுகப் பணம் சேர்த்துவைக்கப் பார்ப்பதே. சேர்த்த பணத்திற்கு மோசம் வராதவழியும் அதுவே. இதற்கு மேலும் சேர்க்க அவா ஆகில், லைப் இன்சூரன்ஸ் கம்பெனியிலும் சேரலாம். அவையெல்லாம் பிறகு நடக்கும் சங்கதி. முதலில் நினைக்க—நடத்த—செய்ய—வேண்டிய விஷயம் இந்த ஐந்து வருஷச் சீட்டு தான். ஐந்து வருஷம் ஆனதும் தொகையை வாங்கிவிடாமல் அது அப்படியே வட்டியும் முதலுமாகச் சேர்ந்து பெருந்தொகையாகப் பார்ப்பதே பராக்கிரமமாம். அதுவே செல்வம் சேரும் வழியாம். அப்பொழுதுதான் மதிப்பாம். எல்லா துதிப்பும் சேர்த்து வைக்கப் பார்ப்போருக்கே தான். "ஏழ்மையின் ஏக்கத்திற்கு எதிர்ப்பு" எப்படி என்பது கேள்வி. அதற்கு இதுகாறும் கூறிவந்தவற்றை மீண்டும் ஒரு முறை வாசித்துப் பார்த்துக் கொள்வதேவிடை. இது பணக்காரனுக்கல்ல, ஏழைக்கே சொன்னது. ஏழைக்கே தெரிவித்த யோசனை. ஏழ்மையினின்றும் நீங்குக'. ஏழ்மையைத் தொலைத்து எஜமானத்துவம் பெறுக. ஏழையென்ற சாபம் ஒழிக. ஏழ்மைப் பிணி தொலைக. எவருக்குமே தலை நிமிர்ந்து ஆண்மகனாய் நின்றிடுக. கடவுளின் கருணையை என்றும் நம்புக. அவரது பாதமலரையே வாணாள் முற்றும் துணையாய்ப் பற்றுக. தர்ம நியாயமான சிக்கனத்தில் விளங்குக. இனி சேர்க்கப் பார்ப்பதிலேயே உன் கருத்து நிலை கொள்ளுவதாக. "முயலுக மேன்மேல்—முயலுக மேன்மேல்."

கவிதா விலாஸம்



முயலுக மேன்மேல்

Try Try Try again.

(ஸ்ரீமான் கா. ரா. நமச்சிவாய முதலியாரவர்கள்.)

முயலுக மேன்மேல், முயலுக மேன்மேல்
முயலுக முயலுக மேன்மேல் முயலுக ;
முதலிற் கருமம் முடியா தொழியினும்.
முயலுக மேன்மேல் முயலுக மேன்மேல்.

தொடுத்தநல் லூக்கம் சோர்வுறு வண்ணம்
அடுத்து முயன்றால் ஆகா வுளவோ ?
அஞ்சேல் ! வெற்றி அடைவது திண்ணம் ;
நெஞ்சே ! கருமம் நேருந் தனையும்
முயலுக மேன்மேல், முயலுக மேன்மேல்.

எடுத்தநற் கருமம் இரண்டொரு காலில்
அடுத்தடுத் தழியினும் அஞ்சேல் ! அஞ்சேல் ! !
முயன்றவக் கருமம் முடியுங் காறும்
முயலுக மேன்மேல் முயலுக மேன்மேல்.

நாடிக் கொண்டவந் நற்கரு மங்கள்
கூடா தொழியினும் குறைநமக் கிலையால் ;
எடுத்த கருமம் இடர்ப்படு மாயினும்
விடுத்ததை நெஞ்சே ! விதன முறாது
முயலுக மேன்மேல், முயலுக மேன்மேல்.

மனிதனானவன் மனிதரோடு கூடிவாழவேண்டியவனே யானாலும், சில காலம் தனிவாசம் பண்ணுதல் தன் ஆரோக்யத்துக்கு நன்மையான தென்றும் தன் நித்திய ஜீவியத்துக்கு உதவியான தென்றும் அறியவேண்டும்.

பின்னுங் கொண்டது பெருங்கா ரியமெனின்
முன்னி முயலுக ; முயலுக மேன்மேல்.
காலமே கருமம் முடிக்கும் கருவியாம்
ஏல அதனை எய்துங் காறும்
முயலுக மேன்மேல், முயலுக மேன்மேல்.

அரிய கருமமும் பெரிய கருமமும்
உரிமையின் முடித்த உத்தமப் பெரியோர்
முறையாற் பொறுமையால் முடித்தன ரதனுல்
முயலுக மேன்மேல், முயலுக மேன்மேல்.

நவீன கால ரமணிகள்.

படித்த பெண்களிற் சிலர் அதிர்ஷ்டவசத்தால் பெரிய உத்தியோகஸ்தர்கட்கு மனைவிகளாகி, அவர்கள் மூலமாய் தேசாந்திர ஸ்திரீகளுடைய சிநேகத்தை ஸம்பாதித்துத் தாங்களும் ஸ்வதந்திரிகளா யிருக்க ஆசைப்படுகிறார்கள். சில புருஷர்கள் தங்களுடைய மனைவிகள் ஆங்கிலேய துரை சானிகளோடு பேசுவதைக் கண்டு அகமகிழுகின்றனர். இது ஆரம்பத்தில் நன்மையைப்போல் தோன்றிப் பிறகு துன்பத்தை விளைக்கிறது. ஆங்கில மாதர்கள் தங்களுடைய தேசாசாரப்படி பரபுருஷர்களாகிய ஹிந்து கனவான்களுடன் கை குலுக்கி ஸம்பாஷிப்பது போல், ஹிந்து யுவதிகளும் வெள்ளைக்காரருடன் தாராளமாய்ப் பேசத் தொடங்குகின்றனர். இது நாளடைவில் சுராபானம், விபசாரம், ஆசார ஹீனம் முதலியவற்றை விளைத்து ஸ்வமதத்திலேயே பற்றில்லாமற் செய்துவிடுகின்றது. ஜாதிக்கட்டுப்பாடென்பது இக்காலத்தில் அபூர்வம். பெரியோர்கள் கண்டிக்கத் தொடங்கினுல், அதை விபரீதமாக நினைத்து அவர்கள் மீது குற்றம் சாட்ட எந்த 'ஸெக்ஷன்' சிலாக்யமென்று இந்தியன் பினல் கோட் சட்டத்தைத்தேடிப் பார்க்கிறார்கள்! இதுவும் காலத்தின் கோலம்!

மனைவிக்குப் பயந்தவன் என்கிறார்கள். இராக்ஷஸி போன்ற அறிவில்லா ஸ்திரீயை இல்லாளாக வாய்க்கப்பெற்ற யோக்கிய புருஷன் வேறு என்ன செய்வான்? அவனைப் போல் பட்டுப்பார்த்தால் தெரியும்.

சிறுமணித்திரள்

(51-ம் பக்கத் தொடர்ச்சி)

398. வீட்டுச்சண்டை யாகட்டும், நாட்டுச்சண்டை யாகட்டும்—அது மனிதனுடைய பெருமையைக் காட்டவில்லை. அது மனிதனுடைய சிறுமையைத்தான் காட்டுகின்றது. சண்டை போர் என்பது மனிதன் அடையப்பெறும் எண்ணிலாத் துன்பங்களுக்கு ஒரு அட்டவணையாகும்.

399. தான் பிழைப்பதற்கு மற்றவன் அழியவேண்டும், முன்னுக்கு வராமல் இருக்கவேண்டும் என்ற உபயோகமற்ற பொறாமைத் தத்துவத்திற்கு மனிதர்கள் தொண்டு செய்யும் வரையில் ஒவ்வொருவர் சொல்லுகிற கக்ஷியும் உண்மைதான். அவரவர்க்கு அதது நியாயமாக இருக்கும்தான்.

400. மனிதனுக்கு சக்தி குறையக் குறைய சந்தேகம் அதிகரிக்கும். சக்தியுள்ள யௌவன புருஷன் தன் மனைவியின் கற்பில் ஸம்சயிப்பதில்லை. ஆனால், ஆண்தத்துவச் சக்தியே யில்லாத கிழமாப் பிள்ளைக்கோ மிக்க பதிவிரதையான தன் மனைவியைச் சந்தேகித் துக்கொண்டிருப்பதே ஸதா தொழில். அதாவது நல்ல எண்ணம் அழிய, அழிய ஸந்தேகம் அதிகரிக்கும். **அன்பு அகல அகல, சந்தேகம் ஆளை விழுங்கும்.** சந்தேகம் என்ற சிறுமை கொண்ட உணர்ச்சியானது போர், சச்சரவு என்றபூதத்தைத் தீனி போட்டு வீட்டில் வைத்து வளர்த்து வரும்.

401. இயற்கையிலேயே வளர்ச்சியைக் காண்கிறோம். செயற்கையிலோ அழிவைக் காண்கிறோம். வீட்டுச் சண்டை என்பது அழிவுக்கு ஏதுகரம். ஒன்றாயிருந்த குடும்பங்கள் பல பலவாய்ப் பிரிந்து சிதரியதற்கு வீட்டுச்சண்டையே காரணம்.

402. தனக்குத்தானே சண்டை என்கிற அழிவைத் தேடிக்கொள்ளுபவன் தெள்ளிய அறிவுள்ளவனல்ல. தனக்குத் தெரியாமலே ஒருவன் தனக்கு அழிவைத் தேடிக்கொள்ளலாம். தெரிந்த பின்னும் தேடிக்கொள்வதென்றால், அந்த அறிவுக்குப் பொருள் உண்டா? அல்லது மனிதன் என்ற பட்டம்தான் தகுமா? எவ்விதமும் சமாதானமாயிருக்கும் நிலைமையில் தன் குடும்பத்தை அமைத்துக்கொண்டு போக முயலவேண்டும்.

403. செய்யும் எந்தக் காரியத்தின் பலனையும் நலனையும் தெரிந்து செய்யாதவன் மனிதன் அல்ல. சாவுக்காக அச்சம் கொள்பவனும் மனிதன் அல்ல. வாழத் தெரியாதவனும் மனிதனல்ல.

404. மனிதர்கள் இன்னும் ஒரு மனப்பட்ட ஆவல் கொள்ளவில்லை. ஆவல் வகையில் அங்கங்கே பிரிந்து போகிறார்கள். ஒவ்வொருவனுக்கும் ஒவ்வொன்றில் விருப்பம் செல்லுகிறது. விருப்பத்திற் கேற்ற படி மனப் போக்கு பேதப்படுகிறது. அதிலே மனிதன் மயங்கிவிடுகிறான்.

தான் புசிக்கும் சாதத்தைக் குறைத்துக் கொண்டேனும், "நான் சாப்பிடுவது இவ்வளவு தான்" என்று சிலர் பெருமை பெறப் பார்க்கிறார்கள். இவர்கள் தங்கள் வீட்டிலோ மூன்று ஆள் சோறு முழுதும் விழுங்குகிறார்கள்!

அற்பமான எண்ணங்களும் அருத்தமில்லாத உணர்ச்சிகளும் அந்த மயங்குதலிலே பெருகிப் போகின்றன.

405. போலீஸாருக்குப் பொது ஜனங்களிடத்தில் கசப்பு ஏற்பட்டு, நிர்வாக அதிகாரிகளுடைய தயவிலேயே நம்பிக்கை வைக்கவேண்டிய நிலைமைக்கு அவர்கள் வந்து விடுகிறார்கள். இவ்விதம் போலீசாருக்கு ஜனத்தலைவர்களிடத்தில் கசப்பு இருந்து வரும் வரை அவர்களுடைய ஆதரவால் தங்களுடைய ஆட்சியை நடத்திவரலாமென்று நிர்வாகிகளும் நினைத்து விடுகிறார்கள். சமாதானம் நிலவியிருப்பதற்காவது, சமாதானமும் அமைதியுமான வழியில் ராஜீயத் துறையில் அபிவிருத்தி அடைவதற்காவது இவ்வித நிலைமை அனுகூலமானதன்று.

—பாபு விபின சந்திரபால்

406. மதம் என்பது தர்மம், ஸத்தியம், ஆகையால் அதற்கு அபாயம் வர முடியாது. அப்படி வந்துவிட்டதாகக் கூறுவது தவறு. மற்றவை உலக ஆசாரத்தைப் பொறுத்த விஷயங்களே. நாம் இன்ன மாதிரி யிருக்க வேண்டுமென்று கூறப்பட்டிருக்கும் நடைபாவனைகள் எவ்வளவோ மாறிவிட்டன. ஆயினும் மதம் மாறவில்லை. முன்பு 'சதி' சகஜமாக விருந்தது. அது நிறுத்தப்பட்ட போது மதத்திற்கு ஆபத்துவந்து விட்டதாகக் கூறப்பட்டது. இப்போது தீண்டாமையை ஒழிப்பதற்கும் அப்படித்தான் கூறுகிறார்கள்.

—டாக்டர் வரதராஜுலு நாயுடு.

407. தூய்மையான சுதந்திர தேவியின் கோயிலுக்குள் சுயநலமும் இழந்த நோக்கமும் ஆசையும் உடையவர்கள் நுழைந்து தங்கள் சுயாலத்தைப் பெருக்கிக்கொள்ளவதற்கான வரங்களைக்கேட்டால், சுதந்திரதேவியே அசுத்த மடைந்தவளாகிவிடுகின்றாள். —ஸ்ரீ லஜபதி.

408. செய்கை முறையில் காரியத்தை நடத்தித் தீர்வது, அல்லது அதுபற்றிய முயற்சியில் இறப்பது என்ற திடசித்தம் கொண்ட 20-தலைவர்கள்,—ஏகமனதுடன் கூடியிராத 2000-ஜனங்களைக் கொண்ட கூட்டத்தை விட'—அதிக பலமுள்ளவர்களாக இருப்பார்கள்—ஸ்ரீ லஜபதி.

409. நாம் எளியவர்களாக இருப்பதால் தேசாபிமானம் என்ற பெயரைக் கொண்டு அதற்கு நேர்மாறான காரியங்களைக்கூடச் செய்கின்றோம். நமது சுயநலத்திற்காகத் தேசாபிமானத்தின் பெயரை உபயோகப் படுத்திக் கொள்கின்றோம்.

—ஸ்ரீ லஜபதி.

610. பெரிய பிரமாணங்களைச் செய்கின்றவர்கள் அவற்றை மீறி நடக்கச் சந்தர்ப்பம் கிடைத்ததும் நம்மைத் கைவிட்டுப் போய்விடுவதை நாம் ஏன் காண்கின்றோம்? * * * நம்முடைய ஜனங்கள் அடிமைத்தனத்தில் இருப்பதால் அவர்கள் ஆசைக்குச் சுலபமாக ஆளாகி விடுகிறார்கள்.

—ஸ்ரீ லஜபதி.

411. மிஸ் மில்லரின் (ஸ்ரீ சர்மிஷ்டாதேவி) மதமாறுதல் பொது ஜன உணர்ச்சியை மீறியதாக ஆகுமென்று வைதீகர்கள் நினைக்கலாம். ஆனல், படித்தவகுப்பினர் இதை ஒரு பெரிய சகாப்தத்தின் ஆரம்பமென்

சிரித்து விளையாடும் குழந்தையைத் தூக்கி வெகு பிரியமாய்க் கொஞ்சுவார்கள். ஆனல் அது அழ ஆரம்பித்தாலோ?—அப்போது மட்டும் அதன் தாயைத் தேடுகிறார்கள். ஆண்களின் இல்லற சக்தி இவ்வளவு தான்!

றே நினைப்பார்கள். இதனால் ஹிந்து ஸமூகம் விஸ்தரித்து முன்னேற்ற மடையக்கூடும். நான் சம்பந்தப்பட்ட வரையில் ஸ்ரீ கரவீரபீட சங்கராச்சாரியரைப் பாராட்டுகிறேன்.

—ஸர். சிவஸ்வாமி ஐயர்.

412. கீழ் திசையும் மேல்திசையும் சந்திக்கும் இடம் இந்தியா தான். கீழ் திசையும் சில விஷயங்களைமேல் திசைக்குப் போதிக்கலாம்.

—ஸர் ஜான் சைமன்.

(தொடரும்.)

அந்த மிட்டாய் நாளைக்கு.

—"எந்த மிட்டாய் அண்ணா?"

"அநுபவித்து உணர்வதிலுள்ள சுவை நயங்கள்" என்கிற மிட்டாய்தான். அதன் தொடர்ச்சி அடுத்த மாதம் வரும். இந்த மாதம் முற்றிலும் "ஏழ்மையின் ஏக்கத்திற்கு எதிர்ப்பபு" எப்படி? என்கிற ஆராய்ச்சியிலும், அதற்கான பிரயத்தனத்திலும், தபால் ஆபீஸ் ஐந்து வருஷச் சீட்டுக்குப் பணம் கட்டுவதிலுமாகச் செல்லட்டும். இந்தச் சிறு சங்கதிக்கே வழியில்லாது திசைப்போர் எவ்வளவோபேர். அத்தகையோரைத் தட்டி எழுப்பவே—எப்படியாவது ஒரு கை பார்க்கும்படி வற்புறுத்தவே இவ்வளவும் எழுதியது. முதலில் எவ்வழியிலேனும் பணம் சேரட்டும். பிறகு அதை "அநுபவித்து உணர்வதிலுள்ள சுவை நயங்"களைப் பற்றி யோசிக்கலாம்.

நாம் ஆளப்படுவதற்குத் தவிர மற்றெதற்கும் இலாயக்குள்ளவர்களில்லை யென்று நம்மை ஆளுகின்றவர்கள் தாங்களாகவே நினைத்துக் கொள்ளுகின்றனர். இப்படிப்பட்ட ஸ்திதியில் ஜனங்கள் ஆண்மைத்தனம் வாய்ந்தவர்களாக ஆவார்களென்று நாம் எதிர்பார்க்க முடியாது. நமது வறுமையால் நம் நிலைமை இன்னும் கேவலமாகின்றது.

ஸ்ரீலஜபதி

ஆண்மக்களாக வீரத்துடன் எழுங்கள். நாம் இப்பொழுது அடிமைத்தனத்தில் ஆழ்ந்திருக்கிறோம். இத் தேசத்தில் சர்வ உரிமையும் நசித்துச் சுடுகாடு போல் இருக்கிறது. இதையறிந்து எழுமின். இந்தியஸ்திரீகள் தாய் நாட்டின் விடுதலைக்காகவும், உலகத்தில் நன்மையையும் தர்மத்தையும் நிலைநாட்டவும் பாடுபடவேண்டிய காலம் வந்துவிட்டது.

வீரம் வாய்ந்த ஆண்மக்களைப் பெற்ற வீரத் தாய்மார்கள் என்ற பெயர் ஏற்பட்டுவிட்டால், இந்தியாவின் புராதன மேன்மையானது மீண்டும் நிலைநாட்டப்படும்.

—(டாக்டர் முத்து லக்ஷ்மி.)

பிரபஞ்ச விலாஸம்

1. தெரிகிறதில்லை :— கை வேலையென்று வாய்ச்சுளுவாய்ச் சொல்லி யனுப்பி விடுகிறார்கள். தங்கள் வீட்டு வாயிலில் அம்மா சோறு என்று வந்த பிச்சைக்காரனின் காதடைத்துப் போகிற பசி இவர்களுக்குத் தெரிகிறதா?

2. காரணம் நாமே :— நமது குழந்தைகள் பேசத்தகாத வார்த்தைகளைப் பேசுவதாய்ச் சிடுசிடுத்துக் கண்டிக்கிறோம். எடாரிடமிருந்து அவற்றைக் கற்றன? நம்மிடமே. நம்மைவிடக் குழந்தைகள் அத்தனை பொல்லாதவர்களல்ல. நமது வஞ்சனை கபடங்கள் அவர்களிடம் இல்லை.

3. இரண்டும் சமமே :— குழந்தைக்கும் ஞானிக்கும் எளியவன்—செல்வன் இவ்விருவரும் ஒன்றாகவே காணப்படுவர். செல்வனென்று அதிக மரியாதை எவருக்கும் செய்யார். ஏழை யென்று இகழ்ந்திடவும் மாட்டார்.

4. இதுவும் ஒரு கௌரவமோ :— எந்தப் புது வஸ்துவைப்பற்றிச் சொன்னாலும் அது தமக்குத் தெரிந்ததே போலவும், தம்மிடமும் எங்கோ கிடக்கிறதென்றும் பேசுவர். அதைப் பார்க்கவோ தரும்படியோ கேட்பினோ நாளை நாளை யென அலைய வைப்பார். பிறகு வைத்த இடம் நினைவில்லை என்பார். இந்தத் தெருக்கூத்துகளெல்லாம் எதற்கோ? இதுவும் ஒரு கௌரவமோ? இல்லாத—தெரியாத பவிசை மறைப்பானேன்?

5. நேர மில்லையாம் :— மிகவும் தெரிந்த படிப்பாளிகளிடத்தில் ஏதாவது ஒரு விஷயத்தைத் தெரிந்துகொள்ளச் சென்றால் நேரமில்லை என்கின்றனர். நூலோ, வியாசமோ வரைவதற்கும் இவ்விதமே நேரமில்லை யென்பர். பண வருவாய்க்கு வேண்டிய வேலை செய்ய மட்டும் நேரம் கிடைக்கிறதா? இது படித்துக் கெட்டவர்களின் தரித்திர புத்தி!

6. சோம்பல் நோய் :— நன்கு கற்றறிந்தும், ஸம்பாதிக்கத் திறனிருந்தும், வேலை செய்யச் சோம்பலாய் வேலையை ஒரு இழிவாக எண்ணி எவர் வீட்டிலாவது பொழுதைக் கழித்துவிடச் சிலர் முயல்கிறார்கள். அந்தந்த வீட்டில் கிடைக்கிற வெட்டிச் சோற்றையும் ஒரு கௌரமாக நினைக்கிறார்கள்! இது வழக்கப்பட்டுப்போன சோம்பலின் கொடுமை!

7. தலைவிதி தான் :— தானே எவ்விதமோ தவறிச் செய்துவிட்டதான ஒரு பிழை. அதற்குப் பலர் தனக்குப் புத்தி போதிக்க வருவது; சிலர் திட்டவும் வருவது; தானோ எவரிடமும் ஒருசொல்கூடக் கேட்டிராத அத்தனை ரோஷக்காரன், ஆயினும் என் செய்ய? எல்லாவற்றுக்கும் தலை யசைத்து புத்தி புத்தி என்று கேட்டு அழவேண்டியதே. இதுவும் ஒரு தலை விதியே.

8. தன் காரியம் வழ வழ :— தனக்கு ஆகவேண்டிய ஒரு காரியத்திற்கு நாளைக்கு நாளன்றைக்குச் செய்யலாமென்று சோம்பல் கொள்வது; செய்யாமலேயும் போயவிடுவது. நண்பர், உறவினர், புதிய சம்பந்தி வீட்டார் இவர்

சிலருக்கு நன்மை செய்வதாகப் பிரத்யட்சமாகக் கண்டு கொண்டிருக்கும் ஏற்பாடுகள் பலருக்கும் நன்மையே விளைக்கு மென்பதில் சந்தேகமில்லை. —(ஸ்ரீ லஜபதி.)

போல்வாருக்குத் தன்னால் ஆகவேண்டிய காரியத்தையோ அப்பொழுது தானே செய்து தீர்ப்பது. இதன் காரணம் என்ன? எங்கு அவர்கள் முகம் கோணுவரோ, சிடுசிடுப்பான வார்த்தை கேட்கவருமோ என்று தான்.

சிலர் தங்களுக்குப் புது பதவிகள் வந்ததும் ஆகாயத்தில் பறக்கிற வான ஸஞ்சாரிகளாகிறார்கள். அங்கிருந்து பார்க்கும்போது முன்பு பழகியவர்களெல்லாம் அல்ப பூச்சி புழுவுக்குச் சமமாக அவர்களுடைய கண்களில் படுகிறது. வந்த புதிய—வான வாழ்வு தடுமாறி தரைக்கு வந்துவிடும்போது முன்பு பழகியவர்களின் ஞாபகம் அவர்களுக்கு மறுபடியும் உண்டாகத் தொடங்குகிறது!

9. கிளறிவிடும் கிழக்கட்டைகள்:—உம்—நீ அரும்பாடுபட்டு உன் மகனுக்குக் கலியாணம் செய்தாயே, அவன் தானென்ன, அவள் தானென்ன உன்னை மதிக்கிறார்களா? அவளை அவன் தலைமேலல்லவோ வைத்திருக்கிறான். உனக்கு என்ன அவள் உதவியாயிருக்கிறாளா? இக்காலத்துப் பெண்கள் அவ்வளவு கற்றிருக்கிறார்களம்மா. எல்லாரும் இருக்கையிலேயே உன் வார்த்தைக்குமதிப்பில்லையே! நீ இப்படிக் கதியற்றுப் போனாயே என்று மாமி வர்க்கத்தினரைத் தூண்டிவிடுகிற கிழக்கட்டைகள் வெகுபேர். இத்தூண்டுதலுக்குப் பிறகு குடும்பம் இந்த மாமிகளாற் படும் அலங்கோலம் சொல்ல வேண்டாம்!

T. S. குழந்தைவேல் முதலியார்.

ஸந்தேகத்திற்கு ஒரு மேல்மூடி.

தீராச் சந்தேகமுள்ளவன் வெட்கப்படுகிறவன் ஆகிய இவர்களுக்கு ஒரு நாளும் ஸந்தோஷ முண்டாகாது. முன்னிருந்த ஔரங்கஸீப் என்னும் டில்லி சக்ரவர்த்தி தன் சைன்யங்கள் மீது ஸந்தேகம் கொண்டதால் சீக்கிரத்தில் எல்லாவற்றையும் இழந்து ஸங்கடமடைய நேர்ந்தது. இதனால் எல்லோரிடமும் நம்பிக்கை வைக்க வேண்டுமென்பது கருத்தல்ல. உண்மையாகவே சிலரிடம் ஸந்தேகம் கொண்டாலும், அவ்விதம் கொள்கிறோமென்பதைப் பிறர் அறியாதபடி, அந்த ஸந்தேகத்திற்கு ஒரு மேல் மூடியிட்டு மறைக்க வேண்டும். உள்ளுக்குள்ளாக அந்த ஸந்தேகத்தின் உண்மையை அறிய முயலவேண்டும்.

பெரியாரின் மொழிகள்

(36-ம் பக்கத் தொடர்ச்சி.)

237. There were victories gained every day, in struggling hearts, to which these fields of battle were as nothing. DICKENS.

தத்தளித்துக்கொண்டிருக்கிற மனதில் உண்டாகும் சாந்தமான து யுத்த களத்தில் உண்டாகும் ஜெயத்திலும் மிகவும் மேலான து. டிக்கன்ஸ்.

238. Trust men, and they will be true to you; treat them greatly; and they will show themselves great. EMERSON.

மனிதர்களை நம்பு. அவர்களும் உன்னிடத்தில் உண்மையா யிருப்பார் கள். அவர்களை மேன்மையாய் நடத்து. அவர்களும் மேன்மை யுடையவர்க ளாய் ஆவார்கள். எமர்ஸன்.

239. There are three immaterial things' not only useful, but essential to life. No one knows how to live till he has got them. These are admiration, Hope, and Love. RUSKIN.

வாழ்க்கைக்கு உபயோகமுள்ளதோடுகூட இன்றியமையாததுமான பரி சுத்த வஸ்துக்கள் மூன்று உள்ளன. அவைகளை அடையாதவரையில் ஒரு வனுக்கும் எப்படி ஜீவிப்பதென்பது தெரியாது. அவைகளாவன:—புகழ்தல், நம்பிக்கை, அன்பு. ரஸ்கின்.

240. No human capacity ever yet saw the whole of a thing, but we may see more and more of it, the longer we look. RUSKIN.

ஒரு வஸ்துவின் முழுவதையும் எவரும் கண்டறிந்தவரில்லை. எந்த வஸ்துவையும் எவ்வளவுக்கெவ்வளவு தீர்க்கமாய்ப் பார்க்கிறோமோ அவ்வளவுக் கவ்வளவு அதைப்பற்றித் தெரிந்துகொள்ளலாம். ரஸ்கின்.

241. As we live and work, we should always be thinking of those who are to come after us. RUSKIN.

நாம் நம்முடைய ஜீவதிசையில் எந்தக் காரியம் செய்யும் பொழுதும் நமக்குப் பிந்தி வரப்போகிறவர்களைப்பற்றி எப்பொழுதும் நினைத்தல் வேண்டும்.

242. We must not stint. Our necessary actions, in the fear. To cope malicious censurers. SHAKESPEARE.

மற்றவர்களின் வைதலுக்குப் பயந்து நம்முடைய முக்கியமான காரியங்க ளைச் செய்வதினின்றும் பின்வாங்கக்கூடாது. ஷேக்ஸ்பியர்.

243. Honesty must be based, as the sun is, in vacant heaven; poised as the lights in the firmament, which have rule over the day and over the night. RUSKIN.

பகலையும் இரவையும் ஆளுகிற நட்சத்திரங்களும் சூரியனும் ஆகாயத்தில்

பொழுது விடிந்தது என்று மனிதன் சந்தோஷப் படுகிறான். ஆனால் அவனுடைய ஆயுள் காலத்தில் ஒரு நாள் குறைந்துவிட்டதென்பதை நினைக்க மறந்து விடுகிறான். அந்த மறதிதான் மாயை!

எவ்வளவு உறுதியாய் அமைக்கப்பட்டிருக்கின்றனவோ அதே மாதிரியாக கண்ணியம் என்னும் குணமானது அவ்வளவு உயர்ந்த நிலைமையில் அமைக்கப்பட வேண்டும். **ரஸ்கின்.**

244. Don't fancy that you will lower yourselves by sympathy with the lower creatures ; you cannot sympathize rightly with the higher, unless you do with those. RUSKIN.

தாழ்ந்த ஜீவன்களிடத்தில் இரக்கம் வைப்பதால் உன்னைத் தாழ்த்திக்கொள்வதாக எண்ணுதே. அவைகளிடத்தில் நீ இரக்கம் காண்பிக்காவிட்டால் மேலானவைகளிடத்தில் உன்னால் இரக்கம் காட்டுவதற்கு முடியாது. **ரஸ்கின்.**

245. Nothing useless is, or low ; Each thing in its place is best. LONGFELLOW.

எந்த வஸ்துவும் உபயோகமற்றதாகவாவது, தாழ்ந்ததாகவாவது இல்லை. அதது அததனுடைய இடத்தில் மிகவும் மேலானதே. **லாங்பெல்லோ.**

246. The best strength of a man is shown in his intellectual work, as that of a women in her daily deed and character. RUSKIN.

ஒரு மனிதனுடைய மேலான வலிமையானது அவனுடைய புத்திகூர்மையான காரியங்களில் விளங்கும். ஒரு ஸ்திரீயினுடையது அவளுடைய நித்திய காரியங்களிலும் குணத்திலும் காணப்படுகிறது. **ரஸ்கின்.**

247. The first duty of every man in the world is to find his true master, and for his own good submit to him, and to find his true inferior, and for that inferior's good conquer him. RUSKIN.

இந்த உலகத்தில் ஒரு மனிதனுடைய முதற் கடமையானது தனக்கு உண்மையான ஆசிரியனைக் கண்டு அடைந்து அவனுக்குத் தன் நன்மையின் பொருட்டுக் கீழ்ப்படிதலாம். மேலும், தனக்கு உண்மையான கீழோர்களைக் கண்டு அவர்களின் நன்மைக்காக அவர்களைத் தன் கீழ்ப்படித்துக்கொள்ளுவதாம். **ரஸ்கின்.**

248. He who loves goodness harbours angles, reveres reverence, and lives with God. EMERSON.

நல்ல குணத்தை விரும்புகிறவன் தனக்குள் நல்ல தேவதைகளை நிறுத்திக்கொள்கிறான். பூஜிக்கத்தக்கதை பூஜிக்கிறான். அவன் கடவுளோடு வசிப்பவனாகிறான். **எமர்ஸன்.**

249. Believe me, upon the margin of celestial streams alone those simples grow which cure the heart-ache ! LONGFELLOW.

மனோதுக்கத்தைப் போக்கடிக்கும் குணங்களாகிய மூலிகைகள் தெய்வலோக நீரோடைகளின் கரையில் முளைக்கின்றன. இதை நம்பு. **லாங்பெல்லோ.**

ஒருவருக்குத் தேள் கொட்டிவிட்டதென்றால், அதிலிருந்து சென்றுபோன தேள் கொட்டின சமாசாரங்களெல்லாம் வெளிக் கிளம்பிவிடுகின்றன. பிரஸவ அவஸ்தையில் இப்படியே முந்திய பிரஸவ சங்கதிகள் புறப்படும்.

250. He only is advancing in life, whose heart is getting softer, whose blood warmer, whose brain quicker, whose spirit is entering into living peace. RUSKIN.

எவன் ஒருவனுடைய மனது இளகியும், இரத்தம் அன்பினால் உஷ்ணத்தையடைந்தும், புத்தி கூர்மையையும் ஆத்மா சாந்தத்தையும் அடைந்து வருகிறதோ அவன்தான் வாழ்க்கையில் முன்னேற்றத்தை அடைந்துவருகிறவனாகிறான். ரஸ்கின்.

251. To cultivate sympathy you must be among living creatures, and thinking about them; and to cultivate admiration you must be among beautiful things and looking at them. RUSKIN.

இரக்கம் எனும் குணத்தைப் பயிர் செய்ய நீ எப்பொழுதும் பிராணிகளோடு இருந்து அவைகளைப்பற்றி நினைத்துக்கொண்டிருக்க வேண்டும். புகழ்தல் எனும் குணத்தைப் பயிர் செய்ய எப்பொழுதும் அழகான வஸ்துக்களின் மத்தியிலிருந்துகொண்டு அவைகளைப் பார்த்துக்கொண்டே இருக்க வேண்டும். ரஸ்கின். P. E. பாஷியம் நாயுடு.

ரகசியங்களைப் பாதுகாத்தல்.

ஒரு குடும்பத்தின் ரகசியங்களை வெளியிடும் உறவினன் கொடியனே. அவனுடைய ஒழுங்குத் தவறான செய்கையால் அக்குடும்பத்தின் நற்பெயருக்கு ஹானி உண்டாவதுடன் அளவற்ற பொருட் சேதமும் வியாகூலமும் நேரிடுகின்றது. ஆதலின், பிறருடைய இரகசியங்களையும் ஸ்வஜனங்களுடைய அந்தரங்க ஸமாசாரங்களையும் பகிரங்கப்படுத்துவது பாப மென்ப. இந்த நியாயத்தை யநுஸரித்தே கவர்ன்மெண்டாரும் தங்களுடைய பலவிதமான டிபார்ட்மெண்டு ரகஸ்யங்களை உத்தியோகஸ்தர்கள் வெளியிடப்படாதென்று சட்டமுண்டாக்கியிருக்கின்றனர். ஒரு வர்த்தகசாலையிலுள்ளவன் அங்குள்ள ரகஸ்ய பாகத்தை வெளிப்படுத்துவதால் அந்த வியாபாரசாலைக்கே ஹானியை விளைத்தோனாகிறான். இது திருந்தாத சிலரது துர்க்குணம்.

மின்சார விளக்குகள் தூண்டுகோல் இன்றி எரியுந் தன்மையது. எனினும் இயந்திரக் கெடுதலால் அதுவும் ஒளி குறைவதுண்டு. அவ்விதமே தக்க நிலையிலிருந்தோர் தவித்துத் தாழவும் வரும். இவ்விரண்டைச் செப்பனிடுவோர் உண்டாயின் பழய காந்தியைப் பெற்றுவிடும். இப்படி செப்பனிடுவது—தன் விளக்கு—தன் மனிதன் என்ற நினைவு பெருகினால் தான்.

நமது கடை

இன்று நமது கடையில் ஈயக்குண்டு செட்டியார் பெண்களுக்கு ஸ்வதந்திரமேயில்லை யென்று பின்வருமாறு இருமினர்:—“ஹிந்து லா பிரகாரம் எந்த ஸ்திரீயும் தன் புருஷனை விட்டுப் பிரிந்து ஸ்வேச்சையா யிருக்க ஸாத்யப்படாது. புருஷன் வீட்டை விட்டு ஓடிப் போகும் ஸ்திரீயை அப்புருஷன் சிவில் கோர்ட்டார் மூலமாய்த் தன் வீட்டுக்கு வந்து தன்னுடைய ஆதீனத்திலிருக்கும்படிக்கும், வேலை செய்யும்படிக்கும் கட்டாயப்படுத்தலாம். கோர்ட்டார் புருஷன் வீட்டுக்குப் போக இஷ்டமில்லை யென்று சொல்லும் ஸ்திரீயை ஸிவில் ஜெயிலுக் கனுப்புவார்கள். ‘Restitution of conjugal Rights’ என்ற பிரிவுப்படி புருஷன் வழக்காடும் பக்ஷத்தில் வீட்டை விட்டு ஓடிப்போகும் ஸ்திரீகளின் கர்வமும், அயோக்கியமான நடத்தையும் அடங்கிவிடும். விவாகமான தக்ஷணமுதல் புருஷன் கார்டியனாக ஏற்படுவதால், அவனுடைய கட்டளைக்கு மாறாக மனைவி நடக்க ஸாத்யப்படாது. பிராணனுக்கு அபாயம் நேரும்படி அடித்துக் காயப்படுத்தி இரத்தம் பெருகும்படியும் களைத்து விழும்படியும் செய்தால் மட்டும்குற்றமேயன்றி ஸாமான்யமாய் அவளைத் துர்மார்க்கத்தில் பிரவேசிக்க வொட்டாமல் தடுப்பதற்கும், வீட்டுக் காரியங்களைச் செவ்வையாய்ச் செய்யும்படிக்கும் சிக்ஷிப்பது சட்டப்படி குற்றமாகாது. அசட்டுப் புருஷர்கள் அடிமைகளாய் நடப்பதைக் கண்டு ஸ்திரீகள் கர்வம் கொண்டு தங்கள் இஷ்டம்போல் கும்பல் கூடவும், வம்புகளாடவும், பணத்தை விரயம் செய்யவும் தொடங்கி விடுகின்றனர். சட்டப்படியும் பூர்வீக ஆசாரணைப்படியும் எவ்விதத்திலும் ஸ்வதந்திர மில்லாத ஸ்திரீகளை அடக்கியாளத் தடையென்ன? அவர்களுக்கு அலங்காரம் செய்து தாங்கள் அழுக்குத் துணிகளைக் கட்டிக்கொண்டு திரிவது எத்தனை மதிஹீனம்!” என்று வாய்க்கு வந்தபடி உளறினர்.

***

உடனே சந்துக்கடைப் பிள்ளை கோபத்துடன் எழுந்தார். ஐயா ஈயக்குண்டே! நீங்கள் உங்கள் பிரசங்கத்தைப் பொதுவில் பேச வந்தீரா? அல்லது உங்கள் வீட்டுச் சங்கதியையேஒருபிரசங்கத்துக்கான சரக்காக மாற்றிக் கொண்டீரா? என்றார். ஈயக்குண்டு இதற்கு விடை கூறுமுன்னே அல்லா பிச்சை எழுந்து —“இந்த ‘ஈயத்தை’ உங்களுக்கு அவ்வளவாகத் தெரியாது; நான் அதை விளக்குகிறேன். இந்த ‘ஈயத்துக்கு’ ஒரு உத்தம மனையாள் உண்டு. அடிக்கடி அந்த அம்மணியின் கால் தொடுங் கூந்தலை இரண்டாகப் பிரித்துத் தூணில் கட்டி விட்டுத் தமது கை சலிக்க அடிப்பதில் இந்தக் ‘குண்டு’ மிக்க தீரர். இவருக்குத் தனது மனைவி மீது அவ்வளவு அன்பு! இன்னும் எவ்வளவு கொடுமைக்காளாலும் அந்தப் பதிவிரதா ரத்நம் சகிக்கச் சித்தமாகவே இருந்தாள். போதாக் குறைக்கு இந்த ஈயக் குண்டார் இரண்டாவது விவாகமும் வேறே செய்துகொள்ள ஏற்பாடு செய்து விட்டார்! இதைக் காணச் சகியா

ஜன நாயக ஆட்சிக்கொள்கைகள் ஒரு தேசத்திற்காவது ஒரு ஜாதிக்காவது சொந்தமானவையல்ல; அவை ஒரு காலத்தின் விசேஷ குணமே.—(சு—மி.)

மல் அந்த உத்தமி தன் தாய் வீட்டுக்குச் சென்றுவிட, இவர் அழைக்க, அந்த அம்மை மறுத்துவிட, இவர் கோர்ட்டு ஏற, அந்த அம்மை ஜீவனாம்ச வியாஜ்யம் செய்து தீர்ப்பு பெற, அதன்மேல் ‘ஈயக்குண்டு’ ஹைகோர்ட்டில் அப்பீலுக்குப் போக, இன்னும் அது முடிவு பெருமல் நிற்கிறது. அந்த அக்கிரமத்தையே இங்கு ஒரு பிரசங்கப் பொருளாய் வைத்துப் பேசிக் கொட்டியளந்து விட்டார் போலும் சபாஸ்!” என்ருர்.

***

ஈயக்குண்டுக்கு அல்லாபிச்சை மீது ஆத்திரம் எழுந்தது. அப்பொழுது அல்லாபிச்சை, ஓ! நான் பெண்ணல்ல, “**சட்டப்படியும் பூர்வீக ஆசாரப்படியும்**” என்னை அடக்கிஆள்வதற்கு? நான் ஆண்மகன். இப்படியும் பெண் துரோகம் செய்வார்களா? என்ருர். ஈயக்குண்டின் கண்கள் கோபத்தால் ஜ்வலித்தன. “ஒரு புருஷன் 10-ஸ்திரீகளைக் கல்யாணம் செய்தாலும், ஏன் செய்தா யென்று கேட்கவும், அவனை விட்டு அகலவும் எந்த ஸ்திரீக்குமே அதிகாரமில்லை”யென்று கர்ஜித்தார்.

***

இவர் இப்படிச் சொல்லவும், கடையிலிருந்த யாவரும் ஒன்று கூடிக்கொண்டு பல கேள்விகளைப் போடத் தொடங்கிக் கொண்டனர்.

அல்லா பிச்சை :—10 - ஸ்திரீகள் வேண்டாமய்யா. இப்போது வரப் போகும் புது மனைவியே உம்மைக் குழி தோண்டிப் புதைக்கப் போதும். எந்தப் பொறுமையுள்ள பெண்ணும் உமது கொடுமைக்கும் அடிகளுக்கும் எதிர்க்காமலிருக்க முடியாது.

தோந்திச் செட்டி :—ஸ்திரீக்கு சுயேச்சை யில்லை யென்றீர். ஆனல் அவளுடைய கண்ணீர் அக்கிரமியான ஆடவனை ஜென்மஜென்மத்துக்கும் விடாது. அது ஆயிரம் கத்தி வெட்டுக்கும் அதிக கூர்மையுள்ளது.

ஊதுவத்தி ராவ் :—கணவனிடம் செல்ல மறுக்கும் பெண்ணைச் சிறைக்கு அனுப்புவார்களென்கிறீர். உமது கொடுமையைவிடச் சிறை வாசம் அவ்வளவு கஷ்டமுள்ளதல்ல.

பொங்கல் பிள்ளை :—புருஷனே மனைவிக்குக் கார்டியன் என்கிறீர். அக்கிரமியான கார்டியனை நீக்கச் சட்டமுண்டு. அன்று உமது மூத்த மனைவியை நீர் கிணற்றில் தள்ளியதை அந்த அம்மணி, தானே தவறி விழுந்து விட்டதாகச் சொல்லியிரா விடில் இதுவரையில் நீர் எங்கே இருக்கவேண்டும் தெரியுமா?

சீதாப்பழ சாஸ்திரி :—இரத்தம் பெருகும்படியும், களைத்து விழும்படியும் அடித்தால் தான் குற்றம் என்கிறீர். நீர் அந்த அம்மணியைப் புடைத்த பெருமையை இங்கு ஒய்யாரமாகப் பாடம் ஒப்புவிக்க வந்தீரா?

புளியோதரை பண்டிதர் :—வீட்டுக் காரியங்களைச் செவ்வையாய்ச் செய்யும்படிக்கு சிக்ஷிப்பது குற்றமல்லவென்கிறீர். செவ்வையாய் நடக்க உமக்கு யோக்கியதை இருந்தால்லவா மற்றவர்களும் செவ்வையாய் நடப்பார்கள்? சிக்ஷிக்கப்பட வேண்டிய உமக்குப் பிறரை சிக்ஷிக்க யோக்கியதை—பவிசு—உண்டா?

சக்கரை ராவுத்தர் :—புருஷர்கள் அழுக்குத் துணிகளை யுடுப்பதாய்ச் சொல்லுகிறீர். நீர் தரித்துள்ள வேஷ்டியை நெருப்பிலிட்டா

ஒரு இஷ்டன் படுத்துகிற காயங்களைப் பற்றிக் கவலையே யில்லை. ஆனல், ஒரு சத்துரு இடுகிற முத்தங்களோ அவ்வளவும் மோசகரமானவை.

லும் எரியாதே. உம்மையே அழுக்கு மூட்டைக்குப் பிரத்தியக்ஷமான உதாரணமாகச் சொல்லிக் கொண்டீரா?

* * *

இன்னும் கேள்விகள் பெருகிக் கொண்டே போயின. எவர் கேள்விக்குப் பதில் சொல்வதென்று தெரியாமல் ஈயக்குண்டு திகைத்தார். அந்த சமயம் ஒரு தந்திச் சேவகன் அங்கு வந்து இரண்டு தந்திகளை அவரிடம் சேர்ப்பித்தான். முதல் தந்தியில், "முன்பு ஒப்புக்கொண்டபடி பெண்ணைத் தரமுடியாது. உமக்குத் தருவதிலும் கிணற்றில் தள்ளலாம். ஆதலின் எங்கள் பெண்ணுக்கு வேறிடத்தில் நாளை விவாகம் நடக்கும்" என்றிருந்தது. இரண்டாவது தந்தியில் "உமது ஹைகோர்ட் அப்பீல் தள்ளுண்டது; உமதுமனைவிக்கு உமதுசொத்தில் பாதியைத் தரவேண்டியதே. எல்லாம் அவள்தாய் வீட்டு சொத்துதானே" என்றிருந்தது. ஈயக்குண்டு செட்டியார் இத்தந்திகளைப் பார்த்ததும் தலையைத் தொங்கவிட்டுக் கொண்டு நின்றார். எல்லோருமாகச் சேர்ந்து அவரைக் கடைக்கு வெளியில் தள்ளி வந்து நிறுத்தி, எப்போது உமக்கு வீட்டுக்குப் போக இஷ்டமோ அப்போது போகலாம். அதுவரை இப்படியே தொங்கிய தலையுடன் நின்று கொண்டிரும் என்று சொல்லிக் கடையை மூடிப்பூட்டிக்கொண்டு புறப்பட்டுவிட்டோம். ஸ்திரீ தூஷகர்களின் கதி இப்படித்தான் தலையைக் கவிழ்க்கும்படி வந்து முடியும்.

பொன்வண்டு செட்டியார்.

பிறர் செய்த உபகாரத்தை நாம் அநுபவிக்கையில், அவர்களின் நினைவு உண்டாகி, அவர்களைப்பற்றி இன்பமான எண்ணங்கள் கொள்கிறோம். நல்லது செய்யவும் நினைக்கிறோம்.

பத்திராசிரியரின் முன்ஜாக்கிரதை :—

சந்தாதார் :—இந்த ஈயத்தில் செதுக்கிய பிளாக் எவருடையது? இது எதற்காக?

பத்திராசிரியர் :—இந்தப் பிளாக்கிலுள்ள பெரிய மனிதர் இறக்கும் சமயத்தில் இருக்கிறாராம். அவர் மரணமானால் பத்திரிகையில் அவர் சரித்திரம் போடவே இந்தப் பிளாக்கைத் தருவித்து வைத்துக் கொண்டுள்ளோம்.

சந்தாதார் :—ஒரு சமயம் அவர் பிழைத்துக் கொண்டாலோ, அப்போது இந்தப் பிளாக் வீண்தானே?

பத்திராசிரியர்:—எதுவும் வீணாகாது. எப்படியும் இன்னொரு நாளிலாவது அவர் இறக்கவேண்டு மல்லவோ? அப்போது இந்த பிளாக்கு உதவும்.

சந்தாதார் :—ஹா! எத்தனை உருக்கம்! எவ்வளவு முன் ஜாக்கிரதை!!

எலுமிச்சம் செடி காய்க்க சுமார் 5-வருஷமாகிறது. அநுகூலமான இடங்களில் மூன்றாவது வருஷத்தில் மரங்களில் சில பழங்கள் உண்டாகலாம். ஆனால் எட்டு பத்து வருஷங்களுக்கு முன் செடிகளில் பூர்த்தியான மாசூல் கிடைக்காது. எலுமிச்சம் பழம் காய்க்க ஆரம்பித்த பிறகு குறைந்த பட்சம் 40-வருஷகாலம் காய் காய்த்துக்கொண்டே இருக்கும்.—(கிருஷிகன்)

சாஸ்திர நுட்பங்கள்.

(18-ம் பக்கத் தொடர்ச்சி.)

17. காங்கை யென்ற பொருள் ஒன்றிலிருந்து உண்டாவதேயன்றி தனித்ததாகத் தோன்றினதில்லை. தேய்ப்பதால் அளவற்ற காங்கையைப் பிறப்பிக்கலாம். வெடி மருந்து வெடிக்கும் போது அதிக காங்கை யுண்டாகும்.

18. காங்கைக்கும் வெளிச்சத்துக்கும் நெருங்கிய சேர்மானமுண்டு. காங்கை வெளிச்சமில்லாமலும் இருக்கும். ஆகிலும் வெளிச்சத்துக்கு ஊற்ருய் இருப்பவைக ளெல்லாம் காங்கைக்கும் ஊற்ருகும். எவ்வகையாயும் வெளிச்சத்தை அதிகரிக்கப் பண்ணக் காங்கையும் அதிகரிக்கும்.

19. வாடிக்கையாய் வெளிச்சங் கொடாத சில பொருள்கள் வெளிச்சங் கொடுக்கத் தக்கதாக சில வேளை வெப்பங் கொள்ளும். சிவக்கக் காய்ச்சிய இரும்பும், தணலாகச் சுடப்பட்ட கரியும் இதற்கு உதாரணங்களாகும். வாயுவானது இப்படி வெப்பம் கொள்வதற்கு சுவாலை எனப்படும். நெருப்பு என்பது பொருள்கள் எரிவதாலுண்டாகும் வெளிச்சமும் காங்கையும் சேர்ந்த தோற்றம்.

20. சூரியனிலிருந்து வரும் காங்கை மிகுதியானலும், அதனல் நெருப்புப் பற்ருது. அப்படி யிருந்தும் 'பர்னிங் கிளாஸ்' (*Burning Glass.*) என்ற காந்திக் கிண்ணியால் சூரியனின் கிரணங்களை மேற்கண்ட கிண்ணியின் மத்திய வட்டத்தில் ஒன்று சேரும்படி செய்தால் உடனே நெருப்புப் பற்றிக்கொள்ளும்.

21. சிலர் காய்ந்த மாத்துண்டுகளை ஒன்றுடன் ஒன்று உரைஞ்சி நெருப்பு மூட்டுவர். இரும்பு முதலிய லோகங்களைக் கடைய துளைக்க ஆயுதம் அதிக சூடு கொள்ளும். இப்படிப் பொருள்களின் வெளிப் பக்கம் ஒன்றில் ஒன்று உறைஞ்சப் படுவதால் அவைகளிலுள்ள மறைந்த காங்கை வெளிப்பட்டு உணரக் கூடியதாகிறது.

22. உரைஞ்சுதலால் காங்கை பிறப்பதைக் காட்டுவதற்கு "ரும் வோர்" என்பவர் பின்வருஞ் சோதனையைப் பண்ணினர். பித்தளைக் கட்டை யொன்றை பதினெட்டு இருத்தல் தண்ணீருள்ள பெட்டிக்குள்ளே வைத்து துரப்பணத்தால் நிமிஷத்திற்கு முப்பத்திரண்டு முறை வீதமாகச் சுழற்றித் துளைத்தபோது, 60-பாகம் காங்கை கொண்டிருந்த தண்ணீர் ஒரு மணி நேரத்தில் 107-ம் பாகம் வரைக்கும் வெப்பமாகி, இரண்டரை மணி நேரத்தில் பூரணமாய் வெப்பம் அடைந்தது. இப்படிப் பிறந்த காங்கை முக்கால் இஞ்சு மொத்தமான ஒன்பது மெழுகுத் திரிகள் இரண்டரை மணிநேரத்திற்கு எரிவதாலுண்டாகுங் காங்கையிலும் அதிகம் என்று உத்தேசித்தார்.

23. உரைஞ்சுவதா லுண்டாகும் காங்கை உரைஞ்சப்படும் அதாவது தேய்க்கப்படும் பொருள்களின் தன்மைக்குத் தக்கதாயல்ல; அந்தத் தேய்க்கப் படுவதற்குச் செலவழியும் சக்தி சத்துவதற்குத் தக்கதாய்

குற்றம் செய்வது அவமானமே யன்றி சிறைக்குச் செல்லுவது அவமான கரமானதன்று. —(மகாத்மா)

இருக்கும். உராய்ஞ்சுதலில் இந்த சக்தியின் சத்து எவ்வளவுக்கு அதிகரிக்கிறதோ அதற்குத் தக்கபடி காங்கையாய் மாறுகிறது. ஒரு ராத்தல் தண்ணீரைக் காங்கையில் ஒரு பாகம் வெப்பம்கொள்ளப் பண்ணுவதற்கு 772-இராத்தல் உள்ள ஒரு பாரத்தை ஒரு அடி அளவுக்கு உயரத் தூக்குவதற்கு, எவ்வளவு சக்தி சத்துவம் (பலம்) வேண்டுமோ அவ்வளவு சக்திசத்துவம் இங்கு தேவைப்படுவதா யிருக்கிறது.

24. கடலில் உள்ள ஜலமானது ஏறியும் இறங்கியும் ஓடியும் தேய்வு படுதலால், அதற்கென்று செலவழிக்கப்படும் சக்திசத்துவத்திலிருந்து காங்கை யுண்டாகின்றது. "பெசெல்" என்ற வான சாஸ்திரியுடைய கணிப்பின்படி, ஒரு தினத்துக்கு நாலு முறை 25,000-கன மைல் கடல் தண்ணீரானது பூமியின் ஒரு திக்கிலிருந்து இன்னொரு திக்குக்கு உரைஞ்சி அதாவது தேய்த்துக் கொண்டு ஓடுகின்றது. இப்படித் தேய்தலினால் பூமியின் காங்கை மிகவும் அதிகமாகக் கூடுகிறதென்று தெரிகிறது.

25. தட்டுதலாலும் காங்கை யுண்டாகும். தீத்தட்டிக் கல்லில் உருக்கால் தட்ட, நெருப்புப் பொறிகள் பிறப்பது வழக்கமான காரியம். இரும்பைப் பலமாய் அடிப்பதாலும், எந்த லோகத்தையாவது சடுதியில் உரப்பாய் அடிப்பதாலும் காங்கை அதிகமாகப் பிறக்கும்.

26. மின்சாரம் திரண்டு பொருள்களுக்கூடே செல்லும்போதும், அது ஒரு பொருளிலிருந்து இன்னொன்றுக்குச் செல்லும்போதும் காங்கை பெரும்பாலும் பிறக்கும். மற்றெந்த வழியாலும் கண்ட செயற்கைக் காங்கையைப் பார்க்கிலும் அதிக காங்கை மின்சாரத்தில் உண்டாகும். கடினமான எந்தப் பொருளையும் இதனால் உருக்கலாம், அல்லது ஆவியாகப் பறக்கச் செய்யலாம். இப்படி உண்டான காங்கை பொதுவாய் மெத்த வழக்கப்படாதிருந்தாலும், அது ரஸாயன பரீட்சைகளுக்கு அதிகமாய் உதவும்.

27. மேலே சொன்னவைகளை விட பூமியிலிருந்தும், நட்சத்திரங்கள் கிரகங்களிலிருந்தும் காங்கை வரும். பிராணிகளிலும், தாவரங்களிலும் ஓயாமல் நடக்கும் செயல்களின் மூலமாக இவைகளின் உறுப்புகளிலிருந்தும் காங்கை பிறக்கின்றது. இப்படி உண்டாகும் காங்கைக்கு "**உயிர் காங்கை**" என்று பெயர்.

28. காய்ந்த பொருள்களை நனைக்க, அவைகளில் காங்கை தோன்றுமென்று சோதனைகளால் விளங்குகிறது. கல்வகையை நொறுக்கித் தூளாக்கி நனைக்கும்பொழுது அவைகளில் காங்கை அரைமுதல் இரண்டு பாகம் அளவாய் மாத்திரம் வெப்பமாகி வெளியேறும். பஞ்சு, நூல், மயிர், ஆட்டு மயிர், ஆனைக் கொம்பு, கடுதாசி முதலிய பிராண-தாவரப் பொருள்களிலோ இரண்டு பாகம் முதல் பத்துப் பதினாலு பாகம் வரைக்கும் காங்கை பிறக்கும்.

29. பொருள்கள் காங்கையைத் தங்களுக்குள்ளே செல்லவிடும் தன்மையில் ஒன்றுக்கொன்று அதிக வித்தியாஸமுடையன. சில பொருள்கள் தம்முள் காங்கை செல்வதைத் தடுக்கிறதில்லை. சிலவற்றுக்குள் காங்கை மெல்லச் செல்லுகிறது. சிலவற்றுக்குள் கஷ்டப் பட்டுக்

சமயம் நேர்ந்தால், அவசியம் ஏற்பட்டால் தைரியமாக மாறுதல்களைச் செய்யத் தயங்கக் கூடாது. —(ஸ்ரீ லஜபதி.)

கொண்டு செல்லுகிறது. உதாரணமாக, ஒரு கண்ணுடிக் கம்பியின் தலைப்பையும், அதினளவு நீளமுள்ள இரும்புக் கம்பியின் ஒரு தலைப்பையும் விளக்குச் சுடரிற் பிடிக்க, இரும்புக் கம்பியில் காங்கை சீக்கிரமாகவும், கண்ணுடிக் கம்பியில் நேரம்சென்றும் ஏறுகிறது. இதனுல் இவ்விரண்டு பொருள்களிலும் மெத்த வித்தியாஸம் என்பது தெளிவு.

30. கொல்லன் இரும்பைச் சிவக்கக் காய்ச்சினவுடன் தண்ணீரில் தோய்க்க, இரும்பிற் படும் தண்ணீர் கொதித்தாலும், சட்டியில் இருக்கிற மற்ற மற்றபாகத்துத்தண்ணீர் குளிராகவே இருக்கும்.

31. மற்றெந்தப் பொருளிலும் பொன்னில் காங்கை அதிக வேகமாய்ச் செல்லும். கீழ்வரும் அட்டவணை, பொன்னில்காங்கை செல்லும் கதியை (வேகத்தை) 100-பங்காக வைத்துக் கொண்டு, அந்தந்தப் பொருள்களில் காங்கை செல்லும் வேகத்தை விளக்கிக் காட்டுகின்றது

1.	பொன்	...	100—00
2.	பிலாட்டினம் (Platinum)		98—10
3.	வெள்ளி	...	97—30
4.	செம்பு	...	89—82
5.	இரும்பு	...	37—41
6.	துத்தம்	...	36—37
7.	தகரம்	...	30—38
8.	ஈயம்	...	17—96
9.	மாபிட்கல் (Marble)		2—34
10.	பீங்கான்	...	1—22
11.	களிமண்	...	1—13

எந்த காரியத்துக்காக ஒருவரைப் போய் காணுகிறுர்களோ அவர்களிடம் தாங்கள் வந்த சங்கதியை முதலிலேயே தெரிவிக்க சமயம் வாய்க்காமல் பல உதவாது பேசி அப்பால் விஷயத்தை மெதுவாக வெளியிட நேர்கிறது. உள்ள பொழுதெல்லாம் வீண் பேச்சில் போய்விட, அவர்கள் வந்த முக்கிய விஷயத்தைப் பூர்த்தியாய் முடித்து அனுப்ப நேர்மின்றி அவசரம் அவசரமாகக் கவனிக்கும்படியாகி இருவரும் கஷ்டப்படுகிறுர்கள்.

32. கம்பளம் முதலியபுடவைகளிலிருந்து காங்கை தேகத்துக்குட்செல்லுவதில்லை. தேக அனல் வெளிப்படாமல் அது காப்பதால் அந்த வெளிப்படாத அனலால் தேகம் சூடாகிறது. கடுங்குளிருள்ள தேசங்களில் அறையின் காங்கை கொஞ்சமும் வெளியேருதபடி இரட்டித்த கதவு சன்னல்களைப் போடுவது வழக்கம்.

(தொடரும்.)

சரியானபடி விளைந்தால் சிரகம் மாகுல் ஏக்கர் ஒன்றுக்கு 15-முதல் 20-மணங்கு வரை அகப்படும். இதற்குச் செலவு:—7 உழவு ரூ. 7 ; 10 வண்டித் தொழு எரு ரூ. 10 ; கொர்ரு உழவு, ருண்டகர் உழவு மரமடித்தல் ரூ. 5 ; நீர்பாய்ச்சல் ; ரூபா 8 ; களை பறித்தல் (16-பெண்கள்) ரூ. 3. அறுவடை (5-ஆண் x 16-பெண்கள்) ரூ. 4-8-0 ; அடித்து ஒப்படி செய்தல் ரூ. 3-8-0 ; விதைக்கிரயம் ரூ. 4. மொத்தம் ரூ. 50. செலவுபோக லாபம் ரூ. 70. கிருஷிகன்

முற்றும் துறந்த ஓர் முனிவரின் மதி (Parnell's Hermit) மயக்கம்

(31-ம் பக்கத் தொடர்ச்சி.)

Remote from man, with God he pass'd the days,
Prayer all his business, all his pleasure praise
A life so sacred, such seren repose,
Seem'd heaven itself, till one suggestion rose ;
That vice should triumph, virtue vice obey,
This sprung some doubt of providence's sway:

உலகரைத் துறந்த மற்றவன் தொழில்கள்
உரைத்திடில் ஜெபமலால் இல்லை
நமலமுறு மனதின் மகிழ்ச்சியுங் கடவுள்
நல்லடிதனைத் துதிப்பதுவே
இலகுறத்தனது வாழுநாள் யாவும்
இறைவனுக் குரிதாய்ப் போக்கி
மலமறும் உயிர்வாழ்வோடு சமாதான
மார்க்க விஸ்ராந்தியும் பெற்று, (2)

தீமை நன்மையினை செயிப்பதும் நன்மை
தீமைக்குள் இணங்கிவாடுவதும்
ஆமிதற் காயகாரணம் யாதொன்றைய
மொன்றணு கிடுங்காறும்
நாமமொன்றில்லா இன்பவீடடைந்த
நலமதேபோன் றவனிருக்கப்
பாமமாம் ஐயம் பரனுலகளிக்கும்
பான்மையிற் பகைவிளைத்ததுவே. (3)

His hopes no more a certain prospect boast,
And all the tenor of his soul is lost.

வேறு.

ஐயமானதவனை அணுகலும்
செய்யதன்னுளத் தெண்ணிய சீரெண்ணம்
உய்யுமாறிங்குறுதென உன்னவே
துய்யமுன்னுள்ளயாவுந் தொலைந்ததால். (4)

(தொடரும்.)

இன்ப வாழ்வு

(24-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஆடம்பர வாழ்க்கை இன்ப வாழ்வு ஆகுமோ? அதுவே மற்றெல்லாத் தீமைக்கும் ஆதியாகும். ஆடம்பரச் செல்வனே "நான் என் ஒரு நாட்டிற்குத் தலைவனுதல் கூடாது"—என எண்ணுகிருன். தான் ஒரு குதிரை வண்டியில் சவாரி போய்க் கொண்டிருக்கும் பொழுது, எதிரே ஒருவன் மோட்டாரில் வருவதைக்கண்டு பெருமூச்சு விடுகிருன். "வெல்வெட்" பட்டில் தைத்த கோட்டும், கழுத்தில் 'காலரு'ம் 'டையு'ம் அணிந்து, கையில் பொன் சங்கிலியும் வைர மோதிரங்களும் பூண்டு, காலில் 'ஸ்லிப்பர்' "கிறிச் கிறிச்" என்ன, வாயில் "ரூலர் சிகரெட்"டைப் புகைத்துக்கொண்டு, கைப்பிரம்புடன் கடற் கரையில் உல்லாஸமாக உலாவுபவன் நான்தான் என்ருல்; என் கண்ணெதிரிலேயே மற்ருெருவன் காலில் உயர்தர "பூட்சும்"ம் "அல்பாக்கா" துணியில் தைத்த 'நிஜாரு'ம் அணிந்து, கழுத்தில் தொங்கும் பொன் சங்கிலியின் முனையில் ஓர் கடிகாரத்தைக் கோத்து, அதைச் சட்டைப் பையில் நுழைத்துக் கொண்டு, முகத்தில் முதல்தர மூக்குக்கண்ணுடி மின்ன, ஒரு கையில் அழகிய சிறு குச்சியையும் (Walking stick), மற்ருெரு கையில் தனது ஆசைக் கண்ணுட்டியின் நுனிவிரல்களையும் பிடித்துக்கொண்டு உலாவுகிருனே! நூற்றுக்கு 3½-வட்டியும், பகற்கொள்ளை வியாபாரமும், அரசாங்க அடிமையுமாக இருந்து பெரும் பணம் திரட்டியவன் நான் ஒருவனே என்ருல், என்னைவிட இவன் பெரிய செல்வந்தன்போலும் தோன்றுகின்ருனே! எனப் பெருமூச்சுவிடுகின்ருன். இந்த 'மூச்சு' இன்ப வாழ்வு ஆகுமோ?

தானும் உழைத்து, மற்றவரும் தன்னேடு கலந்து உழைக்க, அவ்வுழைப்பினின்று எழும் உற்சாகத்தின் பயனுய் யாவரும் ஒரு மனத்தினராய் ஒருமித்துச் சுவைத்தலன்ருே இன்பவாழ்வாகும். உட்கார்ந்து வெறுமனே உண்பவர்க்கு ஊக்கம் ஏது? உழைக்காத உடம்பு உருப்படுவது ஏது? ஆண்டவனின் ஆணையை அவமதித்து, சோறு சமைக்க ஒருவன், துணி துவைக்க வேருெருவன், தண்ணீர் சுமக்க மற்ருெருவன், வெந்நீர் காய்ச்ச இன்னொருவனுமா? ஆ! நம் செல்வப் பெண்ணரசி நீராடுஞ் சாலை சென்று, ஒருத்தி நீர் முகந்து ஊற்ற, மற்ருெருத்தி உடல் தேய்க்க, நின்று, அவள் கொடுக்கும் சேலையை மிகப் பிரயாசையுடன் வாங்கி யணிந்து, அனிச்ச மலரும் அன்னத்தின் தூவியும் தனது அடிக்கு நெருஞ்சிப் பழம் என்னுமாறு அவ்வளவு மெல்லிய தன் கால்களைப் பாழுந் தரையில் கூசிக் கூசி வைத்து நடந்து சென்று, ஆசனத்தமர்ந்து, சமையற்காரன் வட்டிக்குஞ் சோற்றினை கையில் எடுத்து, ஆ! எவ்வளவு துன்பத்தோடு மெதுவாக மென்று மென்று விழுங்கிய பின்பு; அதற்கு முன்னரே ஊழியக்காரன் நீருங் கையுமாக நிற்க, அப்படியே கையலம்பிக் கொண்டு, பஞ்சு மெத்தையில் வீற்று பாக்கு, வெற்றிலை மெல்லத்தொடங்குகின்ருள். தம் சரீரத்தையே தமக்கு ஒரு பெரும்

சுமையாகக்கொண்டு களைப்புறும் இன்னோரது வாழ்வும் இன்ப வாழ்வு ஆகுமோ? தேகத்தின் ஒவ்வொரு பகுதியையும் ஆட்டி அலைக்கழித்து விடும் பிரஸவ வேதனையில் இந்தச் சரீரச் சுமையினரின் கதி என்னவோ?

"நான் முக்தன் தான்; என்றாலும் நான் கருமம் செய்யாதிருத்தல் கூடாது. நான் கருமம் செய்யாதொழியின், ஜீவராசிகளின் ஊக்கமும், உழைப்பும் தடைபட்டு நின்றுவிடும்" என்று கண்ணபிரான் கீதையில் அருளியிருக்கிறார். இதனால், இறைவனே உழைத்துக் கொண்டிருக்கும் பொழுது மனிதர்க்கு உழைப்பு மிகவும் வேண்டற்பாலது எனக் கூறவும் வேண்டுமோ? "சும்மா இருப்பது சுகம்" என்று கருதி இறைவன் தனக் களித்த உறுப்புக்களுக்கு யாதொரு தொழிலுங் கொடாது சோம்பேறி வாழ்வு நடாத்தின் அய்யன் ஆணை எளிதில் விடுமோ? இத்தகைய வாழ்வு நடத்து வோர்களைத் தன்னல முடையவர்கள் எனின் அது தவறாகாது. தன்னலம் உடையவர்களிடத்து அழுக்காறு, அவா, வெகுளி முதலிய குணங்களே மேம்பட்டு நிற்கும். செல்வர்கள் ஆடம்பர வாழ்க்கையில் தங்கருத்தை நுழைத் ததிலிருந்து, அவர்களுடைய அன்புஊற்று வற்றியது, அருட் பார்வை மறைந்தது, மன அமைதி குலைந்தது. அமைதி குலைந்த ஒருவனுக்கு இன்பம் உண்டா? செல்வர்கள் நாள்தோறும் கடவுளைத் தரிசிக்காவிட்டாலும், வைத்தியனைப் பேட்டிக் கண்டுதான் ஆகவேண்டும். நோய் அவர்களுக்கு உடற்பிறப்பு. சகோதரர்கள் என்கூற்றை மிகைப்படக் கூறலாகக் கருதலாம். சில வருடங்களுக்கு முன்பு இருந்ததைக் காட்டிலும் தற்பொழுது வைத்தியர் கள் எண்ணிக்கையில் எவ்வளவு பெருகியிருக்கிறார்கள் என்பதை நோக்கின் என் உரை மிகையாகாது. "போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து." இவ்விதமான போதுமென்ற மனம் இல்லாத இடத்தில் 'பொன் செய்யும்மருந்து' தோன்றுவதற்கின்றி, எல்லாமுமே மனப்பிணி செய்யும் மகா வேதனைகளாக மாறி, அவையே பெரிதும் அச்செல்வரானை நெருங்கிச் சூழ்ந்து பெருமூச்சுவிட்டு நோகவும் செய்கின்றன. பிறர் நலம் விடுத்துத் தன்னலம் மிகுந்து, அன்பு குறைந்து ஆசை நிறைந்து வாழத் தலைப்பட்டதி லிருந்து தான் வாழ்வு துன்பவாழ்வாக மாறியது.

பொறாமை, ஆசை, கோபம் முதலியவற்றால் நேரும் தீங்கிற்குப் புராணேதிகாசங்களில் இருந்து உதாரணங் கூறவேண்டியதில்லை. நம்மையே நாம் எடுத்துக் கொள்வோம். நேற்று பழங் கந்தலைக் கட்டியிருந்தவன் இன்று பட்டாடை புனைந்திருப்பின் நமக்குப் பொறுப்பதில்லை. நேற்று குடிசை கட்டி வாழ்ந்தவன் இன்று கோபுரங் கட்டி வாழ்ந்தால், "அவன் கிடக்கிறான் நேற்றுவந்த வாழ்வுக்காரன்; கடுகு சிறுத்தாலும் காரம் போகுமா? புலி பசித்தாலும் புல்லைத் தின்னுமா? பரம்பரை பணக்காரன் நான்தான்" என்று வீண்பெருமை பாராட்டி, அவன் ஆகும் என்பதை நாம் ஆகாதென்றும், அவன் கிழக்கு என்றால் நாம் மேற்கு என்றும் ஒவ்வொன்றிற்கும் மாறுபடப் பேசி நாமே உயர்ந்தவன் என்பதைக் காட்டிக்கொள்ள முந்துகிறோம். இப்பொறாமையே பின்னர் அவனை யெங்ஙனமாவது தாழ்த்திவிட வேண்டு மென்னும் ஆசையாக மாறி, அவ்வாசை கோபமாக முடிகிறது. இந்த வாழ்வு இன்ப வாழ்வு ஆகுமா?

(தொடரும்.)

பே. இராமாநுஜ ரெட்டியார்.

பிரபஞ்ச நவீனங்கள்

1. ஸையாம் (Siam) தேசத்தில் கல்யாணத்திற்கு வருகிறவர்கள் எல்லாரும் தம்பதிகளுக்கு வெகுமதி கொண்டுவரவேண்டும். அரபியா தேசத்தில் கல்யாணத்திற்கு இரண்டு நாள் முன்னால் மணமகள் மணப்பெண்ணுக்குப் பணம் வெகுமதி கொடுக்கவேண்டும். நார்வே தேசத்தில் கல்யாணத்திற்கு வருகிறவர்கள் எல்லாரும் மணப்பெண்ணுக்கு ஜாடிகளில் வெண்ணெயை நிரப்பி வெகுமதி கொடுக்கவேண்டும். பர்பரி (Barbary) தேசத்து மூர்ஜாதியாரில் கல்யாணத்திற்கு வருகிறவர்கள் எல்லாரும் மணமகன் தலைப்பாகையில் அத்தேசத்து நாணயம் ஒன்றைச் சொருகுவார்கள். நமது தமிழ் நாட்டில் கல்யாணத்திற்கு வருகிறவர்களெல்லாரும் ஆசீர்வாதத்தின் பொழுது மோதிரப்பணம் போடவேண்டும். இங்கிலாந்தில் கல்யாணம் ஆனவுடன் சதிபதிகள் தனிக்குடித்தனம் செய்வதற்காக அவர்களின் பெற்றோர்கள் ஏற்பாடு செய்வார்கள். நமது நாட்டிலோ இந்த வேளையில்தான் மாமி நாத்திகளின் கொடுமையும் கலகமும் ஆரம்பமாகும்!

2. ஜெர்மனி தேசத்தின் பிரதான நகரமாகிய பர்லின் நகரத்து மனிதன் ஒருவன் தன்னுடைய புகைப்படத்தை ஆஸ்டிரியா தேசத்திலுள்ள வியன்னா என்னும் நகரிலுள்ள தன்னுடைய ஸ்நேகிதன் அல்லது உறவினர் இவர்களுக்கு அனுப்ப இஷ்டப்பட்டால் நம்முடைய தேசத்து வழக்கப்படி தபாலில் ரிஜிஸ்டர் செய்து அனுப்ப வேண்டியதில்லை. தந்தி மூலமாய் அனுப்ப ஏற்பாடாயிருக்கிறது. இந்த வழியாய்ப் படங்கள் மாத்திரமல்லாமல் எவ்வித ஸமாசாரத்தையும் அனுப்பலாம். நமது தேசத்தில் தமிழில் தந்தி யடிக்க முடியாமல் ஆங்கிலம் தெரிந்தவர்களிடம் சென்று அந்த விஷயத்தை ஆங்கிலத்தில் எழுதிப் பிறகு தந்தியடிப்பது வழக்கம். அத்தேசத்தில் இப்பொழுது அப்படியல்ல. தமிழன் ஒருவன் தமிழ் எழுத்தில் எழுதின ஒரு கடிதத்தை பர்லின் தந்தியாபீஸில் கொடுத்தால், அந்த ஆபீஸ்காரர்கள் நமது தேச வழக்கப்படி வார்த்தைகளை எண்ணாமல் எவ்வளவு விஸ்தீரணம் அந்த கடிதம் எழுதியிருக்கிறது என்று கணக்கு செய்து அதற்குத் தகுந்த தொகையைக் கேட்பார்கள். உதாரணமாக, பத்தொன்பது ஸெண்டிமீட்டர் நீளம், பத்து ஸெண்டிமீட்டர் அகலத்திற்குமேல் படமோ, கடிதமோ வாங்குவதில்லை. ஒரு சதுர ஸெண்டிமீட்டருக்கு அத்தேசத்து நாணயத்தில் இரண்டு மார்க்கு கட்டணம் வாங்குவார்கள். அதற்குமேல் அந்த கடிதத்தை படத் தந்தி யந்திரத்தில் (Picture Telegraph Machine) வைத்து அந்த இயந்திரத்தின் விசையை முடிக்கிவிட, சில நிமிஷங்களுக்கெல்லாம் வியன்னாவில் தந்தியாபீஸ் இருட்டறையில் ஒரு புகைப்படமெடுக்கும் கண்ணாடித் தகட்டில் அந்த அச்சு விழும். அதை உடனே படங்கள் கழுவுகிறதுமாதிரி இருட்டறையில் சிவப்பு வெளிச்சத்தில் கழுவி, பிரதி எடுத்து விலாஸதாருக்குக் கொடுக்கப்படுமாம். இந்த அதிசய இயந்திரம் போலீஸ்காரர்களுக்கு மிகவும் உபயோகமாகி வருகிறது. யாராவது ஒருவன் போலீஸுக்குப் பயந்து மறைந்து ஓடிவிட்டால் உடனே அவன் கையெழுத்து, அவன்

ஸ்திரீகளின் பலத்தினால்தான் ஆண்மக்கள் பலமுறுகின்றனர்.—(ஸ்ரீ. ல.)

படம் முதலியவைகளைத் தந்தி மூலமாய் அத்தேசத்தின் எல்லா நகரங்கள் கிராமங்கள் முதலியவைகளுக்கு அனுப்பிவிட்டால், சீக்கிரம் தப்பியோடினவர்கள் அகப்பட்டுக் கொள்கிறார்கள்.

3. இப்பொழுது நாம் உபயோகப் படுத்தும் கண்ணாடி மிகவும் அபாயகாமானது. மோட்டார்களில் இணைக்கப்பட்டிருக்கும் கண்ணாடி, ஏதாவது வண்டிக்கு விபத்து ஏற்பட்டால் உடைந்துபோய் அருகில் உட்கார்ந்திருப்பவர்கள் தேகத்தில் காயங்கள் ஏற்படுத்தி உருவத்தை விகாரப்படுத்துகிறது. இப்பொழுது இங்கிலாந்தில் ஒரு புதிய கண்ணாடி கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. அதை என்ன வளைத்தாலும் ஒடிகிறதில்லை. நன்றாய்ப் பளிங்குமாதிரி தெரிகிறது. அதன் வழியாய் சீதோஷ்ணங்கள் பரவுவதில்லை. இந்தக் கண்ணாடியைச் சுருள்களாய் சுருட்டி கஜம் இன்ன விலையென்று குறிப்பிட்டு விற்பனையாகிறது.

4. ஆகாய விமானங்கள், கப்பல்கள் இவைகளுடைய இயந்திரங்களில் உபயோகப்படுத்தும் எண்ணெயை வெட்டுக்கிளியின் ஸத்திலிருந்து இறக்குகிறார்கள். மற்ற எண்ணெய்களைவிட மிகவும் குளிர்ந்த பிரதேசங்களில் இந்த எண்ணெய் கட்டியாகாமல் ஜல ரூபமாகவே இருக்கிறது.

5. நாம் நமுடைய வீட்டு எலிகளைப் பிடிக்க பூனைகளை வளர்க்கிறது போல, அமெரிக்காவில் மெக்ஸிகோ என்னும் தேசத்தில் விஷமில்லாத பைதான் என்னும் பாம்புகளை எலிகளைப் பிடுப்பதற்காக வீட்டில் வளர்க்கிறார்கள்.

6. மரங்களையும் செடிகளையும் அழிக்கும் பூச்சி புழுக்களின் எண்ணிக்கை இரண்டு லக்ஷம் என்பர்.

7. யூத ஜாதியாரால் பூஜா காரியங்களுக்கு உபயோகப்படுத்தும் "எந்ராக்" என்ற ஒருவித நார்த்தை தான் உலகத்திலுள்ள பழங்கள் எல்லாவற்றிலும் மிக விலை உயர்ந்தது. மத்திய தரைக்கடலிலுள்ள சிரேக்கர்களின் தீவுகளிலும், மெஸொபடேமியா தேசத்தில் பலஸ்டைன் என்னும் இடத்திலும் தான் இப்பழம் பயிராக்கப்படுகின்றது. இப்பழம் ஒவ்வொன்றுக்கும் ஐந்து பவுன் விலை. பழம் மிகவும் கசப்பானதால் தின்பதற்குப் பிரயோஜனமில்லை. ஆனால், மிக்க வாஸனையுடன் கூடியிருப்பதால் ஒரு பழத்தினால் ஒரு பெரிய ஹால் முழுவதும் அதன் சுகந்தம் கமகமவென்று வீசும். வேறு ஊதுவத்தி ஸாம்பிராணி முதலிய வாஸனைத் திரவியங்கள் வேண்டியதில்லை. இது ஒன்றே போதும்.

8. அவரைக்காய் ஜாதிகளில் வானிலா அவரை என்ற ஜாதிதான் மிகவும் விலை யுயர்ந்தது. மிகவும் உருசிகாமாயிருக்கும். மெக்ஸிகோ தேசத்தில் அபரிமிதமாய் விளையும். அவைகளைப் பறிக்குமிடத்திலேயே ஆயிரம் முப்பது ரூபாய் விலை போகும். வருஷத்தில் ஆறுகோடி அவரை வியாபாரமாகும். மருந்து செய்பவர்களாலும் பக்ஷணம் செய்பவர்களாலும் ஏராளமாய் உபயோகிக்கப்பட்டு வருகின்றன. அந்த அவரை வத்தல் ஒரு பவுண்டு நிறை 20-ரூபாய் விலையுள்ளதாகும்.

9. ஜூலுலாண்டு என்னும் தேசத்தில் இரவில் நக்ஷத்திர வெளிச்சத்திற்கு எழுமைலுக்கு அப்பாலுள்ள மரம் செடிகள் கண்களுக்குத் தெளிவாகத் தெரியும்படி ஆகாயம்

நாம் பிரமாதமாகப் பேசுவதை நிறுத்தி, நமது செய்கைச் சக்தியை அதிகபடுத்திக்கொண்டு அதை நமது அனுஷ்டிப்பில் காட்டவேண்டும்.—(ஸ்ரீ. ல.)

அவ்வளவு பிரகாசமா யிருக்கிறது.

10. போர்னியோ தேசத்தின் கடற்கரைக்கு அருகாமையில் சில தீவுகள் ஸமுத்திரத்தில் மிதந்து செல்கின்றன. அவைகளில் பெரியது எழு எக்கர் விஸ்தீரணமுள்ளது. நூறு அடி உயரமுள்ள பனைமரங்கள் அத்தீவில் வளர்ந்திருக்கின்றன.

11. தென்னம்பிள்ளை அதனுடைய எட்டாவது வயதில் காய்க்கத் தொடங்கி, அதற்கு எண்பது வயதாகுமட்டும் வருஷத்திற்கு நூறு காய்கள் விகிதம் காய்க்கும்.

12. ஒரு அவுன்ஸ் நிறையுள்ள சிலந்திக்கூட்டை எடுத்து ஒவ்வொரு நூலையும் பின்னலிலிருந்து பிரித்து நீட்டினால் மொத்தம் இரண்டாயிரத்தைந்நூறு மைல் நீளமிருக்கும். ஒரு கஜ நீளமுள்ள நூலை எடுத்து அதே விஸ்தீரணங்களையுடைய எஃகுக் கம்பியையும் எடுத்துப் பார்த்தால் இந்தக் கம்பியைவிட நூல் அழுத்தமாயிருக்கும்.

13. எடக்ஸாஸ் தேசத்தில் பண்டோரா என்னும் பட்டணத்தில் ஒவ்வொரு கையிலும் காலிலும் ஆறு விரல்கள் உடைய மனிதர்கள் அதிகம்.

14. ஒரு எலுமிச்சம் பழத்தைச் சூடேற்றிப் பிழிந்தால் இரண்டு பங்கு ரஸத்தை இறக்கலாம்.

15. லண்டனில் எல்லா வண்டிகளையும் இடது பக்கமாய் ஓட்டுகிறார்களாம். பாரீஸ் நகரத்தில் வலது பக்கமாய் ஓட்டுகிறார்களாம். லண்டனில் சிற்றுண்டி விற்குமிடங்களுக்கு 'கிளப்பு' என்றும், பாரீஸில் காப்வே (Cafe) என்றும் பெயராம். லண்டனில் எல்லாரும் டீகுடிக்கிறார்களாம். பாரீஸில் காபி குடிக்கிறார்களாம். லண்டனில் ஒருநாளைக்கு 3-அல்லது 4-தரம் சாப்பிடுவது வழக்கமாம். பாரீஸில் இரண்டுதடவைதான் சாப்பிடுவார்களாம். லண்டனில் ரொட்டியப்பங்கள் சதுரமா யிருக்குமாம். பாரீஸில் நீண்டிருக்குமாம். லண்டனில் தொழிலாளர்களெல்லாம் சாதாரணமாய்க் குழாய்களில் சுருட்டு பிடிப்பார்களாம். பாரீஸில் சிகரெட்டுகள் தான் பிடிப்பார்களாம். லண்டனில் சாப்பிடும் பொழுது ஆகாரத்தில் கவனமாய் மௌனமா யிருப்பார்களாம். பாரீஸில் எல்லோரும் பேசிக்கொண்டு தமாஷாய்ச் சாப்பிடுவார்களாம்.

16. நயூப்ரன்ஸ்விக் என்னும் தேசத்திற்கு அருகாமையிலுள்ள ப்வண்டிக் குடாக்கடலில் (Boy of Fundy) அலைகள் நூறு அடி உயரம் எழும்பி மோதுமாம்.

S. A. ஸ்ரீநிவாச சர்மா.

நேற்று தான் அரிசி போட்டோமே! இன்றும் பிச்சைக்கு வந்துவிட்டானே! ஒருநாளைக்குப் போடலாம், என்றைக்கும் முடிகிறதா! என்று எண்ணாதே. வயிற்றுப் பாடு பெரிய பாடு. மானம் சுருங்கி வந்து கேட்கையில் பிடி அரிசியாவது எடுத்துப் போட்டு அனுப்பு. இதில் உன் செல்வம் குறைந்து விடாது. ஆனால், அப்படிப் பல பிடி அரிசி ஒரு ஏழைக் குடும்பத்தின் பசிநோயை ஆற்றி விடுகின்றதென்பதை நீ மறவாதே.

பழமொழிக் குறிப்புகள்

1. அன்பு.

(34-ம் பக்கத் தொடர்ச்சி.)

97. "ஆத்தாளை அக்காளைப் பேசினதில் கோபமில்லை; ஆம்படையாளைப் பேசினதற்குத் தான் கோபம் பொங்கிப் பொங்கி வருகிறது."

நாளைக்கும் இந்தப் பழமொழியை வெகுபேர் கல்யாண மாப்பிள்ளைகள் கேட்டுக்கொண்டு நொந்து போகிறார்கள். அறியாத்தனமாய் ஏனப்பா விவாகம் செய்து கொண்டோம் என்று கலங்குகிறார்கள். சந்தோஷப்பட, எல்லோருடனும் கூடி வாழ்ந்து இன்பம் காண எவ்வளவோ செலவின் முடிவில் இந்தக் கல்யாணத்தைச் செய்துகொள்ளப்போக, அது துன்ப வாழ்வுங் கண்ணீருமாக முடிவதாயின், ஆ! அது எத்துணை பரிதாபம்! கல்யாண ஆசை யாருக்குத்தான் இல்லை? ஏதோ வெகுநாள் எதிர்பார்த்து விவாகம் செய்துகொண்ட இடத்தில், புதிதாக வீட்டுக்கு வந்த மனையாளிடம் ஒரு பிரீதியும் ஆதரவும் காண்பித்தால், அது வீட்டில் இருக்கிற பெரியோர்களுக்குப் பொறுக்கிறதில்லை. என் அண்ணன் அண்ணியிடம் மயங்கிப்போனான்; இனி நான் வந்தால் போனால்கூட வாவென்று சொல்லமாட்டான். இப்படியாகுமென்று தெரிந்தால் இந்த மூதேவியைக் கட்டியே இருக்கமாட்டோம் என்கிறாள். தங்கை! அக்கா வந்திருக்கிறாள் என்று கொஞ்சமாவது கவனிக்கிறானா? —என் குழந்தைகளை முன்னைப்போலத் தூக்கி எடுத்துத் திரிகிறானா? ஒரு குளிர்ந்த சொல் உண்டா? ஒரு சிரிப்பு உண்டா? எந்நேரமும் அறை வீட்டுக்குள் அவளோடேயே பேச்சு சரியாயிருக்கிறது. இதற்குள் இவ்வளவு படுமோசமாக என் தம்பி மாறுவானென்று எண்ணவில்லை. இனி நாங்கள் வந்து போகும் நிலையில் இந்த வீடு இருக்காது. எல்லாம் அந்த சீமை ராணி வைத்த திட்டத்திலும் சட்டத்திலும் தான் இனி நடக்கும் என்கிறாள் தமக்கை! ஒரே மகனென்று ஊட்டி ஊட்டி வளர்த்தேனே! கிளியை வளர்த்துப் பூனையிடம் கொடுத்ததுபோலானேனே! இந்த நாசகாலி வந்து என் வீடு இவ்விதம் ஆச்சுதே என்று தாயார் தன் பிரஸங்கத்தை ஆரம்பிக்கிறாள். விவாகமானவன் சாதாரணமாகச் சொல்லும் ஒரு சொல்கூட வேறு பொருளாக வித்தியாசமாகப் படுகிறது. இனி, வீட்டுக்கு வந்த பெண்ணுக்கோ அன்புமில்லை, ஆதரவுமில்லை. ஸதா அவளிடம் குற்றம் காண்பதே எல்லோருக்கும் பெரிய உத்தியோகமாகி விடுகிறது. விவாகமானவன் இந்தத் தாறுமாறுகளையெல்லாம் பொறுத்துப் பார்த்துவிட்டு அவனுக்கே தன் மனைவியினிடம் ஒரு இரக்கம் ஏற்பட்டுப்போய் அவளுக்காகப் பரிந்து பேசுவதற்குவந்து ஒரு வார்த்தை எப்படியோ சொல்லி விடுகிறான். அந்த சமயத்தில் புருஷன் பலத்தை

ஒரு மனிதன் தன் சங்கதியை ஒரு நாளைக்குச் சொல்லலாம். தினமும் அதே சங்கதியை அடிக்கடி எடுத்துச் சொல்வதற்குக் காரணம் என்ன? தான் படுகிற கஷ்டத்தை மற்றவர்கள் தெரிந்துகொள்ள வேண்டுமென்றா?

நினைத்துக்கொண்டு அந்த சின்னவளும் இரண்டொரு வார்த்தையைத் துணி வாய்ப் பேசிவிடுகிறுள். உடனே மூண்டுகொள்ளுகிறதப்பா கலக நெருப்பு! அந்த அக்கினிச் சுழலின் மத்தியிலே—"**ஆத்தாளே அக்காளைப் பேசினதில் கோபமில்லே; ஆம்படையாளைப் பேசினதற்குத்தான் கோபம் பொங்கிப் பொங்கி வருகிறது**" என்ற பழமொழியைக் குத்துச்சொல்லாய்ச் சொல்லி தங்கை, தமக்கை, தாயார், இன்னுமுள்ளவர்கள் எல்லோருமாகச் சேர்ந்து கொண்டு விவாகக்காரனை எதிர்த்து வீட்டையே பெரிய படுகளமாக்கி விடுகிறுர்கள். அந்த சமயத்தில் விவாகக்காரனின் இன்ப வாழ்வு, தன் மனைவியிடம் வைத்த அன்பு வாழ்வு—எல்லாம் கண்ணீர் வாழ்வாய் விடுகிறது. அவனுடைய மனே நிலைமை அத்தருணம் எப்படி யிருக்குமோ! எங்கேயாவது ஆறு கிணறுகளில் விழுந்து உயிரை விட்டுவிடவும் பார்க்கிறுன். அப்படியே உயிர் துறந்தவர்களும் உண்டு. இவ்வளவுக்கும் காரணம் என்ன? அன்பின் குறைவே. வந்த புதிய பெண்ணை அன்பும், ஆதரவும், அத்துடன் புத்தி சொல்லித் திருத்துதலுமாகக் கொண்டுபோய் பெரிய சமாதான புத்தியுடன் ஒன்று கூடி நின்றிருந்தால் எவ்வளவு நன்முக இருந்திருக்கும்?

மேலே சொன்னது ஒரு தினுசு. இன்னென்றுவது:—ஒண்டியாய்த் தாயும் மகனுமாக இருந்து கொஞ்சம் ரூபாயில் காலம் தள்ளிய ஒரு குடும்பத்தில், தன் மகனுக்கு விவாகமானதும் அந்த ஸந்தோஷப் பூரிப்பிலே, தன் குமார்த்திகள், தன் மூத்த மகன், அவன் மனைவி, தன் இளைய குமாரர்கள் இத்தனை பேரையும் தன்னேடு வீட்டில் வைத்துக்கொள்ளப் பார்க்கிறுள். வந்த புதியவளுக்கு மத்தியிலே, இவர்கள் தன்னைச் சேர்ந்தவர்களாய்த் தனக்கு ஒரு ஆதரவும் பலமுமாய் இருக்கவேண்டுமென்று நினைத்துத் தன்னிடம் இறுத்திக் கொள்கிறுள். ஸம்பாதிக்கிற மகனுக்கோ, கல்யாணக் கடனின் பாரம் ஒருபக்கம், வீட்டின் அசாத்தியமான செலவுகள் ஒரு பக்கம், எவ்வளவுக்கு வாங்கிப் போட்டாலும் குற்றம் குறைகள் குசுகுசு வார்த்தைகள் புறப்படுகிறது ஒருபக்கம், தன் தாயார் மற்றவர்களிடம் பக்ஷமாயிருப்பதும்—தன்னை முணுமுணுப்பதும் இன்னெரு பக்கம், இவ்வளவும் சகித்துப் பார்த்துப் பிறகு தாங்காமல் கொதித்துத் துள்ளுகிறுன். அவன் மனைவியும் மற்றெரு பக்கம் மீறுகிறுள். மாமி வீட்டாரும் மருமகனைத் தூண்டுகிறுர்கள். உடனே வீடு பற்றிக்கொள்கிறது! கலக நெருப்புக்கு என்ன காரணம் என்று அண்டை வீட்டுச் சண்டை கண்ணுக்குக் குளிர்ச்சி என்பதாய் அடுத்த வீட்டாரும் எதிர் வீட்டாரும் வந்து விசாரிக்கப் புகுகின்றுர்கள். அப்பொழுது பல வார்த்தைகளின் மத்தியிலே விவாகக் காரனின் காதிலும் விழும்படியாக—"**ஆத்தாளை அக்காளைப் பேசினதில் கோபமில்லே, ஆம்படையாளைப் பேசினதற்குத்தான் கோபம் பொங்கிப் பொங்கி வருகிறது**" என்று சொல்ல ஆரம்பித்துக் கொள்கிறுர்கள். ஆ! கல்யாண சுகமே!!

இனி வேறெரு தினுசாவது:—சிலர் விவாகமானதும் புது ஜோராக மாறிவிடுகிறுர்கள். மாமி வீடு தான் தங்களுக்கு ஆதரவான இடம் என்று மதி மயக்கம் கொள்கிறுர்கள். தாயார், ஸகோதர ஸகோதரிகள் எல்லோரையும்

எல்லா துப்பறியும் கதைகளிலும் யாராவது கொலை யென்றும், அதற்குக் காரணம் ஸ்திரீ—நகை—சொத்து என்றும் ஏற்பட்டிருக்கிறது. கதையின் விரிவுக்கு இது தாய்ச்சரக்கோ! கொலையின்றி எழுத வாராதா?

மறந்துவிடுகிறார்கள். வந்த பெண்ணும் வாய்ப்பட்டியாய் எல்லோரையும் கண்டபடி பேசிவிடுபவளா யிருக்கிறாள். அவளுக்குப் பின்பலமாக அவள் தாயார் வீட்டினரும் வந்து குந்திக்கொண்டு முழம் போடுகிறார்கள். இந்தப் புது மனிதனுக்கோ தன் மனைவி தன்னவர்களைத் திட்டுவதில் ரோசம் பிறக்கக் காணோம். அவர்கள் தன் அழகான (1) மாமியையும், சிங்காரச் சிறுக்கியான தன் நேச (?) மதுரக் கண்ணாட்டியையும் ஒரு சொல் சொல்லிவிட்டால் உடனே ஆகாசம் வரைக்கும் கோபம் பொங்கிக்கொண்டு அவர்களுக்காகப் பரிந்து பேசவந்து, எப்படி அவர்களை வையலாம், என் வீடு என்று மதித்து அவர்கள் வந்திருக்கும்போது அவர்களை என் கண்முன்னே அத்தனை இழிவாகப் பேசுகிறதா, இதற்காகத்தானா நான் அத்தனை பாடுபட்டு உங்களுக்கெல்லாம் தண்டச்சோறு போடுவது என்று ஆங்காரத்துடன் குதிகுதிக்கிறான். அந்த சுபமுகூர்த்த வேளையிலே மேலே சொன்ன பழமொழியைக்கொண்டு தாயைச்சேர்ந்தவர்கள் ராமபாணம் போல் சொல்லி இவளைத் துளைக்க முயலுகிறார்கள். கலியாணமான வீடு கண்ணீர் விடும் சுடுகாடு ஆகிவிடுகிறது. பிப்ரவரி மாதத்திற்கு 30-ம் தேதி யில்லாவிட்டாலும் இனி அப்படி ஒரு புது தேதி புறப்பட்டாலுங்கூட, அந்தத் தேதியிலும் இந்தத் திருவிழா நடக்கக் காணலாம். ஒருவருக்கொருவர் அன்பும் துணையுமாய்ப் பேதபுத்தி யில்லாமல் ஒருமித்திருந்தால் இப்படி யெல்லாம் நடக்குமா?

98. "ஆக்கவேண்டாம் அரிக்கவேண்டாம் பெண்ணே, என் கிட்ட இருந்தால் போதுமடி கண்ணே!

மற்றவர்கள் உழைக்கட்டும், ஆக்கட்டும், வேலை செய்யட்டும், நீ ஏனடி அங்கே போய் உன் பொன்னான மேனியைக் கெடுத்துக் கொள்கிறாய்? இங்கேயே இரு என்று தன் மனைவிக்குச் சொல்லிக் கொடுத்துக் கெடுக்கிற புருஷன் கூறும் பழமொழி இது. இந்தப் போதனைகளுக்குப் பிறகு அவளும் தன் மாமி முதலியவர்களை மதிக்கப் போகிறதில்லை. அவர்கள் இடும் சாபத்திலே இவனும் விளங்கி வாழப்போகிறதில்லை. மனைவியிடம் அன்பு காட்ட வேண்டியது தான். அதிலும் ஒரு எல்லையுண்டு. செல்லம் கொடுத்துக் குட்டிச் சுவராக்கக் கூடாது. "மனையாளை மஞ்சத்தில்" என்பதைக் கவனிக்கவும்.

99. கல்லையாகிலும் கரைக்கலாம், மனதைக் கரைக்கலாகுமா?

முன்பு அன்பு காண்பித்துப் பிறகு முழுதும் மனம் மாறிப்போய், வலிய வலிய வந்து நுழைந்தும் ஏன் என்றுகூடக் கேட்காத கல்லினும் கடினமான புது மனதாய் மாறிப்போன பாவிகளைப் பார்த்துச் சொல்லும் பழமொழி. இப்படி மாறிப்போய் வாரிக்கொள்ளும் லாபமென்னவோ!

100. கொடும்பாவியானாலும், கொண்டமாமியார் வேண்டும்.

இப்படி மாமியை உயிருக்கு உயிராய் எண்ணி அவளைத் தெய்வம் போல் பூசிக்கும் பெண் பதினாயிரத்தில் ஒன்றுகூட இருக்குமோ என்னவோ! அப்படிப்பட்ட அன்பு காட்டி வணங்கும் உத்தமிக்குத் தான் வெகு சீக்கிரம் மாமி கண்மூடிக்கொண்டு போய்விடுகிறாள். அத்தகைய தங்கக்கட்டியான மருமகளிடம் வாழக் கொடுத்து வைக்காமல் அந்த மாமிகள் போய்விடுகிறார்

எல்லா மனிதர்களுக்கும் கோபம் அபாயகரமானது. ஆனால் ஒருமித்த குடும்பஸ்தர்களுக்குள் அது பெரிய பிரிவு ஆயுதமா யிருக்கிறது.

கள். இரண்டும் நல்லதாகக் கூட்டிக்கொண்டால் ஐயோ பகவானே! அங்கே கண் திருஷ்டி விழுந்துபோகிறது. ஈசா! நீயும் அந்த நல்ல முத்துக்களிடத்திலேயே சோதனை காண்பித்துவிடுகிருய். ஒருவரிலிருந்து ஒருவரைப் பிரித்துக்கொண்டு போய்விடுகிருய். இப்படியாகத் தன் மாமியை இழந்த தங்கவிக்கிரகமான மருமகள் தன்னை ஒரு கொடும்பாவியாக நினைத்து வருந்தி,

இந்தியாவிலுள்ள 33—கோடி ஜனங்களிலே ஒவ்வொருவரும் கடவுளிஞல் சிருஷ்டிக்கப்பட்ட சிறிய ஆலேகளாவர். இந்த ஜன ஆலேகள் உபயோகிக்கப்படாமல் சேதமடைகின்றன. இவ்வளவு சக்திவாய்ந்த மனிதர்களைச் சர்க்காவில்உழைக்கச் செய்ய மகாத்மாவே எண்ணிஞர். அன்னியத் துணியால் 55 கோடி ரூபா இந்தியாவிலிருந்து அயலூர் போவதைத் தடுக்க வழி கதர் தான்.

தான் மாமியுடன் இருந்துவாழ, அவளுக்கு அன்னம் பரிமாறி ஆசையுடன் வட்டிக்க, அவள் தனக்குச் சடைபோட்டு சிங்காரித்துத் தன் அழகைப் பார்க்க, தாய்க்குத் தாயாய் மாமிக்கு மாமியாய் அவளோடு இருந்து அருமையும் பெருமையாய் மகிமைப்பட, மேன்மை கொள்ள—இல்லாமற் போயிற்றே என்று நெஞ்சு வெந்து தன் மாமியை எண்ணிக் கண்ணீர் விட்டுச் சொல்லும் பழமொழி இது. இத்தகைய உத்தமிகள் ஒரு சிலராவது இருப்பதால்தான் உலகத்தில் இவ்வளவுக்காவது மழை பொழிகிறது. நல்லவளுக்குத்தான் எல்லா சோதனையும் பிரிவும் நேருகிறது. இதுவும் ஆண்டவனின் கூத்துதான்!

(தொடரும்.)

மனது நொந்து எழுதிய ஒரு துண்டு.

"அந்த வேலையைச் செய்து வரும்படி உனக்குச் சொல்லி எத்தனை நாட்களாயின? செங்கல்லால் கட்டிய சுவரிடம் சொல்லுவதும், உன்னிடம் சொல்லுவதும் ஒன்றுதான். இது வரையில் நீ பிள்ளையாய்ப் பிறந்ததுமுதல் எந்த வேலையை யாவது குறிப்பிட்ட காலத்தில் செய்து முடித்திருக்கிருயா? நீ மனித ஜென்மமானுல் புத்தியிருக்கும். எருமைக்கடா பிறக்கும் நேரத்தில் பிறந்தவனுதலால்தான் அதைப்போலவே இருக்கிருய். எப்போது தேடினுலும் அவசரத்திற்கு வீட்டில் இல்லாமலும், உன் கெட்ட சகவாசக்காரர்களோடு ஊர் சுற்றுவதுமாய் வீண்காலம் தள்ளுகிருய். எருமை மாடே! இனியாவது உனக்குப் புத்தி வருகிறதா பார்ப்போம்."

குழந்தைகள் பக்கம்

இந்தியாவில் ராஜாவும் ஜனங்களும்.

(47-ம் பக்கத் தொடர்ச்சி.)

இந்தியா தேசத்துக்கு முற்காலத்தில் 'பரதகண்டம்' என்று பெயர் கொடுக்கப்பட்டிருந்தது. அப்போது 56-தேசங்கள் என்றும், 56-ராஜாக்கள் என்றும் நமது புராணங்கள் முதலான புஸ்தகங்களில் சொல்லப்படுகின்றன. அயோத்தி, காசி, மகதம், காஷ்மீரம், கூர்ச்சரம், மகாராஷ்டிரம், கலிங்கம் இப்பெயர்கள் கொண்ட தேசங்கள் நமது பழய புராணங்களில் சொல்லப்படுகின்றன. அவைகள் முற்காலத்தில் செழித்தனவேயன்றி இப்போது அழிந்து போய்விட்டன. சேர, சோழ, பாண்டியர் என்கிற தமிழ்நாட்டு அரசர்களும் அப்போது செழித்தவர்களாயினும் இப்போது இல்லை. இவர்கள் ஆண்டுவந்த மலையாளம், தஞ்சை, மதுரை ஆகிய தேசங்கள் இப்போது ஆங்கிலேயர்களால் ஆளப்பட்டு வருகின்றன. முற்காலத்தில் 56-தேசங்களென்று பெயரேயொழிய அடிக்கடி புது தேசங்களும், புது ராஜாக்களும் தோன்றி ஆண்டு வந்தார்கள். அடிக்கடி இந்த ராஜாக்கள் ஒருவரோடு ஒருவர் சண்டை செய்துகொண்டே இருந்தார்கள். எந்த ராஜவமிசமாவது ஆதிகாலந்தொட்டு இந்தக் காலம் வரையில் ஆண்டதாகக் காணோம். இக்காலத்திலுள்ள ஹிந்து ராஜாக்கள் எல்லாம் சமீபத்தில் 100-அல்லது 200-வருஷங்களுக்கு முன்னால் ஏற்பட்டவர்கள். அவர்களின் காலத்துக்குமுன்னால் இந்தியாவில் 56-அல்லது 560-ராஜாக்களும் இருந்திருக்கக்கூடும். சிறிய ராஜாக்களாகவும் புதிது புதிதாகத் தோன்றி சிலகாலம் நிலைபெற்று, பிறகு அழிந்துபோகிற ராஜாக்களாகவும் இருந்தபடியால், அவர்களுக்கு விசேஷமான பலம் எதுவும் ஏற்படவில்லை. ஜனங்களுக்கும் அவர்களிடத்தில் அபிமானம் உண்டாகவில்லை. எந்த ராஜா எங்கே ஆண்டால் என்ன? நமது ஜீவனத்துக்குத் தொந்திரவு இல்லாமல் நடந்தால் போதும் என்று ஜனங்கள் அலக்ஷியமாய் இருந்தார்கள். பழயகாலமாகிய அக்காலத்தில் க்ஷத்திரியர் என்ற ஜாதியாரே யுத்தம் செய்வோராய் இருந்தார்கள். மற்ற ஜாதி ஜனங்கள் சண்டைசெய்யும் தொழிலில் பிரவேசித்ததில்லை. இந்த க்ஷத்திரிய ஜாதியும் வரவரக் குறைந்துபோய் மற்றப் பல ஜாதிகளுடன் கலந்து போயிற்று.

(தொடரும்.)

விவேகம்
விநோதம்
விசித்திரம்
விகடம்

விகடப்ரதாபன்

REGISTERED TRADE MARK

அநுபவம்
அற்புதம்
ஆச்சரியம்
ஆநந்தம்

கோயிலிலே கோணங்கிகள்!



எதற்காகக் கோவிலுக்குப்போகிறதென்று விகடன் கேட்கிறேன். 'கோவில்' என்றால் அதன் உண்மையான மகிமையையும் பரிசுத்தத்தையும் என் நஞ்சான் குஞ்சான்கள் தெரிந்துகொண்டிருக்கிறார்களா? கோயிலின் வாயிலை நெருங்குகையிலேயே மனது பரவசப்பட்டுப் போகவேண்டுமே. பக்தியின் வலையிற்பட்டுத் தன்னையே மறந்துவிடவேண்டுமே. அங்கே தன் உருவே ஒரு தனி உருவாய் மாறிப் போகணுமே. தன் மனத்தைப் பக்குவப்படுத்திக் கொள்வதற்கல்லவோ கோயிலுக்குப்போவது. அப்படியிருக்க, அதன் பரிசுத்தத்துக்கு எதிரிடையாக நடக்கலாமோ? கோவில்கள் என்பதற்கு என்ன பொருளைத்தான் என் விகடக் கோணங்கிகள் கொண்டிருக்கிறார்களோ? ஆ! கோவில்களில் எவ்வளவு தப்புகள் செய்துவிடுகிறார்களப்பா! ஆ! அது மஹா பாவமாச்சுதே! கோவில் என்றால் பயபக்தி யிருக்கவேண்டாமா?

* * *

அந்தந்த வீட்டிலுள்ள அம்மாமார்களும், அய்யாமார்களும் வீட்டுக்குட்டிக் குழந்தைகளை யெல்லாம் அடியோடு இட்டுக்கொண்டுபோய் அலைச்சல் தவித்தல்பட்டுக் குறித்த கோவிலண்டை கும்பிடு போட்டு என் வீட்டுக் குடித்தனத் தொகை இவ்வளவுதான் என்று எண்ணிக்கை காண்பிக்கிற ஜனக்கணக்கு போடும் இடமா கோவில்? நார்மடி, பட்டு, கொரநாடு சேலை, பாலாமணி சேலை, மதுரை சேலை, காசிப்புடவை, பம்பாய் புடவை, கொட்டடிசேலை, புட்டா சேலை - முதலிய உயர்ந்த புடவைகளோடும், கின்காப்பு பட்டு, சைனு பட்டு, மத்தாப்பு பட்டு, மைசூர் பட்டு, வெல்வெட்டு, காஸ்மீர்பட்டு - முதலான மார்புக்கச்சைகளோடும், அம்மாமார்கள் வந்து அலங்காரம் காட்டவும், ஐயாமார்கள் சரிகை முண்டாசு, கோட்டு, பட்டுக்கரை வேஷ்டி, பாதரக்ஷை, குடையோடு வினோதமாய் நிற்கவும், இந்த நாடக வேஷத்தை வந்தவர்களெல்லாம் பார்த்துப் பெருமூச்சு விட்டு, இந்தப் புடவை என்ன விலைக்கு வாங்கினது, இந்தத் துப்

பிறர் செய்யத் தவறிவிட்ட காரியத்திற்குப் பிரமாத கோபம் கொள்பவன், தானே ஒரு சமயம் தவறிவிடும்போதுதான் அது வேண்டுமென்று செய்ததல்ல வென்பதைப் புத்திசாலித்தனமாய் உணருகிறான்.

பட்டா என்ன விலே, அந்த சொக்கா என்ன விலே என்று ஜவுளி வியாபாரம் பேசிக்கொள்ளுகிற இடமா கோவில்?

***

காதிலும், கழுத்திலும், இடுப்பிலும், கையிலும், காலிலும், தலையின் முடியிலும் லங்காணையும் தொங்காணையும் ஏற்றிக்கொண்டு ஜலஜலவென்கிற சப்தத்தைக் காட்டி சாமி சந்நிதியில் வந்துநிற்க, அதைப் பார்த்து மற்ற நங்கையர்கள் தங்களுக்கு இவ்வளவு இல்லேயேயென்று மனது வெதும்பி வேக்காடெடுத்துப் பொங்காரமும் புளியேப்பமும் கொள்ளவைக்கும் நகைவியாபாரக் கடையா கோவில்? அல்லது (P. Orr & sons) பி. ஆர். அண்ட் ஸன்ஸ் ஷாப்பா கோவில்? வீட்டிலே அடக்கமாக ஆக்கியரித்துத் தின்னவும் செலவு செய்வதற்கும் வசப்படாமலோ, மனம் ஒப்பாமலோ தூரப் பயணத்திற்கு ஓடிவந்து கொண்டமட்டும் ஆக்கிப் படைத்துக் கும்பமிட்டுச் சாப்பிட்டு வயிற்றை உப்பவைக்கும் வனபோஜன சாலேயா கோயில்? அல்லது (Picnic party) பிக்னிக் பார்ட்டியா கோவில்? பூசை, ஆராதனை, நைமித்யம், பிரார்த்தனை முதலானதைச் செலுத்த ஐந்து நிமிஷநேரம் கழிவதற்குள் ஆத்திரப்பட்டுக்கொண்டு சடுதி முடிதியாக அதை முடித்துத் தீர்த்துவிட்டு, உடனே கடை காக்ஷிக்குத் திரும்பி மிட்டாய்கள், பானை சட்டிகள், சொம்பு தவலேகள், நூதன பண்டங்கள், சித்திர வஸ்துக்கள், பொம்மை விளையாட்டுகள் முதலானவைகளில் நேரத்தைக்கழிக்க சந்தைக்கடையா, அல்லது (Exhibition) பொருள் காட்சிச் சாலேயா கோவில்?

கோவில் வேலே முடிந்ததும் அரக்கு (Arrack) சாராயம், மது பானச் சேவை செய்து கொள்ள மதுக்கடையா கோவில்? ஒருவன் ஒருத்தியிடமும், ஒருத்தி ஒருவனிடமும் நேசம் வைத்துக்கொண்டும், கண் போட்டுக் கொண்டும், அந்த ஆசை நிறைவேற நாள் பார்த்துக் கொண்டும் இருந்து, கோவிலேக் கண்டு கும்பிடப்போன சாக்காக அந்த இடங்களிலே ஆசை தீர்த்துக் கொள்ள இவர்களேச் சந்திக்க வைக்கும் இடங்களா கோவில்? யுவதிகளேப் பார்த்துப் பால்யர்களும், பால்யர்களேப் பார்த்துப் பாவைமார்களும் கண்ணோடு கண்ணேக்கு ஒட்டிக்கொள்ளுவதற்கு காதல் மாளிகைகளா கோவில்?

***

ஆண்களும் பெண்களும் கோவில் குளத்தில் முழுகிக் குளிக்கையில் மானஈனமின்றி நடந்து கொள்வதும், அந்த ஈரமுண்டுத் துணியோடு சாமிதரிசனம் செய்யும்போது ஜன நெருக்கத்தில் அக்கிரம நடத்தைகள் செய்ய எண்ணி ஒருவரோடு ஒருவர் தேய்த்துக்கொண்டும், இடித்துக்கொண்டும் மோதிக்கொண்டும் சேஷ்டைகள் செய்யவும் ஆபாச இடமா கோவில்? தாசிகளின் ஆட்டங்களேப் பார்த்துச் சாமியை மறந்து ஆடவர்கள் மயக்கங் கொள்ளவும், வாலிபர்களின் டம்பத்தைப் பார்த்துப் பெண்கள் மோகாவேசம் கொள்ளவும் நடன நாடகசாலேயா கோவில்? மேள மத்தளம், நாகசுரம் ஜாலர் வாத்தியங்களேக் கேட்டுத் தலேயாட்டி மெச்சிக் கொண்டிருக்கக் கச்சேரி மண்டபமா கோவில்? மெழுகு வர்த்தி, சாம்பிராணி, புஷ்பம், தேங்காய், கற்பூரம், அவல்,

கடலை, சக்கரை, வெல்லம், நெய், வாழைப்பழம் முதலானவைகளை அம்பாரம் அம்பாரமாய்க் குவிக்க பல சரக்கு மளிகையா கோவில்? தளிகை, சர்க்கரைப்பொங்கல், தோசை, வடை, பணிகாரம் முதலானவைகளைப் பங்கு போட்டுக் கொண்டுதின்ன தஞ்சாவூர் ராமையர் அன்னசத்திரமா கோவில்? திருடர்களுக்குக் காது கழுத்து இடுப்பில் உள்ளதைப் பறி கொடுத்து விட்டு லபோ லபோவென்று வாயிலடித்துக் கொள்ளும் வழிப்பறியிடமா கோயில்?

***

வடகலை தென்கலை வாதம், என் பங்கு, உன் பங்கு—என்கிற தகரார் நடக்கும் பங்காளிவீடா கோவில்? தூரத்திலிருந்து வரும் வெளியூராருக்கு ஸ்வாமி இருக்கும் இடத்தைக் காண்பியாமல் கண்டதை யெல்லாம் உளறிக் கொட்டிக் காசு பிடுங்கி ஏமாற்றும் மோச இடங்களா கோயில்? லாட்டரி சீட்டு போட்டுப் பலரை ஏமாறவைத்துச் சிலருக்குப் பெருந்தொகை வாரிக்கொடுக்கும் சூதாட்ட ஸ்தலங்களா கோவில்? தாசிகளின் ஆட்டபாட்டங்கள் நடக்க சங்கீத சாலையா கோயில்? வண்ணானின் வெள்ளை யெல்லாம் வகை வகையாய் உடுத்திக்கொண்டு ஜதை ஜதையாகக் கும்பு கூடி நீ எப்படி, உன் சமுசாரமெப்படி, பிள்ளை குட்டி எப்படி, வேலை எப்படி, சம்பளமெப்படி என்று க்ஷேமங்களையும் காரியங்களையும் விசாரித்துக் கொள்ள கல்யாண வீடா கோவில்? அல்லது (Visiting) விஸிடிங் ஹாலா கோவில்? ஆடு கோழிகளை யெல்லாம் அறுத்துத் தொலைக்கும் ஜீவகொலைக் கூடமா கோவில்?

***

பந்தி போஜனசாலையா கோவில்? சோற்றுக்கடையா கோவில்? சுரண்டுகிற இடமா கோவில்? வயிற்றுப்பாட்டுக்கு வழிதேடுகிற இடமா கோவில்? ஜன நெருக்கத்தில் சிக்கி விழுந்து மிதிப்பட்டு அலறித் துவையலாகிற கோரணிச்சாலையா கோவில்? சாமியை உள்ளேபோய்ப் பார்க்கப் பணம் கொடுத்துச் சீட்டுப் பெற்றுக் கொள்ள ரயில்வே டிக்கட் வாங்குகிற இடமா கோவில்? அடுத்த வீட்டுக்காரன் பெண்டாட்டியை அழைத்து வந்தே - னம்மணீ - தாயே - பகவதி, எங்களை எப்போதும் ஒன்று சேர்த்துவை அம்மா என்று பிரார்த்தித்துக்கொள்வதற்கு காமக்கூடங்களா கோவில்?

***

தர்மகர்த்தனுக்கும் மடாதிபதிக்கும் சண்டை, மஹந்துக்கும் ஆச்சாரியர்களுக்கும் சண்டை, பாதிரிக்கும் உபதேசிக்கும் ஆகாது, பூஜாரிக்கும் கோவில் மானேஜருக்கும் ஆகாது, இவன் தலையை அவன் வெட்டிப் போடப் பார்க்கிறான், அவன் குடியை இவன் கெடுக்கப் பார்க்கிறான், ஒருவருக்கொருவர் ஓயாத வழக்கு, இப்படியெல்லாம் சண்டைபோட்டுக் கொண்டிருக்க மாமன் மச்சான் வீடா கோவில்? அல்லது சகலபாடி சண்டை, கொண்டான் கொடுத்தான் சண்டை இடவா கோவில்? மடாதிபதிகள் கண்டபடிசெலவழிக்க, மற்றவர்கள் வேண்டியவரை அப்பிக் கொள்ள, முன்காலத்தில் சம்பாதித்து வைத்த வீடா கோவில்? தர்ம கர்த்தன் பணத்தையெல்லாம் கொள்ளையிடுகிறான், கோவில் உடமைகளை யெல்லாம் விற்றுத் தின்னுகிறான், கோவில் வருமானமெல்லாம் வீட்டுச் செலவுக்குப் போகிறது, உண்டிப்

ஒரு மனிதனுக்குத் தலை நரைத்து வயது ஆக ஆக, மேன்மேலும் வாலிபனாய்த் தோன்ற மிகவும் விரும்புகிறான். ஆனால் முடிகிறதா அண்ணா?

பணங்களெல்லாம் கொள்ளை போகிறது, கோவில் நிலமெல்லாம் தன் நிலமாகிறது, கோவிலே குடியிருக்கும் சொந்தவீடாகி, அங்கேயே பெண்கள் மாதத்தீட்டு மாகிறார்கள், குழந்தைத் தொட்டிலும் அங்கேயே தொங்குகிறது, இப்படியாக இவர்கள் அந்த தர்ம சொத்துக்குத் தலைமக்களாய்ப் பிறந்தார்களா? அல்லது இவர்கள் அப்பா, அம்மா, சம்பந்தி சம்பாதித்து வைத்ததா? அவர்களை ஊட்டி வளர்த்து ஒய்யார மாப்பிள்ளையாய் வைத்துக்கொண்டிருக்க அவர்களுக்கு மெட்ராஸ் பாங்கியா கோவில்? அந்தக் கக்ஷி வரக்கூடாது, இந்தக் கக்ஷி நெருங்கக் கூடாது என்று மண்டையுடைத்துக்கொண்டு சச்சரவிட யுத்தக்களறியா கோவில்? அல்லது குஸ்திபிடிக்கும் கோதாவா கோவில்? இருபக்கமும் சண்டைகள் முதிர்ந்து பூஜைகள் நடவாதபடி கோவில் கதவுகளை மூடி சாமிகளையெல்லாம் நகைகளுடனே போலீஸ் காவல் போட்டு வைக்கவுமாய் இந்தப் படியாக அர்ச்சகர்களின்-பூசாரிகளின் பொக்கிஷசாலையா கோவில்?

***

அட கோணங்கிகளே! குளிக்கப் போய் சேற்றைப் பூசிக்கொள்ளலாமா? உங்களின் மண் பொன் பெண்ணாசைகளையெல்லாம் கோவிலிலா கொண்டுவந்து குழப்பிக்கொள்வது? நெருப்புக்கு முன்னே விளையாடலாமா? கோவில் என்றால் வணக்கம் வேண்டாமா? பயந்த தன்மை வேண்டாமா? மஹா மகத்துவமிக்க ஸந்நிதியாச்சுதே. அகிலமெல்லாம் படைத்துக் காக்கும் ஆதிமூர்த்தி எழுந்தருளியுள்ள புனிதமான ஸ்தலமாச்சுதே! நீங்கள் எவ்வளவு தான் ஆபாஸப்படுத்தினாலும் உங்களின் வாழ்வு கெடுமேயன்றி கோவிலின் பரிசுத்தம் என்றைக்கும் பரிசுத்தம் தான். பக்தர்களுக்கும் ஞானிகளுக்கும் அது பரவசப்படும் இடம்தான். கலக்கினும் தண்கடல் சேறாகுமோ? அரைக்கினும் சந்தனம் தன்மணம் நீங்குமோ? கோவிலுக்குப் போவதற்கு உள்ளத்துப் பக்குவத்தன்மையல்லவா பிரதானம். அந்தமுக்கியத்தைத் தெரிந்து கொள்ளாத உங்களின் மூடபுத்திக்காக விகடன் இரக்கத்தோடு கடவுளை நோக்கி இவர்களையெல்லாம் மன்னியும் சாமி அறியாமற் கெட்டழிகிறார்கள், மன்னியும் சாமி— என்று ஆண்டவன் முன்னே விழுந்து விழுந்து கும்பிடு போடுகிறேன். இனியாவது நல்ல புத்தி பக்தி வந்து திருந்துங்கள். ராம்! ராம்! சுபம்! சூ! சுவாஹா!!

அடுத்த கடையில் என்ன வேலை? அந்தக் கடையில் என்ன சண்டை? அங்கு என்ன மனஸ்தாபம்? அந்தக் கடையில் தன்னை வாவென்று அழைப்பவர் யார்? ஆனால் தனக்குத்தெரிந்த கடையிலோ உட்காருதல், சண்டை-கோபம்-அன்பு எல்லாம் அங்கே தான். அன்பு இருப்பதால்தான் அடிக்கடி சிறுசச்சரவு-சந்திப்பு. அன்பு குலைந்தால் அதுவும் அடுத்தகடை மாதிரியே. அங்கு போவோர் யார்? நண்ப! நீ அடுத்த கடைக்காரனாகாதே.

ஆசிரியருக்குக் கடிதங்கள்

எவரிடமிருந்து நான் அடிக்கடி பதில் கடிதம் எதிர் பார்ப்பேனே அவர் நான் எழுதியகடிதத்திற்கு ஒரு மாதம் கழித்துப் பதில் எழுதியிருக்கிறார். அதிலும் நான் கேட்ட நான்கு விஷயங்களில் இரண்டுக்கு மட்டும் பதில் அளிக்கிறார். அது பின்கண்டபடி :—

"தங்கள் கடிதத்திற்குப் பதில் எழுதப் பலகால் நினைந்தும் பயனற்றுப்போன தற்கு மன்னிக்கவும். எனக்குக் காலைமுதல் இரவுவரை வேலை சரியாய் இருக்கிறது. காலையில் இன்னொரு வேலையையும் ஒப்புக்கொண்டு செய்து வருகிறேன். அதற்கு உள்ள நேரமுங் காணவில்லை. ஆகையால் தங்களுக் குப் பதில் எழுத முடியவில்லை"—என்கிறார். இவர் நன்றாய்ப் படித்தவர்; நல்ல பதவியில் உற்சாகமாயுள்ளவர். இந்தக் கடிதத்துக்குப் பதில் எழுதினால் அவருக்குப் படிக்க நேரம் இராதென்று அஞ்சியே சிந்தையி லாழ்ந்தனன்.

இங்கிலாந்திலுள்ள ஜனங்களெல்லாம் அரசரையும் அவர் குடும்பத்தா ரையும் ஆவலோடு பார்ப்பார்களாம். அதுதான் அதிசயம்போ லிருக்குமாம். இந்தியாவிலோ ஒரு வெள்ளைக்காரராவது வெள்ளைக்காரியாவது வீதிவழி சென்றால், இந்தியர் விநோதமாய்ப் பார்ப்பார்களென்று ஒருவர் ஆங்கில நாவலில் எழுதியிருக்கிறார்.

லண்டனில் ஒரு கம்பெனியார் வாரந்தோறும் ஆறு எழு நாவல்கள் 300,400 பக்கங்கள் கொண்டதாய் 1923-ம் வருஷமுதல் வெளியிட்டு வருகிறார்கள்.

(தமிழ்நாட்டில் மொழிபெயர்ப்பு ஆசிரியர்கள்தான் பெருகிப்போ யிருக் கிறார்கள். சுயமாய் எழுதுபவர் ஒருசிலரே. அவர்களிலும் சிலர் காலமாய் விட்டனர். ப-ர்.)

என்னுடைய மனைவி தங்கள் பத்திரிகையைக் கரபூஷணமாய் வைத்தி ருக்கிறாள். முற்றிலும் படித்த பிறகு தான் என்னிடம் தருவாள் போலும்.

தமிழ்மக்கள் காசியாத்திரை போகும்போது ஒரு நாள் பம்பாயில் தங்கி இரண்டோரிடத்தைப் பார்த்துவிட்டு பம்பாய்ப் பட்டணத்தைப் பார்த்துவிட் டோமென்கிறார்கள். இரண்டு மாதமாய் ஒவ்வொரு நாளும் காலை மாலை முக்கியமான இடங்களைப் பார்த்தும், இன்னும் பல இடங்கள் எனக்குத் தெரி யாது. பம்பாய் சுமார் 14-லட்சம் ஜனத்தொகை கொண்டது. இந்தியா வுக்குத் தலைவாசல் பம்பாய் தான். ஜார்ஜ் அரசர் முடிசூட வரும்போது கடற் கரையோரமாகப் பெரிய மண்டபம் ஒன்று கட்டி அதற்கு (Gate of India) "இந்தியாவின் தலைவாசல்" எனப் பெயரிட்டிருக்கிறார்கள். பம்பாய் ஒரு சிறு தீவு. நாலைந்து மெத்தைக்குக் குறைவாக எந்தக் கட்டிடமும் கிடையாது. ஒரே கட்டடத்தில் பல கம்பெனிகளும், இல்லற வாசங்களும் உண்டு. என்றாலும் மாதம் ஒன்றுக்கு இருபதாயிரம் முதல் முப்பதாயிரம் ரூபாய் வரையில் வாடகை வருகிறது. பூமியின் கிரயமும் கட்டிடக் கிரயமும் மிக்க அதிகமென்னச் சொல்லவேண்டியதில்லை.

M. A. N. (பம்பாய்.)

பிரபஞ்சதரிசனம்



நமது மதக் கோட்பாடுகளையும், நாகரீகத்தின் லட்சியங்களையும் சிறுவர்களுக்குக் கற்பித்து அவர்கள் தத்தம் ஜாதிக்குணத்தைக் காப்பாற்றும்படி செய்தாலொழிய, வெகு பூர்வீகமாயுள்ள நமது நாகரீகம் இருந்த இடம் தெரியாமல் போய் விடும். இந்தியர் மேனாட்டுப் படிப்பைக் கற்று மேனாட்டாரைப்போல் நினைக்கும் சுபாவமுள்ளவர்களாகிக் கொண்டே போனால், தங்களுடைய ஜாதிச் சாடையே இல்லாமற் போய், தங்களின் பூர்வ சிறப்பை யிழந்து மேனாட்டாரின் சாயைபோல் ஆகி விடுவார்கள். இதைத் தடுக்கவே 1906-ம்வருஷத்தில் ஸ்ரீதாதாபாயின் அக்கிராஸனத்தின் கீழ் கல்கத்தாவில் காங்கிரஸ் கூடினபொழுது தேசீயக் கல்வியை ஆதரித்து ஒரு தீர்மானம் செய்யப்பட்டது. அதன் சார்பாக இரண்டொரு இடங்களில் சில பள்ளிக்கூடங்கள் ஏற்பட்டனவேனும் வெகுகாலம் நீடிக்கவில்லை. தீர்மானம் நிறைவேறி இன்றைக்கு 22-வருஷங்களாகியும் செய்யப்பட்ட முயற்சியோ வெகு கொஞ்சம்.

* * *

மேல் நாட்டாரின் சாஸ்திர அறிவை மேனாட்டாரின் அறிவு என்று சொல்லுவதைவிட நவீனகாலஅறிவு என்று சொல்வதே தகும். இப்பொழுது மேனாட்டார் என்னென்ன சாஸ்திரங்களில் என்னென்ன அறிவைப் படைத்திருக்கிறார்களோ அந்த அறிவை அவர்கள் 350-வருஷங்களுக்கு முன் படைத்திருந்ததில்லை. மனுஷ்யனுடைய அறிவுசீது எட்டாத ஒரு சக்தியின் ஸங்கல்பத்தால், சாஸ்திர ஞானம் ஒவ்வொரு பிரதேசத்திலும் கிளம்பி மற்றப் பிரதேசங்களில்கூட வியாபிக்கின்றது. ஜீவாத்மாவுக்கும் பரமாத்மாவுக்குமுள்ள சம்பந்தத்தைப்பற்றிய அறிவு இந்தியா, அரேபியா, பாலஸ்தீன் முதலிய கீழ்த்திசைத் தேசங்களிலேயே முதலில் உற்பத்தியாகிப் பிறகு மேனாடுகளில் வியாபித்தது. ஐரோப்பியர் போற்றும் இயேசு நாதர் நமது கீழ்த்திசையில் பிறந்து, கீழ்த்திசையாருக்கு இயற்கையாயுள்ள பகவத் பக்தியை உபதேசம் செய்தார். இவ்வாறு எல்லா அறிவுக்கும் மேலான ஆத்மஞானத்தை ஐரோப்பியருக்கு உண்டு பண்ணின கீழ் நாடுகள், இப்போது அதற்குப் பதிலாக லௌகிக அறிவை மேனாட்டாரிடமிருந்து கற்று வருகின்றன. இந்த லௌகிக அறிவு இக்கால அவசியத்துக்கு வேண்டியதே. ஆனால், இப்பொழுது இருக்கிற கல்வியமைப்பினது ஏற்பாட்டின்படி அது நமக்குக் கிடைப்பது வெகு துர்லபமா யிருக்கிறது.

* * *

பணக்காரர்கள் சிலர் சேர்ந்து ஒரு தொழில் செய்ய ஆர்வமுடைய

கையில் சரியாகப்பணம் வைத்துக்கொண்டு காபி கிளப்புக்குப் போவதில் அரை சேர் காப்பிக்குப் பதில் ஒரு சேர் காப்பி வந்து தெரியாத்தனமாய்க் குடித்து விட்டால், முன்பின் அறியாத இடத்தில் எப்படிக் கடன் சொல்வது?

வர்களாய் இருப்பதாக வைத்துக் கொள்வோம். எந்தத் தொழிலை எப்படிச் செய்கிறதென்பது அவர்களுக்குத் தெரிவதில்லை. **தொழில் செய்யும் அறிவு** ஏற்பட்டாலொழிய கல்வியைக் கற்றடையும் பயனென்ன? உத்தியோகங்கள் ஒன்றுதான் படித்த எல்லோருக்கும் பொதுவாயிருக்கின்றன. உத்தியோகங்களின் தொகை இத்தனை தானென்று கணக்கேற்பட்டுவிட்டது. குறித்த ஒரு தொகையினருக்குத்தான் உத்தியோகங்களின் மூலமாய்ப் பிழைக்க வழியுண்டு. மற்றவர்கள் இன்னது செய்வதென்று அறியாமல் தூங்கிவிழவேண்டி யிருக்கிறார்கள். சட்ட கல்வியைக் கற்று வக்கீலானவர்களில்பலர் அதில் அதிர்ஷ்டசாலிகளான சில வக்கீல்களின் அநுக்கிரகத்தை நம்பிக்கொண்டு அவர்களுக்கு ஒத்தாசையாக நின்று அந்த வகையில் ஜீவிக்கவேண்டியிருக்கிறது. ஆகையால் இவ்விதம் படித்துத் தேர்ந்தவர்களைத் தொழிற்றுறைகளில் பழக்கிவிட்டால், அவர்கள் சுயேச்சையாய் உண்டுடுத்து வாழக்கூடுமென்பதல்லாமல், நாட்டிற்கு நலத்தையும், செய்யக்கூடியவர்களாவார்கள். தேசீயக்கல்வியின் முக்கியமான நோக்கங்களில் இதொன்று. மற்றொன்று மேலே தெரிவித்த நமது பூர்வ நாகரீகப் பாதுகாப்பாகும்.

***

ஆனால், ஒரு வினா தோன்றலாம். சர்க்கார் உத்தியோக மொன்றே இப்பொழுது லட்சியமாக இருப்பதால், அதற்கு லாயக்கில்லாத தேசீயப் படிப்பு என்ன பிரயோஜனத்தைத் தருமென்று சிலர் சங்கை கொள்ளலாம். இத்தேசமொன்றில் தான் சர்க்கார் உத்தியோகமே கதியென்று படித்தவர்கள் நம்பவேண்டி யிருக்கிறது. பல தேசங்களில் ஜனங்கள் உத்தியோகத்தை எதிர்பாராமல் ஆயிரம் விதமான தொழில்களைச் செய்து கொண்டு சுகஜீவனம் நடத்தி வருகிறார்கள். தேசீயக் கல்வியின் பயனாக நாமும் அவர்களைப்போல நாளடைவில் ஆக முடியும். அப்படி ஆவதற்கு நமது ஜனங்களின் மனதில் புகுந்து இறைவன் முயற்சிப்பானாக.

II

இந்தத் தேசத்திலுள்ள பல உத்தியோக வர்க்கங்களிலும் "ஸிவில் ஸேர்விஸ்" என்ற வர்க்கமே பெருவாரியான சம்பளம் பெறுகிறது. அஸிஸ்டெண்ட் கலெக்டர், ஜில்லா கலெக்டர், ஜில்லா ஜட்ஜ், ரிவினியூ போர்ட் மெம்பர், நிர்வாக சபை மெம்பர் முதலிய பதவிகளை அவ்வர்க்கத்தார் அநேகமாக வகிப்பதுடன், வேறு சில இலாக்காக்களின் தலைமைஸ்தானங்களையும் வகிக்கிறார்கள். வட இந்தியாவில் கமிஷனர்கள், லெப்டினண்டுகவர்னர்கள் என்ற மகத்தான உத்தியோகங்களையும் அவ்வர்க்கத்தாரே வகிக்கிறார்கள். அவர்களுக்குச் சம்பளம், ரஜாப்படி, பிரயாணப்படி, கூடாரப்படி, ஜாகைப்படி என்ற பல செலவுகளுக்காகப் பெருந்தொகை செலவாகிறது. அவர்கள் ரஜா எடுத்துக்கொண்டு இங்கிலாந்துக்குப் போயிருக்குங் காலத்தில் அவர்களுக்குப்பதிலாக வேலை பார்க்க அநேகர் தேவையா யிருக்கிறார்கள். ஆகையால் 100-உத்தியோகங்களுக்கு 195-உத்தியோகஸ்தர்கள் வீதம் இருந்து வருகிறார்கள். அவர்களிற் பெரும்பாலோர் செய்யும் வேலையை அவர்களுடைய சம்பளத்தைவிடக் குறைந்த சம்பளத்தை வாங்கிக்

நமது தேசத்திற்குத் தற்காலம் வேண்டியதெல்லாம் உயர்ந்த சீலமுடைய சிலரைத் தலைவராகப் பெறுவது தான். —(ஸ்ரீ லஜபதி)

கொள்ளும் இந்தியர்கள் வெகு திற மையுடன் செய்து வருகிறார்கள்.

***

ஒரு உதாரணம் சொல்லுகிறோம். எந்த ஜில்லாவிலும் ஸப்கலெக்டர் அல்லது அஸிஸ்டெண்டு கலெக்டர் என்ற ஸிவில் ஸெர்விஸ் உத்தியோ கஸ்தரும் இருக்கலாம்; டிப்டிகலெக் டர் என்ற உத்தியோகஸ்தரும் இருக் கலாம். ஸப்கலெக்டருக்குள்ள அதி காரமெல்லாம் டிப்டி கலெக்டருக்கு முண்டு. அவர் செய்யும் வேலைகளை யெல்லாம் இருவரும் செய்து வருகி றார். ஆனால், ஸப்கலெக்டர் சொல்ப அனுபோக முள்ளவராகவும், டிப்டி கலெக்டர் முதிர்ந்த அனுபோக முள்ளவராகவும் இருப்பார். ஸப் கலெக்டர் அநேகமாக ஆங்கிலேயராக வும், டிப்டி கலெக்டர் இந்தியராகவும் இருப்பார்கள். வேலையும் அதிகார மும் இரண்டு பெயர்களுக்கும் ஒன்று தான். ஆயினும் அனுபோகத்தில் குறைந்த ஸப்கலெக்டர் அதிகமாக வும், அனுபோகம் முதிர்ந்த டிப்டி கலெக்டர் குறைவாகவும் சம்பளம் பெறுகிறார்கள். இத்தனை ஸப்கலெக் டர்களும் அஸிஸ்டெண்டு கலெக்டர் களும் இல்லாவிடினும், டிப்டி கலெக் டர்களைக் கொண்டு வேலையானது திறமையுடன் நடந்து விடுமென்பது நிச்சயம்.

***

1886, 1887-ம் வருஷத்தில் இந் தியாவிலுள்ள உத்தியோக வர்க்கங்க ளைப்பற்றி விசாரணை செய்து அறி விக்க நியமிக்கப்பட்ட கமிஷன் இந் நாடெங்கும் சென்று விசாரணை செய்து, ஸிவில் செர்விஸ் வர்க்கத்தி லுள்ள உத்தியோகஸ்தர்களின் தொ கையைக் ⅓ குறைத்துவிட வேண்டு மென்று சிபாரிசு செய்தது. பின் 1912-ம் வருஷத்தில் நியமிக்கப்பட்ட பப்ளிக் ஸெர்விஸ் கமிஷனோ ஸிவில் ஸெர்விஸ் உத்தியோகஸ்தர்களின் தொகையை இன்னும் அதிகமாக்கும் படி சிபார்சு செய்துவிட்டது. இந்த ஸிவில் ஸெர்விஸ் வர்க்கத்தார் தான் இந்தியாவைக் காக்கவல்ல இருப்புத் தூண்கள் என்று மதிக்கப்படுபவர் கள். இவர்கள்தான் இந்தியா ஆட்சி யில் ஸர்வாதிகாரமும் செலுத்துகிற வர்கள். அவர்களுடைய கட்டுப்பாட் டினாலேயே இந்தியர்களின் முன் னேற்றம் வெகு தூரத்திற்கு ஒதுங் கிக்கொண்டே போகிறது. அவர்க ளுடைய தொகை எவ்வளவு குறைகி றதோ அவ்வளவுக்கு இந்தியாவின் பணமும் வெளியே போகாது. இந்தி யர்களும் முன்னேறுவார்கள். ஆனால், இப்படி இவர்களின் தொகை குறை கிற விஷயம் நடக்கவோ, எதிர்பார்க் கவோ கூடியதல்ல. இன்னும் இவர் களின் தொகை பெருகுமே தவிர குறையுமென்று நம்புவது வீண் பகற் கனவு தான்.

ஜப்பான் தேசத்தில் விவசாயம், மாடு, குதிரை முதலியவைக ளைக் கொண்டு செய்யப்படாமல் மண்வெட்டி முதலிய கருவிகளைக் கொண்டு ஜப்பானிகளே வேலை செய்கிறார்கள். $7\frac{1}{2}$-ஏக்கருக்கு மேல் எவரும் பயிர் செய்வதில்லை. அப்படி ஏழரை ஏக்ரா பயிர் செய்வோ ரும் 100-க்கு மூன்று பேர் தான். ஒவ்வொருவரும் $2\frac{1}{2}$-ஏக்ராவுக்கே பயிர் செய்து தாங்களே உழைத்துப்பலன் அடைகிறார்கள். மனித னின் மலத்தை ஜலத்தில் ஊறவைத்துப் பிசைந்துவிட்டுப் பயிர்க ளில் ஊற்றி நல்ல எருவாக்குகிறார்கள். ஒழிந்த காலங்களில் கூலி வேலை செய்து லாபமும் அடைகிறார்கள். நமது பக்கத்திலோ?

ஆங்கில—தமிழ்க் கடிதங்கள்

(ஸ்ரீமான் எஸ். கிருஷ்ண ராஜு.)

Letter XII

My dear Gopal,

You, my dear friend, are placed far beyond the reach of mortal frailities and weaknesses which ordinary people cannot overcome. You do not know what it is, at one blow, to be deserted by a lovely and fascinating creature, and to fall a victim to the artifices of a villain, who hid the grin of cuuning beneath the mask of friendship. I hope you never may.

Life, my dear Gopal, has become insupportable to me. The spirit which burns within us is a porter's knot, on which to rest the heavy load of worldly cares and troubles; and when that spirit fails us, the burden is too heavy to be borne. We sink beneath it. You may tell the faithless Lalitha—Ah, that name! ****

P. Chandrasakaran.

12-ம் கடிதம்

எனதன்பான கோபாலா,

எனதருமைச் சிநேகிதனான, நீ சாதாரண ஜனங்களால் வெல்ல முடியாத அநேக மானிட துன்பங்களும், பலஹீனங்களும் உன்னை அணுகாமல் அதிக தூரத்தி லிருக்கிறாய். ஒரே க்ஷணத்தில் மிகவும் ரம்யமான ஓர் வஸ்துவினால் தள்ளப்பட்டு சிநேகிதம் என்னும் உறையின்கீழ் கொடிய வஞ்சனையை மறைத்து வைத்திருந்த ஒரு துஷ்டனுடைய சூழ்ச்சிகளுக்குப் பாத்திரனாவது எவ்வளவு கர்ன கடூரமாயிருக்குமென்று உனக்குத் தெரியாது. உன்னால் எப்பொழுதும் தெரிந்து கொள்ளவும் முடியாதென்று நினைக்கிறேன்.

எனது அரிய கோபாலா! வாழ்க்கையானது என்னால் சுமக்கக்கூடாததாகிவிட்டது. நம் உடலின் உள்ளிருக்கும் ஆத்மாவோ இப்பிரபஞ்சத்தில் எற்படும் கவலைகளும், துன்பங்களுமாகிய பாரத்தைச் சுமக்கக்கூடிய ஓர் பிரிமணைச் சுற்றைப் போலிருக்கிறது. அந்த ஆத்மாவானது தளர்ந்துவிட்டால் பாரம் சுமக்க முடியாததாகி விடுகிறது. அப்பொழுது நாம் அதன் கீழ் அமிழ்கிறோம். நீ என்னைக் கைவிட்ட லலிதாவிடத்தில் சொல்——ஹா, அந்தப் பெயர்! ****

 பி. சந்திரசேகரன்.

நாம் வீடுகளில் அடிமைகளாக இருந்துகொண்டு ராஜீயத் துறையில் சுதந்திர புருஷர்களாக இருக்கக்கூடுமென எதிர்பார்க்க முடியாது. (ஸ்ரீ. ல.)

நமக்குத் திடசித்தமில்லை. ஒரு கோப்பைத் தேத்தண்ணீரே நமது கோட்பாடுகளை யெல்லாம் இழக்கும்படி செய்கின்றதே! —(ஸ்ரீ. லஜபதி.)

ஹாஸ்ய ஸஞ்சீவினி

பகட்டு உறவு :—

ராமன் :—வாரும் மைத்துனரே! உங்கள் தங்கையிடம் க்ஷேமம் விசாரித்தானதா? அவள் மூலமாகத்தானே என் உறவு?

ராஜன் :—என்ன, நீங்கள் சொல்வது எதுவும் தெரியவில்லையே?

ராமன் :—எப்படித் தெரியுமப்பா? நான் காய்ச்சலில் துள்ளத் துள்ளக் கிடந்தபோது காபிகூட வேண்டாமென்று கோபித்துக்கொண்டு போன துரைசிங்கமாயிற்றே நீ! நோயாளியைக்காண இரண்டு மாதத்திற்குப் பிறகா வருகிறது? நான் 'போயிருந்தால்' அப்போதே வந்திருப்பீராக்கும்!

* * *

திட்டுச் சொல்லின் பொருள் :—

மனைவி :—நான் ஒன்று சொன்னால் உங்களுக்கென்ன அவ்வளவு கோபம் வந்துவிடுகிறது? எவ்வளவு திட்டுகிறாள் என் அண்ணன் மனைவி?

பண்டிதர் :—அந்த மூடனுக்கு ஒரு 'திட்டுச்சொல்'லின் பொருள் இத்தனை யென்று தெரியாது. எனக்கோ ஒவ்வொரு வார்த்தையிலும் எதெது 'குத்துச் சொல்' என்று எண்ணிக் கண்டுகொள்ளத் தெரியும். ஆனதால்தான் படியாத அவன் மனதில் தைக்காத ஒரு திட்டு எனக்கோ பெரிய ஈட்டிபோல் நெஞ்சிற் பாய்கிறது. இப்போது விவரம் தெரிகிறதா?

* * *

காமுவின் சமர்த்து :—

சேஷி :—நாங்கள் தான் ஏழைகள் நடந்து போகிறோம். பெட்டி பெட்டியாகப் பணம் வைத்திருக்கிற நீயும் ஏன் எங்களுடன் நடக்கிறாய்?

காமு :—ஐயோ அம்மா! நான் படும் கஷ்டம் உங்களுக்குத் தெரியுமா? வெளிக்குப் பெரிய பேர் தான். நேற்று அரிசிக்குக்கூட ரூபாய் இல்லாமல்,...

சேஷி :—ரூபா இல்லாமலல்ல; அந்த சமயம் காமுவை ஒருவர் கடன் கேட்டதால், அரிசி வாங்கக்கூடப் பணம் இல்லையென்று அவர் காதில் படும் படி சொல்லிவிட்டு, அவர் பார்ப்பதற்காக எதிர் வீட்டுக்கும் சென்று ஒரு ரூபா கடன் கேட்டு, அங்கு தர வந்ததையும் வேண்டாமென்று கண்ஜாடை காண்பித்துவிட்டு, கடன் கேட்டவரிடம் மறுபடிவந்து, அங்கும் ரூபா இல்லை யாம், அரிசி கடனுக்குத் தான் வாங்கவேணும் என்று சொன்ன சமர்த்து போலத் தான் இப்போது கால் வலிக்க நடந்து வருவதும் ஒரு சமர்த்தம்மா!

காமு :—என்ன சமர்த்தோ, அதை நீயே சொல்லு.

சீதா :—சொல்லித்தான் தெரியணுமோ? நீ வண்டியிலேறினால், எங்களையும் வாடகையின்றிச் சும்மா ஏற்றிக்கொண்டு சுமந்து போக வேண்டி யிருக்குமே என்று தான் நீ இப்படி மூக்கி மூக்கி நடந்து வருகிறாய்.

* * *

பாவியும் புண்ணியரும் :—

அய்யா :—திண்ணையில் குழந்தையைப் படுக்க வைக்காதே யென்று எத்தனையோ தடவை சொன்னேனே பாவி! குழந்தை கீழே விழுந்து அடி பட்டு ரத்தம் வருகிறதே சண்டாளி!

அம்மா :—நான்தான் பாவி. நீங்கள் புண்ணியசாலியாச்சுதே! பக்கத் திலும் இருந்தீர்களே! விழுமுன் குழந்தையைத் தூக்கி யிருக்கக் கூடாதா?

நமது அன்பர்களுக்கு அறிக்கை.

1. **டைம்பீஸ் பரிசு :**—இம்மாதக் கடைசியில் பரிசுச் சீட்டுகள் தக்கவர்களின் முன்னிலேயில் குலுக்கிப் போடப்பட்டு, எவரெவர்க்குப் பரிசு ஏற்படுகின்றதோ அவர்களுக்குத் தபால் செலவு அணு 5-க்கு வி. பி. யில் டைம்பீஸ் அனுப்பி வைக்கப்படும். அவர்களின் பெயரும் பிரசுரமாகும்.

2. **பஞ்சாங்கப் பரிசு :**—முன்பணம் செலுத்தியவர்களுக்கெல்லாம் நமது "ஆநந்த குணபோதினி" பஞ்சாங்கம் அனுப்பிவைத்துவிட்டோம். ஆபீஸ் வேலையதிகரிப்பால் பஞ்சாங்கம் தாமதித்து அனுப்ப நேர்ந்ததற்குப் பொறுத்துக்கொள்ள வேண்டுகிறோம்.

3. **பத்திரிகையின் அபிவிருத்தி :**—இதுகாறும் நமது பத்திரிகை **48**-பக்கங்களாகச் சில மாதங்களும், **56**-பக்கங்களாகச் சில மாதங்களும் வெளிவந்துகொண் டிருந்தது. இனி தடவைதோறும் **56-பக்கங்களுடன் வெளியிடுகிறதென்று தீர்மானித்திருக்கிறேம்.** ஆகவே, இந்த மூன்றுவது வருஷ வால்யமானது. (**56x 12**) **672—பக்கங்களுடன் கூடியதாகின்றது.** ஒரு ரூபா சந்தாவில், தபாற்செலவு அணு **மூன்றை** நீக்கினல், பாக்கியுள்ள அணு **13**-க்கு **672**-பக்கமுள்ள அரும்பெரும் நூல் நமது நேயர்களுக்குக் கிடைக்கின்றது. தமிழ் நாட்டில் ஒரு ரூபாய் சந்தாவுக்கு இவ்வளவு அதிகமான பக்கங்களுடன் வெளிவரும் பத்திரிகை நமது "**ஆநந்த குணபோதினி**" ஒன்று தான்.

4. **வேண்டுகோள் :**—நமது அன்பர்கள் பரோபகார்த்தமாய் வெளிவரும் இப்பத்திரிகையின் அபாரமான செலவுகளை நாம் தாங்கி நிர்வகிப்பதற்கு உதவியாய்ப் புதிய சந்தாதார்களைச் சேர்த்தனுப்பி, அதற்குரிய பரிசுகளேயும் பெற்றுப் பத்திரிகையின் அபிவிர்த்தியில் என்றும் சிந்தை செலுத்துமாறு மிகவும் கேட்டுக்கொள்கிறேம்.

பத்திராசிரியர்.

கிடைக்காததைக் கணக்கிடாதே.

எழுதினவரைக்குமே சொந்த சொத்து. கைக்கு வந்தவரைக்குமே தான்கண்ட சரக்காகும். நெஞ்சில் இருக்கிறது இருக்கிறது என்றல், அது மறைந்தும்—மறந்தும் போகத்தான் இருக்கிறதே தவிர, உனக்கு எழுத்தளவில் வந்து கடிதத்தில் தங்கி உதவக்கூடியதல்ல. எழுதினவரை லாபம். அநுபவித்தவரையில் 'சுகம்' விழித்துக் கொண்டிருந்தவரையில் வேலே செய்யும் பாக்கியம். பெற்றுக்கொண்டவரையில் குழந்தை. இனி நீ பின்பு பெறப்போவதையும் கணக்கிட்டு ஏமாருதே

ஸ்திரீகள் அடிமையாகவும், பிறரை அண்டியவராகவும் இருந்தால் ஆண் (மையுள்ள) மக்களைப் பெற முடியாது. —(ஸ்ரீ லஜபதி.)



பாரத ரமணிகளின் வித்வத்துவம்.

இகத்துக்கும் பரத்துக்கும், ஞானத்துக்கும், புத்தி, யுக்தி, ஸாகஸ, ஸாமர்த்திய குணங்களுக்கும் கல்வியே காரணமா யிருக்கிறது. நம் இந்திய நாடு மகா மேன்மை பொருந்தியது. ஆதி காலத்தில் ஸ்திரீ புருஷர்கள் ஸமமான கல்வி கற்று வந்தார்களென்பதற்கு எவ்வளவோ உதாரணங்களை எழுதலாம். ஸ்திரீகள் படியாவிட்டால் அவர்களின் ஜன்மம் வியர்த்தமே யாகும்.

எல்லோரும் அறிந்த ஒரு ஸ்திரீயின் பெயரைச் சொல்லுவோம். அவள் பெயர் லீலாவதி. பாஸ்கராசாரியருடைய மகள். இவள் சிறுவயதிலேயே விதவையானாள். தந்தையிடம் ஸகல கலைகளையும் கற்றாள். கணித சாஸ்திரத்தில் மகா நிபுணத்துவம் கொண்டிருந்தாள். கேள்வி கேட்ட க்ஷணமே ஒரு நிமிஷத்தில் கணக்கு செய்து மரத்து இலைகளின் தொகையைச் சொல்லிவிடுவாள். நமது நாட்டில் லீலாவதியைப்போல் பதியையிழந்தவர்கள் எவ்வளவோ பேர் இருக்கிறார்கள். அவர்களெல்லாம் வித்தியாவதிகளாய்விடின் தேசத்துக்கும் ஸமூகத்திற்கும் அநந்தமான உபகாரங்கள் செய்ய முடியும். லீலாவதியால் உண்டான கிரந்தம் இப்போதும் லீலாவதி என்ற பெயருடையதாய் வழங்குகிறது. போஜராஜனின் மனைவி பாநுமதி என்பவள் எக்ஷிணி வித்தையைக் கண்டுபிடித்தாள். ஜோதிஷம் தெரிந்த இன்னொரு பண்டிதை இருந்தாள். அவள் பெயர் கனா. அவள் காதலனின் பெயர் மிகிரன். இவ்விருவரும் இராக்காலத்தில் உட்கார்ந்துகொண்டு ஆகாசத்திலுள்ள நக்ஷத்திரங்களை யெல்லாம் எண்ணுவார்கள். பரணி எங்கு இருக்கிறது, கிருத்திகை இருக்கும் இடம் எங்கே என்று ஆராய்ந்தபடி அநேக இரவுகளில் கண்விழித்துக்கொண்டிருப்பார்கள். புதன், குரு, சனி முதலிய கிரகங்கள் ஆகாயத்தில் எங்கிருந்துகொண்டு மனிதர்களுக்கு மங்களாமங்களங்களைக் கொடுக்கின்றனவென்று அறிவதற்கு சிரமப்பட்டார்கள். கனையும் மிகிரனும் பிறகு விவாகம் செய்துகொண்டனர்.

கனையின் மாமனாரான வராகன் என்பவரை விக்கிரமாதித்தன் ஒரு

தேசிய சுதந்திர உணர்ச்சி ஏற்பட்டிருப்பதை ஆண் பெண் இருவருமாகச் சேர்ந்து போற்றி வளர்க்கவேண்டும். —(ஸ்ரீ லஜபதி.)

முறை நக்ஷத்திரங்களின் தொகையைச் சொல்லும்படி வினவினன். வராகன் புத்திசாலியா யிருந்தாலும் இதற்கு விடை சொல்லக்கூடாததா யிருந்தது. வராகன் மனவருத்தத்துடன் இருப்பதை கனை யறிந்து மாமனாரை ஸமாதானம் செய்து கேள்விக்கு உத்தரம் எழுதிக்கொடுத்தாள். வராகன் ஸபையில் அதைப் படித்தும் அரசன் ஆச்சரியமடைந்து எப்படி அதைக் கண்டுபிடித்தாய் சொல்லு என்றான். வராகன் அரசனை நோக்கி, ஐயா இதற்கு சமாதானம் என் மருமகள் சொல்லுவாள் என்றான். விக்கிரமாதித்தன் கனையின் பாண்டித்யத்தைக் கண்டு மெச்சி அவளை ஸபையில் பத்தாவது ரத்னமாய் இருக்கும்படி அநுக்கிரகித்தான். கனை தீர்க்ககாலம் உலகத்தி லிருக்கவில்லை. அவள் மாமியார் மாமனாரிடத்தில் மகா பிரீதியா யிருந்தாள். கனை சீக்கிரத்தில் உலகை விட்டு நீங்கினாள்.

போஜ ராஜன் காலத்தில் அநேக பண்டிதைகள் இருந்தனர். அக்காலத்தில் குயவனுடைய மனைவியான **தேவியும்,** வேடன் பெண்சாதியும் பிரஸித்த கவிகள். பிராமண குமாரிகளும், மற்ற வர்ணத்து ஸ்திரீகளும் வித்தியாவதிகளா யிருந்தனர். பூர்வ காலத்தில் ஸ்திரீகள் வேதம், சாஸ்திரம் முதலியவைகளைப் புருஷர்களுடன் ஸமமாய் அத்யயனம் செய்வார்கள். யாஞ்ஞவல்கியர் வேதத்திலுள்ள ஞான காண்டத்தை ஸ்திரீகளுக்கு உபதேசம் செய்திருக்கிறார். ராஜா பிரதானனுடைய மகளான **ஸுலபா** என்பவள் வித்தையிலும், குணத்திலும், புத்தியிலும் தனக்குச் சரியான வரன் இல்லாததால் கன்னிகையாகவே இருந்து ஸன்யாசினியானாள். இவள் அதிசீக்கிரத்தில் பிரம்ம ஞானியுமானாள். இவள் ஒரு முறை ஜனக மகாராஜன் ஸபைக்குச் சென்று அவருக்குப் பிரம்ம விசாரத்தை உபதேசித்தாள். மகா பாரதம் சாந்தி பருவத்தில் அவள் உபாக்கியானம் விவரமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. **மாபாவதி** என்பவள் காசி ராஜனுடைய மகள். மகா வித்யாவதி. ஸ்கந்த புராணம் பிரம்மோத்ர காண்டத்தில் இவளைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. **வேதவதி** குசத்துவ ராஜனுடைய மகள். அவள் விவாகமில்லாமல் யோகினியாய் இருந்தாள். தேவீபாகவதத்தில் 9-வது ஸ்கந்தம் 15-16-வது அத்யாயங்களில் அவளுடைய உபாக்யானத்தைப் படிக்கலாம்.

(தொடரும்.)

சகோதரி - மனோரஞ்சனி தேவி.

கோபித்துக்கொள்ளும் அநேகர் தங்கள் மீதுள்ள பெரிய குற்றத்தை மட்டும் ஏனோ அறிந்துகொள்ள மாட்டேனென்கிறார்கள்?

பெண்களின் சண்டை ஒரு நிச்சயமுள்ளதல்ல. நாளைக்கு ஒன்று கூடிக் கொள்வார்கள். புருஷர்கள் தான் விரோதத்தை வளர்ப்பவர்கள்.

விவாகம் என்னவோ வெகு உல்லாஸமாகத்தான் நடந்தேறியது. அப்பால் புறப்படுகிறதப்பா கலக மனஸ்தாபக் கோணல்களெல்லாம்!

ஸ்திரீகள் இஷ்டப்பட்டால் மனிதரைவிட அதிகமாக உதவி புரிவர்.

மார்பு வியாதியால் அவஸ்தைப்படுவோர் தோல் பதனிடும் கிடங்குகளில் வேலை செய்தால் வியாதி பறந்துவிடும் என்கிறார் டாக்டர்.

எண்ணாயிரம் வருஷங்களுக்கு முன் எகிப்து தேசத்தாரால் தான் கண்ணாடி முதல் முதல் செய்யப்பட்டது.

ஸ்திரீகள் அடிமையாக வாழும் நாட்டில் ஆண்மக்களுக்கு சுயேச்சையில்லை. பெண்களின் கண்ணீர் நிற்கும் வரையில் விடுதலை யில்லை.

தெரு வியாபாரிகள்

தெரு வியாபாரிகள் தங்கள் வேலையில் மிகவும் ஜாக்கிரதையாய் இருப்பவர்கள், தந்திரமும் புத்தி நுட்பமும் உள்ளவர்கள். ஆனாலும் என்ன, ஐயோ பாவம்! அவர்கள் பரம ஏழைகள். அவர்களிடம் தான் பண்டங்களை பலரும் விலை குறைத்துக் கேட்பார்கள்; தடபுடலான பெரிய கடைகளிலோ கேட்ட விலையைக் கொடுத்துவிட்டு நயமாக வாங்கியதாயும் நினைத்துக் கொள்வார்கள்! அங்கங்கே தெருக்களில் சில்லறைக் கடைகளை வைத்துக் கொண்டு நாளை ஓட்டுகிற ஏழைகள் எத்தனை பேர்! உயிரைக் காப்பாற்றுவதற்காக இவர்கள் படுகிற கஷ்டமும் துன்பமும் சொல்லிமுடியா. கைக்கு எட்டியதை வாயில் போட்டுக் கொண்டு பரிதாபமான பிழைப்புப் பிழைக்கிறார்கள். ஒரு நாள் மப்பும் மந்தாரமுமா யிருந்தால் அன்றைக்குப் பட்டினியாகத் தான் இருக்கவேண்டும். வாயுள்ள பிள்ளை பிழைக்கு மென்பதுபோல், இவர்கள் ஜீவிக்கிறது வாயினாலேதான் என்று சொல்லவேண்டும். எப்படியெனில், தங்களுடைய சாமான்களைப் பார்வைக்கு அலங்காரமாய்ப் பரப்பிக் கொண்டு, இனிப்பான சாதுரியப் பேச்சிகளினால் தெருவில் போகிறவர்களைத் தந்திரமாக இழுத்துத் தங்கள் பொருள்களின்மேல் கவனம் செல்ல அவர்களுக்கு ஒரு நோக்கத்தை உண்டுபண்ணி, அதன் பிறகு ஏமாற்ற முயன்று ஒன்றுக்கு நான்குபங்கு அதிக விலைசொல்லி அவர்களை எம்மட்டுக்கும் ஏமாற்றலாமோ அம்மட்டும் ஏமாற்ற முயன்று அத்தன்மையான மோசவியாபாரத்தினால் வரும் அற்ப லாபத்தையடைந்து காலக்ஷேபம் செய்கிறார்கள். அவர்களுடைய தப்பிதங்களைக் குறித்துப்பேசு முன்பு, வயிற்றைக் காப்பாற்றுவதற்கு அவர்கள் எவ்வளவு சிரமப்படுகிறார்களென்று பார்க்க வேண்டாமா? அவர்களுள் அநேகர் அந்தத் தொழிலைக் கொண்டிருப்பது வேணுமென்றல்ல; அவர்களையு மறியாமல் விதிவசத்தால் அந்தக் கதி அவர்களுக்கு நேரிட்டிருக்கிறது. நான்கு நாளைக்கு அடர்த்தியாய் மழை பெய்யுமாயின் அவர்கள் குடும்பமும் குஞ்சுகளும் படும் துன்பமும் கஷ்டமும் தெய்வத்திற்குத்தான் தெரியும்.

அநுபவம் முந்தியா? சாஸ்திரம் முந்தியா?

அநுபவத்திற்கு வந்து ஒப்பமுடிந்ததான ஒன்றைத் தான் சாஸ்திரம் என்று பிறகு அமைத்துள்ளார். சாஸ்திரம் என்பதெல்லாம் முன் அநுபவித்துக் கண்டறிந்த சங்கதிக்கே சொல்லப்படுவது. புதன்—சனிக்கிழமைகளுக்கும் ஆண் மக்களுக்கும் என்னவோ ஒரு சம்பந்தமிருப்பதை அநுபவத்தை கண்டு அக்கிழமைகளில் எண்ணெயிட்டுக்கோள் என்று சாஸ்திரப்படுத்தினர். இவ்விதமே செவ்வாயையும் வெள்ளியையும் பெண்கள் எண்ணெயிட்டுக்கொள்ளக் குறித்தனர். நோய் டலப்படவைக்கிற அமாவாசையில் ஒரு வேளைப் புசிப்புடன் ஜாக்கிரதைப்படும்படி அத்தினத்தை விரத நாளாக்கினர். இப்படியே சாஸ்திரம் என்பதெல்லாம் நமது முன்னோர் கண்ட நீண்டகாலத்தின் அநுபவங்களே.

சென்றமாதம்

"அந்த வெட்கத்தை யாரோடே சொல்லுகிறது"

ஆலயப் பிரவேச அவதிகள்.

என்பதாக, நமது கோவில் என்று ஆவலுடன்பகவானைச் சேவிக்கச் சென்றால், கோவில் ஊழியர்கள் வெளியில் பிடித்துத் தள்ளிச் செய்யும் ஹிம்ஸைகள் ஒரு பெரிய அக்கிரமம். அதிலும் கிராமவாசிகளாக இருப்பினோ அவர்களைப் படுத்தும்பாடு அவர்களை மனித ஜன்மமாக மதிப்பதையே காணோம்! "திராவிடன்" ஆசிரியர் திருவண்ணாமலைக் கோயிலிலே தம்மை உட்செல்லவிடாது தடுத்தவர்கள் மீது வழக்கெடுத்து இருவருக்கும் நூறு ரூபாவீதம் அபராதம் விழச்செய்தார். இவரைப் போல எல்லோருமே கோர்ட்டுக்குப் போக முடிகிறதா? பிராமணர் முதற்கொண்டு பட்டிக்காட்டான்வரையில் யாவருமே தான் இந்தப் பாடு படுகிறார்கள்.

***

"அதிகாரிவீட்டுக்கோழிமுட்டை குடியானவன் வீட்டு அம்மிக் கல்லை உடைத்த தாம்"

கோயில் என்றால் அத்தனை சாமான்யமா?

என்பது ஒரு பழமொழி. அதிகாரி வீட்டுக்கு அவ்வளவு பலம் ஏற்பட்டுவிடுகிறதாக்கும்! இதோ பாருங்கள்! அஸ்ஸாம் கவர்ன்மெண்டார் 12-வருஷங்களுக்கு முன்னே துர்க்காதேவியின் ஆலய மொன்று கட்டிக் கொள்ள நிலம் கொடுத்து, கோவிலும் பூஜையும் எல்லாம் ஏற்பட்டு நடந்து கொண்டிருக்கையில், இப்போது அந்தக் கோவிலை இடித்துவிட்டு நிலத்தைத் தங்களுக்குக் கொடுத்து விடும்படி நோட்டீசு தந்திருக்கின்றனர். ஆ! கட்டிய கோவிலை இடிப்பதா? இது அதிகாரிவீட்டுக் கோழிமுட்டையின் பலம்போல வாக்கும்!

***

"கொண்டவனே தொண்டையைப் பிடித்தால் பெண்டென்ன செய்வாள்?"

"கொண்டவன் சீறினால் கண்டவனுக் கெல்லாம் இளக்காரமல்லவோ?"

என்பதாக, லாகூரின் பக்கத்திலே ஒரு பெண்ணைத் தாய் வீடு போய் விடும்படி அவள் கணவன் துரத்தவும், அதற்கு அவள் தாய்வீடு செல்ல மறுத்து ஒரு கிணற்றில் குதித்துவிட்டாள். அவள் நாயகனும் பழய ஆசையோடு தானும் கிணற்றில் குதித்து அவளை எடுக்கப் பார்த்தும் அதற்குள் உயிர்போய் விட்டது. இப்போது எவரை அதிகாரம் செய்வது? ஸகலமும் கணவனே யென்று நம்பியுள்ள மனைவியைத் தாய்வீடு போகும்படி துரத்துகையில், அந்தப் பெண்ணின் மனம் படும்பாடு, இந்தப் 'புருஷக்கட்டைகள்' பெண் ஜன்மமாகப் பிறந்துப்

நம் ஸ்திரீகளை அவர்களுக்குள்ள சுதந்திர நிலையில் வைத்து அவர்களுக்குள்ள சுதந்திரத்தைக் கொடுங்கள். —(ஸ்ரீ லஜபதி.)

பட்டால்தான் தெரியும். 'படித்துக் கெட்ட கட்டை'களிலும் பலர் இப்படித்தான் துன்புறுத்துகிருர்கள்!

***

இங்கிலாந்தில் சைமன் கமிஷன்.

"நிஜத்தைச் சொல்லி நெடுந் தூரம் போக வேண்டும்" என்பது உலகவாக்கு. இந்தியா முற்றிலும் பஹிஷ்கரிக்கப்பட்டுப்போன "சைமன் கமிஷன்" இங்கிலாந்துக்குப் போனதும், தங்களை இந்தியர்கள் வெகுவாய் வரவேற்று ஆதரித்தார்களென்றும், 'கமிஷன் பஹிஷ்காரம்' குலைந்து விட்டதென்றும் அங்கு தெரிவித்துள்ளார். இவ்விதப் பொய்யானது மிகவும் ஸமத்காரமானசாதுர்யமாகும். ஒருவன் தன் கருத்தை ஏற்றுக் கொள்ளாவிடினும், அவன் அதற்கு ஒப்புக்கொண்டானென்றே ஊர் முற்றிலும் சொல்லித் தன் வார்த்தையையே எல்லோரும் நம்பச் செய்து விடும் சங்கதியாக இந்தக் கமிஷ்னின் பேச்சு இருக்கிறது.

***

பார்டோலி வரிகொடாத இயக்கம்.

"எந்த வாக்குப் பொய்த்தாலும் சந்தை வாக்குப் பொய்க்காது" என்பதாக பார்டோலி என்ற இடத்தில் ஜனங்கள் அதிகமான வரி கொடுக்க மறுத்துவிட்டு, தங்கள் சொத்துக்களை அரசினர் ஜப்தி செய்தாலும், முடிவில் தங்களுக்கே வெற்றி ஏற்படுமென்று நம்பி நிற்கிருர்கள். இந்த சந்தை வாக்குப் பொய்க்காது என்பது உண்மையானுலும், அதற்கு ஜனங்கள் படவேண்டிய பாடோ மனித சக்தியில் சகிக்க முடியாததாக ஆகிவிடும். இவ்வளவுக்கும் துணிந்து விட்ட பார்டோலியிலுள்ளோரது மனவுறுதி நாட்டிற்கு நல்ல படிப்பினையாகும். இந்த இயக்கத்துக்கு வலது கை போன்றிருந்தவரான ஸ்ரீ ரவிசங்கரைக் கைது செய்து 5-மாத கடினகாவல் விதித்தனர். இன்னும் சிலர் கைது செய்யப்படுவராம். எருமைகள் முதல் யாவும் ஜப்தி செய்யப்படுகினறன. இனி என்னென்ன ஸம்பவங்கள் நேருமோ!

***

அநுபவக் களஞ்சியத்தின் தேக நிலை.

"நல்லாரை நாவிலுரை" என்பார்கள். மஹாவிகடதூதன் பத்திரிகையின் ஆசிரியர் ஸ்ரீமான் இராஜேந்திரம் பிள்ளை அதிக விருத்தாப்பியத்துடன் மிக்க பிணியாய், பேசவும் சக்தியற்ற நிலையில் கனத்த இருமலில் பாயும் படுக்கையுமாய் உள்ளார். பத்திரிகையும் நின்றுபோயது. 42-வருஷப் பத்திராசிரியராவர் இவர். நன்ருக ஸம்பாதித்து நன்ருக வாழ்ந்த சீமான்.

அவர்கள் இருவரும் முன்பு நண்பர்களே. அந்தப் பாழும் கௌன்ஸில் பதவிக்காகப் போட்டி போட்டு நின்று இப்படி விரோதிகளானுர்கள்!

வீணனுக்கும் பிடிவாதப் பேயனுக்கும் தொண்டை கிழியக் கத்தி புத்தி சொல்வது வீணே. அதைவிட ஒரு குட்டிச் சுவருக்குப் புத்தி சொல்லலாம்.

இங்கிலாந்தில் 'வாட்ஸ் வர்த்து' என்னுமிடத்தில் ஒரு பூனை கோழிக் குஞ்சுகளை வளர்க்கிறது. எல்லாமுமே மனதிருந்தால் நடக்கும்.

ஒரு தினத்தின் மூன்றுவேளைப் புசிப்பை இரண்டு வேளையாகச் சுருக்கி விட்டால், அப்பொழுது நல்லபசியும் ருசியுமாய் ஜீரணசக்தியுடன் உண்ணலாம்.

32-கோடி ஜனங்கள் அடங்கிய இத்தேசத்தின் பெருமை எங்கே? நாம் செய்வது என்ன?

—(ஸ்ரீ லஜபதி.)



“ இந்திய மாதா ”

மெஸர்ஸ் கே. எஸ். முத்தையா கம்பெனியாரால் பதிப்பிக்கப்பட்ட “இந்திய மாதா” என்ற நூல் வரப்பெற்றோம். இது மிஸ் மேயோ என்ற அமரிக்கா கன்னியொருத்தி எழுதிய நூலின் சங்கிரகமான மொழிபெயர்ப்பாகும். இந்தியர்களைப்பற்றி அந்தக் ‘குப்பைச் சிமாட்டி’ கண்டபடி கேவலப்படுத்தி எழுதியிருப்பதைத் தமிழ் அறிந்தோர் உணரும்படி செய்தற்கு இந்த நூல் அதிக உபயோகமானது. நமது குற்றங்களும் தவறுதல்களும் நமக்குத் தெரிவதில்லை. பிறருக்கோ அதுதான் முதலில் அவர்களின் கண்களில் தென்படுகின்றது. அந்தப் பிழைகள் இன்னின்னவென்று அறிந்து நம்மைத் திருத்திக்கொள்வதற்கு இந்தத் தூஷணைகள் நமக்கு ஒருவாறு சகாயமே செய்கின்றன. அவ்விதம் நம்மை ஒருவாறாக ஒழுங்குபடுத்திக்கொள்ளும் நோக்கத்துடனும் இந்தத்தமிழ் மொழிபெயர்ப்பு வெளியிடப்பட்டுள்ளது. பின்னும் ஒருவிஷயம்; அன்னியரது கண்கள் நமது நாட்டையும், நமது மத ஆசார ஸம்பிரதாயங்களையும் எவ்வாறு நோக்கி எப்படியெப்படி அபிப்பிராய பேதம் கொள்ளுகின்றனரென்றும் கண்டுகொண்டு அவர்களின் பேதமைக்காகப் பரிதாபப்படவும் இந்நூலால் கூடும். இதில் பாரதமாதாவின் ரூபசித்திரம் இத்தூஷணைகளுக்காக மிக்க சோகமடைவதுபோன்ற தோற்றத்துடன் பல வர்ண மைகளில் அமைந்துள்ளது. விலை ரூ. 1½.

[இதுவும், மற்ற எல்லாவித தமிழ் நூல்களும் “ஆநந்த குணபோதினி” ஆபீஸில் கிடைக்கும்.]

நூலாசிரியரைப்பற்றி.

எழுதிக்கொண்டிருக்கையில் எவராவது வந்து விட்டால், அதனால் தன் வேலை கெட்டாலும் வந்தவருடன் பேசி அந்த உல்லாஸத்தில் தன் மனதின் களைப்பைத் தீர்த்துக்கொள்கிறார். எவரும் இல்லாதபோதோ தன் எழுதுகோல் நேசனைத் துணையாகக்கொண்டு விஷயங்களை அழகுபெற வரைவதில் கருத்தைச் செலுத்துகிறார். ஏகாந்தத்தில் எழுதுகோலுடனே பரவசம். அப்பொழுது ஒரு நூலின் சிருஷ்டி முயற்சி. பிறர் வந்துவிடிலோ அச்சமயம் தனது களைப்பை ஆற்றும் முயற்சி. நல்லது கெட்டது எதையும் தனக்கு ஒரு காரியப்பொருளாய்த் திருத்திப் பதுக்கி அநுகூலப்படுத்திக்கொள்ளும் பக்குவ நுட்பம் நூலாசிரியருக்கு உண்டு. நீ அவரை ஏதாவது திட்டு. உடனே அவர் எழுதும் கதையில் அது வந்துவிடும்!

“ஆநந்த குணபோதினி”

விபவ௵த்திய வைகாசிமீ பஞ்சாங்கம்.

	இங்.	தமிழ்.	வார.	திதி	நக்ஷ.	விரதாதி முதலியவை.
	14	1	தி	நவ 17-46	சத 24-6	சூன்ய திதி
	15	2	செ	தச 13-6	பூட் 21-8	ஏகாதசி திதி
	16	3	பு	ஏகா 6-54 உப 52-28	உட் 16-39	ஸர்வைகாதசி, அவமா
	17	4	வி	திர 50-55	ரேவ 10-54	பிரதோஷம், மாஸ சிவராத்திரி
	18	5	வெ	சசி 41-47	அசு 4-14 உப 52-46	
	19	6	ச	● 32-26	கிரு 49-49	கிருத்திகா விரதம், அமாதிதி
	20	7	ஞா	பிர 23-15	ரோ 42-52	கலிகி - பவுத்த - ஜயந்தி ; திதி துவ யம், கரிநாள், சந்திர தரிசனம்
மேமீ	21	8	தி	துவி 14-42	மிரு 36-38	திரிதியாதிதி, மிதுனம் சுபம், மிது ஞயனம் [19-1 ஜில்ஹேஜ்மீ 1௳
	22	9	செ	திரி 7-10	ஆரு 31-29	
	23	(5—3) 10	பு	சது 0-54 உப 55-18	புந 27-50	அவமா
	24	11	வி	ஷ 53-20	பூச 26-0	ஷஷ்டீ உபவாசம்,
	25	12	வெ	ஸப் 52-19	ஆயி 25-58	சிங்கப்பெருமாள்
	26	ரிஷபமீ 13	ச	அஷ் 53-13	மக 27-47	{ கருட
	27	14	ஞா	நவ 55-52	பூர 31-25	{ சேர்வை
	28	15	தி	தச 59-59	உத் 36-37	மிதுனம் சுபம்
	29	16	செ	ஏகா. 60-0	ஹஸ் 43-2	சிங்கப்பெருமாள் கோயில் ரதம், கரி நாள், திருதினஸ் பிருக்
	30	17	பு	ஏகா 5-13	சித் 50-16	3-4-க்கு கத்திரி நிவர்த்தி, ஸர்வைகா
	31	18	வி	துவ 11-11	ஸ்வா 57-56	பிரதோஷம் [தசி, கரிநாள்
	1	19	வெ	திர 17-30	விசா 60-0	நம்மாழ்வார் சாத்துமுறை, சதுர்தசி
	2	20	ச	சசி 23-54	விசா 5-40	கஞ்சி கருடசேர்வை, அதிதி [திதி
	3	21	ஞா	○ 29-56	அநு 13-13	சந்திரக்ரஹணம் - உதயாதி 25-11 முதல் 34-32 வரை
	4	22	தி	பிர 35-22	கே 20-18	ராஜா பிறந்த நாள் லீவு
	5	23	செ	துவி 39-59	மூல 26-41	சங்கடசதுர்த்தி
ஜூன்மீ	6	24	பு	திரி 43-36	பூரா 32-4	ஸ்ரீ வரதர் ரதம்
	7	25	வி	சது 46-4	உரா 36-20	
	8	26	வெ	பஞ் 47-13	ஶ்ரவ 39-22	
	9	27	ச	ஷ 46-58	அவி 41-2	
	10	28	ஞா	ஸப் 45-14	சத 41-14	
	11	29	தி	அஷ் 42-3	பூட் 40-0	
	12	30	செ	நவ 37-28	உட் 37-22	
	13	31	பு	தச 31-35	ரே 33-25	மிதுனரவி 59-36, தசமிதிதி

கு ஜ	கு ரு	ரவி சு ரா	பு
—	15உக்கு		—
	ச கே		

“ஆநந்த குணபோதினி” பிரஸ், நெ. 302, தங்கசாலைத் தெரு, சென்னை.